அறியண

©

JL

APR 5 1907

Registered No. M—607.

# THE ARYAN.

# ஆரியன்.

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

1906௵ நவம்பர் டிஜம்பர்மீ

புத்தகம் 1 } பராபவ௵ கார்த்திகை மார்கழி௴ { இலக்கம் 4,5.

இதிலுள்ள விஷயங்கள்.


நவம்பர் மாதத்திய விஷயம்.

| | |
|---|---|
| விநாயகமூர்த்தி ... ... | 101 |
| பக்தி ... ... ... | 1 5 |
| நவீநகதை ... ... | 107 |
| சாதி ஒருமை ... ... | 111 |
| முனையடுவார் சரித்திரம் ... | 119 |
| இராமச்சந்திர ... ... | 183 |
| தத்துவஞானம் ... ... | 125 |
| சுகபிரம்மரிஷி ... ... | 128 |

டிஜம்பர் மாதத்திய விஷயம்.

—(0)—

| | |
|---|---|
| ஜகத்குரு சங்கராசாரியாரின் அவதாரலீலை ... ... | 133 |
| கருணை நீதி சீதாலட்சுமி ... | 134 |
| ஸ்ரீ கிருஷ்ணன் ... ... | 139 |
| ஆத்மாநந்த விவேகம் ... | 142 |
| என் தலைவிதி ... ... | 145 |
| அதிக ஆசை மிகு துக்கம் ... | 148 |
| இந்தியாவின் தற்கால நிலைமை | 152 |
| அந்நாவை தலையார் கும்பகோணம் | 156 |
| சரீரம் ... ... ... | 157 |
| பரமஹம்ச வேதாசிவேந்தரர் ... | 161 |


சுதேசபாஷா பத்திரிகைகள். II.

Printed and Published by the Proprietor,
C. S. RATHAKRISHNA IYER, at the ARYAN PRESS,
No. 3 Chakrapaniswami South Gate Kumbakonam.

14531

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 9 MAY 1907 MADRAS

# ஆரியன்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

புத்தகம் 1. | 1906-ஆம் நவம்பர் மீ | இலக்கம் 4.



## விநாயகமூர்த்தி.

விநாயகமூர்த்தியானவர் முக்கியமான உபாஸனா மூர்த்திகளிலொருவர். இவர் பூஜை பாரசிகதேச விவாதத்திலும் நடக்குமாயின், இவரது மகிமையைக் கூறவும் வேண்டுமோ? விநாயகருடைய சரித்திரங்களைப் புராணங்களிற் பலவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இப்போது நாம் அவரைப்பற்றிய ரகஸியார்த்தங்களைமாத்திரம் கூறுவோம்.

மஹாரிஷிகள் விநாயகரை, ஓங்காரமென்கிற, பிரணவஸ்வரூபமாக பாவித்தார்கள். நமது மந்திரங்களனைத்திற்கும், காரணமாயும் வேதத்தின் ஸாரமாயும், ஈச்வரனுக்கு இருப்பிடமாயும், பிரம்மவிஷ்ணு ருத்திரனென்னும் திருமூர்த்திகளின், ஸ்வரூபமாயும், விளங்குகிற ஓங்காரத்திற்கு, பிரதிநிதியாக கணபதியை உபாஸிக்கிறோம். எங்ஙனமெனில் (ஓம்) என்னும் அக்ஷரமானது இந்தியர்களின் பாஷைகளில் அநேகமான ஒரே வடிவமாயிருக்கிறது. நாகரத்திலும் ஏறக்குறைய இரண்டெழுத்திற்கு சமமாகவே யிருக்கிறது. இவ்வெழுத்தை யானைமுகத்திற்குச் சமமாகக் கூறலாம். இன்னும் யானையினுடைய வைகரி வாக்கானது, ஓங்காரஸ்வரத்தை யொட்டியே இருக்கிறது: யானை, கனைக்குமாயின், நாதத்தொனிபோல் இருக்குமென்று யோகிகள் கூறுகின்றார்கள். பிரம்மாந்திரத்தில் பிராணாயாமத்தால் நாதானுஸந்தானம் செய்தவர்கள் கர்ஜனையே உபமானமாகக்கூறுவது வழக்கம். ஆனதினால் கஜத்தின் முகத்தை கணேசன் அடைந்ததற்கு தாத்பரியம் யாதெனில், தான் பிரணவரூபமான முகத்தோடு கூடிக்கொண்டிருக்கிறேன், என்று பக்தர்கட்கு பிரகடனம் பண்ணுகிறார். முகத்தில் ஒற்றைக் கொம்பில்லாதது பிரணவத்தின் சுழிபோலிருக்கிறது.

### வயிறு.

அவருக்கு பெரியவயிரும் இருக்கிறது. இதற்குக் காரணம் யாதெனின், இவ்வுலகமனைத்தும், தன்னிடத்திலடங்கியிருக்கின்றனவென்பதைக் காட்டுகிறது. அங்ஙனஞ்சுருதியுங் கூறுகிறது.

ஸம்யுக்தமேதத்க்ஷரமக்ஷரஞ்சவ்யக்தா
வ்யக்தம்பரதேவிச்வம்மீச;

வியக்தமாயும் (வெளிப்படை) அவ்யக்தமாயும் (அடங்குதல்) க்ஷராக்ஷரங்களாயுமிருக்கிற, (க்ஷரம் நாசமுடையது அக்ஷரம் நாசமற்றது) பிரபஞ்சத்தை ஈசன் தரிக்கிறார், என்றதால் எல்லாவற்றையும் தனது பெரிய வயிற்றில், வைத்துக்கொண்டிருக்கிறார். இச்சராசராதி பிரபஞ்சங்களனைத்தும் அவருடைய வயிற்றிலோர் மூலையிலே இருக்கின்றனவென்பதைக்காட்டுகின்றது.

### (சக்கரம்.)

அவருடைய கையிலிருக்கும் சக்கரம் இவரநாதியென்பதைக் காட்டுகிறது எப்படியெனில் ஓர் சக்கரத்தை கையில் வைத்துக்கொண்டு இதற்கு எந்த இடம் ஆதி (அதாவது இச்சக்கரம் எங்கு ஆரம்பித்து எங்கு முடிந்தது என்று ஒருவரைக் கேட்டால் அவர் சொல்வதற்கு யோசிப்பார் ஜாமதி என்னுஞ் சாஸ்திரத்திலும் (A Circle is a plane figer contain by one line) சக்கிரமென்பது ஒரே கோட்டால் வளையப்பட்ட ஒரு ரூபமென்றிருப்பதாலும் அதைப்பார்ப்பின் அந்தக்கோடு எங்காரம்பித்து எங்குமுடிந்ததென அறிவது சாத்தியமில்லை. யானதாலும் கணபதியானவர் தனது கையில் வைத்திருக்கும் சக்கரத்தால் நான் எப்பொழுதும் ஏகமாயுள்ளவன். எனக்கு உற்பத்தி நாசமில்லை. எனது மகிமையை ஒருவராலும் அறிய முடியாது நான் அநாதி நான் அனந்தன் நானே எல்லாவற்றையும் சக்கிரம் போல் சூழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதைக் காட்டுகிறார்.

### சூலம்.

அவர் கையிலிருக்கும் சூலம் எதைக்காட்டுகிறதெனில் சூலமென்பது நுனியில் மூன்றாகப்பிரிந்தும் அடியில் ஒன்றாகவுமிருக்கிறது. அச்சூலத்தால் நாம் அறியக்கூடியது யாதெனில் கணபதியானவர் நான் ஒருவனே எப்பொழுதும் உள்ளவர் என்னிடத்திலேயே சத்வரஜஸ்தமோகுணமென்ற மூன்று குணத்தோடுகூடிய பிரகிருதியுண்டாயிற்றென்றும், என்னிடத்திலிருந்தே பிர்ம்ம விஷ்ணு ருத்திரர்களான திருமூர்த்திகளுண்டானார்களென்றும் நானொருவனே ஸ்தூல சூக்ஷ்மகாரணபிரபஞ்சங்களில் வியாபித்திருக்கிறேனென்றும் நானே ஸ்தூலசூக்ஷ்ம காரண சரீரங்களில் விசுவதைஜஸ்பிராஞ்ஞரெனும் விளங்குகிறேனென்றும் நானே ஜாக்கிரஸ்வப்பன சுஷுப்தியவஸ்தைகட்கு ஸாக்ஷியாக விளங்குகிறேனென்றும் நானே அகார உகார மகாரதமகமான பிரணவஸ்வரூபமென்றும் நானே சிருஷ்டிஸ்திதி சம்ஹாரங்களைச் செய்கிறேனென்றும் காட்டுகிறாரெனத் தெரிந்துகொள்ளலாம்.

14531



### சங்கம்.

சங்கத்தை தலைகீழாக திருப்பினால், ஓங்காரத்தின் ஸ்வரூபமாகத் தோன்றுகிறது; அதை ஊதினால் ஓங்காரஸ்வரமே உண்டாகின்றது. ஆனதினால் அது வுமிதற்குப் பிரதீகமே அதனால் என்னத்தைக் காட்டுகிறாரெனில் என்னை பிரணவஸ்வரூபமென அறிபவனே சம்சாரசமுத்திரத்தைத் தாண்டுவான். என்னை பிர்ம்மரந்திரத்தினடியில் பிராணாயாமத்தால் நாதாநுஸந்தானம் செய்கிற யோகியே அறிய முடியும். ஓங்காரமின்றியோர் சப்தமுமில்லை என்பதைக் காட்டுகிறார்.

### பாசாங்குசம்

பாசாங்குசத்தால் நாம் அறிந்துகொள்ளுவது யாதெனில் மாயையென்ற பாசத்தால் அஞ்ஞானிகளைக்கட்டி கருமபலமென்ற அங்குசத்தால் சுகதுக்காதிகளைக்கொடுத்து மனுஷ்ய மிருகாதி ஜன்மங்களை எடுக்கச் செய்வேனெனக் காட்டுகிறார். இங்ஙனமே விக்னேசுவரர், வல்லபகணபதி செங்கணபதி சக்திகணபதி முதலிய அநேககணபதிகளின் கையிலுள்ள அநேக ஆயுதங்களில் சிலவற்றிற்கு இங்கு தாத்பரிய மெழுதப்பட்டது. முக்கியமாக கணபதியின் தியானம் யோகமோக்ஷப்பிரதமானதால் அநேகதியானங்களேற்பட்டிருக்கின்றன.

### மூஷிகம்

அவருக்கு வாகனம் மூஷிகமாய் (மூஞ்சூறு) எங்ஙனது யானையை மூஞ்சூறு தாங்கி நிற்குமா, இவ்வாகனம் சம்பவமாகுமா? ஆகாதே அதற்கு யாது பொருளெனில்

அணோரணீயான் மஹதோமஹீயான்,

அணுவுக்கணுவாய் மஹத்திற்கும் மஹத்தாய் விளங்குகிறார். என்பதைக்காட்டுகிறது. சிறிய பிராணிகள் முதல் பெரிய பிராணிகள் வரையில் நான் வியாபித்து ஆதாரமாயிருக்கிறேன். நான் விபு ஆகாசம்போல் வர்ப்பகன் என்பதைக்காட்டுகிறார்.

### மோதகம்

அவருக்கு மோதகத்தில் பிரியம், அதற்குக் காரணம் யாதெனின் மோதகமென்பது ஆனந்தத்தைக் காட்டுகிறது. லோகத்தில் சந்தோஷகாலத்திலே தித்திப்பான பதார்த்தங்கள் உண்ணுகிறார்கள், அப்பொழுது அதைச் செய்தே தீரவேண்டுமெனவிதியுமிருக்கிறது. ஆனதால் நான் எப்பொழுதும் ஆனந்தமாயிருக்கிறேன். நானே ஆனந்த ஸ்வரூபி என்னுடைய லவலேசமான ஆனந்தத்தையே, அந்நிய ஜீவர்கள் அநுபவிக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறார்.

### ஐசுவரியம்

அவரது ஐசுவரியங்கள் கரும்பு தேன் முதலிய சிறிய ஜந்துக்களும் பெரிய ஜந்துக்களும் இருக்கின்றன. அதனால் அறிவது யாதெனில் சர்வஜந்துக்களும் எனது ஆக்ஞையை சிரமேற்கொண்டிருக்கிறார்கள், நானே சர்வத்திற்கும் ஸ்வாமியென்பதைத் தெரிவிக்கிறார்.

### எந்த பொருட்களிலெல்லாம் நோயில்.

எந்தக்காலத்திலும் அவரையே எல்லோரும் பார்க்கவேண்டும் என்பதே அ

க்கோயில்களின் காட்டுகின்றன. அவர் எல்லோரும் முதலில் வணங்கவேண்டிய முக்கிய கடவுளானதால் பக்தானுக்கிரஹார்த்தம் ஆங்காங்கு அனுக்கிரஹிக்கிறார் என்பதைக் காட்டுகிறது. நிற்க,

அவரது தலையோ யானைத்தலை. உடம்பு மனுஷ்ய உடம்பு. வயிறோ பெரும் வயிறு வாகனமோ மூஞ்சூறு இவைகளனைத்தையும் யோஜிக்குங்கால் இவரையே எங்கும் வியாபித்த மூர்த்தியென்பதைக் காட்டுகிறது. ஈறெறும்பு என்பத்திநான்குலட்சயோனிபேத ஜீவராசிகளுடைய ரூபமாகவும் இருப்பதாகவும் அறிந்துகொள்ளலாம். மற்றும் அவருடைய நாமத்தின் தாத்பரியத்தை விசாரிப்போம்.

## விநாயகர்.

விநாயகரென்றால் (விகத நாயக:) தனக்கு எஜமான் இல்லாதவர்: அதாவது தானே எல்லாவற்றிற்கும் காரணம் என்றேற்பட்டது.

## கணபதி.

கணபதியெனில், (கணாநாம்பதி:) என்றபடி கணங்களான ஜீவகணங்களனைவருக்கும்பதி எல்லா ஜீவராசிகளுக்கும் பதியாய் சம்ரக்ஷிப்பவர்.

## விக்னேச்வரர்

விக்னேசுவரரெனில் (விக்நாநாம் ஈச்வர:) சத்காரியங்களுக்கு நேருகிற விக்னங்களிலிருந்து இரக்ஷிப்பவர். அசத்காரியங்களுக்கு விக்னத்தை யுண்டாக்குபவர். அதாவது அசத்துக்களை சம்ஹரிப்பவர் அதனாலே நாம் எழுதும்பொழுதும் பிள்ளையார் சுழிபோடுகிறோம். எக்காரியத்தைத் துடங்கினும் முதலில் விக்னேசுரனைத் துதிக்கவேண்டும். துதித்தால் சர்வவிக்னமுமொழிந்துவிடும். அங்ஙனமே சுருதியும் (ஹே பிராணவஸ்வரூபமே) உம்மை பிரம்மா [illegible] வேதத்தின் ஸாரமாக [illegible] அத்தகைய நீர் எனக்கு ஆத்மவிஷயமான மேதையைக்கொடும். ஹேதேவா ஈசனமிர்தமான ஆத்மசுவரூபத்தின் தாரணை எனக்கிருக்கட்டும். நான் ஆத்மாவை யறிவதற்கு சரீரத்தில் ரோகமில்லாமலிருக்கட்டும். எனது ஜிஹ்வையானது (நாக்கு) மதுவுக்கு சமமான ருசியோடிருக்கட்டும் அதாவது ருசியுள்ள வாக்கோடு கூடிக்கொண்டிருக்கவேண்டும் எனது காதுகள் தத்துவ விஷயங்களை ஏராளமாய் கேழ்க்கவேண்டும், நீர் பிரம்மசுவரூபத்திற்கு கோசபூதமாயிருக்கிறீர். நான் உம்மைப் பார்க்கமுடியவில்லை. ஆனதினால் உமதுஞானத்தை எமக்கு அருளிச்செய்யுமெனதைத்தரீய உபநிஷத்தின் சிக்ஷாவல்லியில் அவ்வுபநிஷத்து நிர்விக்னமாய் முடியும்பொருட்டும் மேதாகாமத்தை யுத்தேசித்தும் பிரார்த்தனாரூபமாக ஓங்கார ரூபமான கணபதியை பிரார்த்தித்திருக்கிறதென கணபதிவாதிகள் கூறுகிறார்கள். ஆனதால்சர்வவிக்னத்தையுமடியோடொழிப்பவர். இன்னும் அநேக நாமங்களிருக்கின்றன விரிப்பின் பெருகும். ஆனதால் விநாயகமூர்த்தியின் உபாசனையானது ஸர்வ ஜனங்களும் செய்யவேண்டிய முக்கிய உபாசனையாயிருக்கிறது. அதனாலேயே நம்மவர் எக்காரியம் துடங்கினும் விநாயகபூஜையன்றிச் செய்வதில்லை. இவ்வுண்மையை யறியாமல் அநேகர் அம்மூர்த்தியை பரிஹசிப்பார்கள் நமது பூர்வீகர்கள் எந்தவிஷயங்களைத்தொடங்கினும் விநாயகரை நமஸ்கரித்தே செய்வது வழக்கம். இப்பொழுதும், சைவம், வைஷ்ணவம், சாக்தேயம், காணபத்தியம் கௌமாரமென்னும் ஐந்து மதஸ்தர்களும் பேதபேதமா வாதித்தாலும் எல்லோரும் விநாயக பூஜையை விடுவதில்லை. அவரவர்கள் தங்களது மூர்த்தியினது உபாசனை நிர்விக்னமாகமுடியவேண்டுமென்று எனது கருணாநிதியான கணபதியை நமஸ்கரித்தே துடங்குகிறார்கள் இப்பொழுது விஷ்ணுகோவில்களிலும் கணபதியைக் காணலாம். ஆனதால் கணபதியானவர் மதங்களனைத்தையும் கடந்த துரியமூர்த்தியான பரப்பிரம்மமே. அவரே பிரணவஸ்வரூபி என்று சித்தம் அங்ஙனமே கணபதியுபநிஷத்தும் கூறுகிறது.



ஓம்லம் நமஸ்தே கணபதயே த்வமேவ பிரத்யக்ஷம் தத்வமஸி த்வமேவ கேவலம் கர்த்தாஸி என்று துடங்கி த்வம்பிரம்ம த்வம் விஷ்ணு த்வம் ருத்திர என்று கூறுகிறது.

அதனது பொருள் நீரே தத்தமஸி வாக்கியத்தால் பிரதிபாதிக்கப்பட்ட பிரம்ம சுவரூபமாய் இருக்கிறீர் நீரே பிரம்ம விஷ்ணு சுவரூபமாய் இருக்கிறீரென்று வெகுவாக பிரதிபாதித்திருக்கிறது. ஆனதினால் ஸர்வலோகங்களுக்கும் அந்தர்யாமியாய் பெருங்கருணைத்தடங்கடலாய் பேரானந்தமாய் விளங்குகிற நமது கணபதியை முக்காலத்தும் தொழுதேத்துவோம்.

தருணமாதுலமழகத்தாமரைக்கெழு
மருணனுமெனவுதித்தடியர்பாற்புரி
கருணைமாமதமெனக்காட்டுமாமுகன்
சரணவாரிசமலர்தலையிற்கொள்ளுவாம்.

# பக்தி

இவ்வுலகத்திலுள்ள ஜீவராசிகளில் மனுஷ்யனாய்பிறப்பதரிமையேனெனில், பிறப்புஎன்பது அவ்வச்ஜென்மங்களிற்செய்யும் கருமங்கட்கேற்றவாறென, சாஸ்திரங்களாலு மனுபவத்தாலு மறிகிறோம், ஆனதினால், கருமத்திற்குத்தக்கவாறு ஜன்மம்வருவதால், ஒவ்வொரு ஜீவனும் மனுஷ்ய ஜன்மத்தையடையக்கூடிய கருமத்தைச்செய்யுமென, நம்புவதற்குச்சாத்தியமில்லை, மனுஷ்யனாகப்பிறந்த, நமக்கே மறுஜன்மமும், மனுஷ்யஜன்மமா வருமென, நம்பச்சாத்தியமில்லை, ஏனெனில் நமது கருமங்கள், மிருகத்தன்மைக்குப்போகக்கூடிய காமக்குரோதாதிகளுடன் சுபாவமான ஆகாரநித்திரை மைதுனாதிகளிலுமே செய்யப்படுகின்றன, விவேகத்தால் சாத்வீகமான தெய்வகாரியத்தைச் செய்வோமென்றால், விவேகம்க்ஷணந்தான் உதயமாகிறது. அரவம் தீண்டியவனுக்கு விஷம் தலைக்கேறி அல்பகாலமிறங்கி மறுபடியுமேறுவதுபோல், நம்மைஅஞ்ஞானமென்ற ஸர்ப்பம் தீண்டி அவிவேகமெ

ன்னும் விஷம் தலைமேலேறியிருக்கிறது. சிறிது ஸாதுளங்கமென்னும் ஔஷதத்தால், விவேகத்தெளிவுவரினும் உடனே அவிவேகவிஷமேறி விடுகிறது. அந்தோ !! அவ்விஷத்தாலன்றோ இச்சம்சாரசாகரத்தில் விழுந்து தத்தளிக்கும்படி நேர்ந்தது நம்மிடத்திலநாதியானவஞ்ஞானம் குடிகொண்டிருப்பதால், நாம் அடுத்தஜன்மம் மனுஷியபிறப்பையே யடைவோமென்பது சாத்தியமில்லை, ஆனதால் வசமாக மனிதஜன்மத்தையடைந்த, நாம் இதை விணாக்கலாமா !! நாம்மிருகஜன்மங்களை யடைந்தால், அவிவேகமே மேல்பட்டு நீடித்து நினைப்பும் மறப்புமற்று ஆகாராதி விஷயங்களிலேயே பிரவிருத்தியுற்றலைய நேரிடும். மேலான தேவஜன்மங்களையடைந்தால், அங்குள்ள தேவபோகத்தையனுபவிக்கவும், போககாலம் குறைந்துவிட்டதே, இனி நாம் பூலோகத்திற்குப்போகவேண்டுமேயென்றேக்கத்தாலும் காலம்கழிக்கப்படுகிறது மறுபடியும் கீழேவருவானாயின் பூச்சியாகவோ புழுவாகவோ மிருகமாகவோ மனுஷியனாகவோ பிறக்கநேரிடும். ஆனதினால் மனிதஜன்மமே பிறப்பிறப்பென்னும் பெரும்பிணியை மாற்றக்கொள்ளதக்கஜன்மமெனவேற்பட்டது. ஆனதினால் இப்பொழுது நாம் செய்யவேண்டுவது யாது ?

நம்மைச்சன்மமென்னும் சாகரத்தில் கருமத்திற்கேற்றவாறு, அழுத்துகிற பரமபதியை பற்றிக்கவேண்டும். பற்றிப்போமாயின் அவர் நம்மை கரையேற்றிவிடுவார். அவரையன்றி வேறுகதியில்லையெனவெல்லாவற்றையுமவரிடத்தில் ஒப்புவித்துவிட்டு பக்திசெய்யவேண்டும்.

பக்தியென்பதென்ன ?

நாரத சூத்திரம்.

தஸ்மிந் பரமப்ரேரூபா

—:※(o)※:—

பரமேசுவரனிடத்தில் பரமபிரேமைக்கு பக்தி யென்றுபெயர் அப்பிரேமையை நாம் எப்படிச்செய்வதெனில்? மனதைப்பரமாத்மாவினிடத்திலேயே ஒப்புவித்துவிடல். அதாவது, அவருடைய விக்கிரஹரூபமாகவேசித்தல். அப்பொழுது தேகந்தெரியாது. சோகமுண்டாகாது உலகவிச்சையுண்டாகாது. காமக்குரோதங்கள் விலகிவிடும் இந்திரியங்களின்வழியே மனதுசெல்லாது திருப்தி அதிப்தியென் எங்குகண்டாலும் ஈசுவரனாகவேதோன்றும் அதையே பக்தியென்பர். பகவான் கீதையிலும் பலயிடங்களில் பக்தியோகத்தை கூறியிருக்கிறார் [மோக்ஷகாரண ஸாமக்கிரியாம், பக்திரேவகரீயஸீ] மோக்ஷத்



திற்குவேண்டிய சாமக்கிரியைக்குள் பக்தியேமுக்கியம். மனதை பலவிடங்களிலலையவிட்டுபக்திசெய்வதிற்பிரயோஜனமில்லை. தேவாலயத்தில் ஸ்வாமி தெரிசனத்திற்கு சென்றால்பக்தியே செய்யவேண்டும் அதை விட்டு அங்குகூத்தாடும் தாசியையும் நாயனத்தையும் ஸங்கீதத்தையும் பக்தவின் அலங்காரத்தையும் பரஸ்திரீகளின் கண் திருஷ்டிகளையும் சூதாடிகளின் கூட்டத்தையும்பார்த்து தான்வந்தகாரியத்தை மறந்து விடுகிறார்கள் அந்தோ! என்ன அவிவேகம் இக்கலியுகத்தில் போகஞ் செய்யமுடியாது. ஞானம் பயப்பது கஷ்டம்; யோகஞ்செய்வது கஷ்டம் இந்தமார்க்கமே சுலபம் இத்தகைய சுலபமார்க்கத்தினும் பிரவர்த்திப்பது துக்க மென்றால் அந்தோ! எப்படிக் கடைதேறுவது, தொண்டதே கோவம், கண்டதே காக்ஷியாகப்பூரித்த மூலையுடையமாதர்மேல்வீழ்ந்து சோம்பலைத்துலைத்து மற்ற வேலைகளிலவளுக்கேவுழைத்து பெண்பிள்ளைகளைப்பெற்று மிருகத்தன்மைக்கொப்பான தொழிலையே சதமெனவெண்ணுது பரமேசனைப்பழிப்போமாக -நம்.

நாமோர் நாடோறும் வாடாமலர்கொண்டு
பாமேர் வன்னுமம் வீட்டெபெறலாமே.

நசிகேதஸ்.

மனதின்சுபாவம் எதை எங்ஙனம் பார்க்கிறதோ அங்ஙனமே வாங்கிகொள்ளுகிறதானதாலும் எதைஇச்சிக்கிறதோ எதை இந்தஜன்மத்தில் எப்பொழுதும் தியானம் பண்ணுகிறதோ, அதையேஅது அடுத்த ஜன்மத்திலடைய நேரிடும். அதற்காகவே சுவர்க்கலோகத்திற்போய் இந்திராதிதேவர்களுடனிருந்து சுகத்தையனுபவிக்கவேண்டுமென்றும்அவர்களை மந்திரத்தால்பிரார்த்தித்தழைத்து அக்னியின்முகமாக ஆவிர்ப்பாகங்கொடுத்து அவர்களது அனுக்கிரஹத்தைப்பெற்றுப்பிறகு, ஆயுட்காலபரியந்தம் தேவதைகளின் திருப்திக்காகவே, அக்னிஹோத்திராதி கர்மங்களை இயற்றி மரணகாலத்தில் அதையே "யம்பம்வாதிஸ்மரக்பாவம்தியஜந்தியந்தேகளேவரம்" எப்படி மனதில் பாவித்துக்கொண்டு, சரீரத்தை விடுகிறானோ அங்ஙனமே அந்தரூபத்தையே சரீராந்தத்திலடைகிறான். என்றபடி இறந்தவுடன்.

தேஹம்பிலயமவந்தி, ஆமாத்ராத்ரீம்
ராத்ரெபாபக்ஷம பாபக்ஷாயாங்க்ஷம் தக்ஷிணேதி
மாஸாம்தாங்கைதேஸம்வதஸ்மபிபிராப்னுவந்தி
மாஸெப்யபிதர்லோகம்பிதர்லோகாதாகாம்
ஆகாசச்சந்த்ரமஸம் ஏஷஸோமோராஜாபவதிதத்தே
வாநாமந்நம்தம்தேவாபக்ஷயந்தி.

என்றபடி அவன் புகைரூபமாகிறான். பிறகு ராத்ரியை அடைகிறான் பிறகு கிருஷ்ணபக்ஷ அபிமானி தேவதையையடைகிறான். பிறகு தக்ஷிணாயன அபிமான தேவதையையடைகிறான். பிறகு ஒருமாஸத்தில் பித்ர்லோகத்தையடைகிறான். பிறகு ஆகாசத்தின் வழியாக சந்திரமண்டலத்திற்குப் போகிறான். அங்கிருந்து தேவலோகத்திற்குப் போகிறான். தேவதைகள் இவனை வேலைவாங்குகிறார்கள், அங்கு இவனும் தேவபோகத்தை அனுபவிக்கிறான் இங்கு அறியவேண்டுவது யாதெனில் சுவர்க்கலோகத்திற்கு போகப்பிரியமுள்ளவனும் அதற்கு வேண்டிய அந்தக்கரண சம்ஸ்காரமுடையவனை சந்திரமண்டலமானது முற்கூறிய வழியாக ஆகர்ஷித்துக்கொள்கிறது. இதை விரிப்பின் வளரும்.

இந்நசிகேதஸால் கேட்கப்பட்ட இரண்டு வரங்களும் தனது பிதாவின் க்ஷேமத்தின் பொருட்டு ஒன்றும் மற்றொன்று லோகோபகாரமாக சுவர்க்கலோகத்திற்கிச்சையுள்ளவருக்குப் யோகப்படும்படியாகக்கேட்டனன். இதனாலவருக்கு சுவர்க்கலோகத்திற்குப்போய் அங்குள்ளதை யனுபவிக்கவேண்டுமென்று பிரியமன்று. அவர் தத்துவநிஷ்டைக்குயோக்கியர் இவ்வுலகத்தை திருணமாக மதித்தவர். அவரது பாலியப்பருவத்திலேயே பரிகரிக்கப்பட்டவர் ஆனதால் அவருக்கு ஒருபோதும் இவ்வாழ்க்கையிலும் இந்திரிய சுகங்களிலும் பிரியமுள்ளவரன்று. பிறகு மூன்றாம்வரனை கேட்கிறார். இவ்வரனே அவருடைய விரக்தியை தெரிவிக்கிறது.

மனிதன் இறந்துவிட்டால், சரீர இந்திரிய மனோபுத்தி முதலியவைகட்கு விலக்ஷணமாய் அடுத்ததேகத்தையடையக்கூடிய ஜீவனுக்காதாரமான ஆத்மா ஒன்று இருக்கிறதா? சிலர் இருக்கிறது என்கிறார்கள் சிலர் இல்லை என்கிறார்கள் அப்படியிருத்தலைப் பிரத்தியக்ஷமாகவாவது அனுமானத்தாலாவது அறிய முடியாதன்றோ? அவைகட்கெல்லாம் காரணவிஞ்ஞானமான மோக்ஷத்தை எமக்குத்தெரிவிக்க வேண்டும், நான் உமது முக்கிய சிஷ்யனன்றோ, என்றனர்.

அதைச்செவியுற்ற, காலன் இவர் நிச்சயமாகவே பிரம்மஞானத்தையறிவதற்குச் சக்திபுடையவரா? அவர் இந்த ஞானத்திற்குப்பாத்திரமா? இல்லையாவென அடியில் வருமாறு பரீக்ஷிக்கிறார் குழந்தாய் தேவர்களும் இவ்விஷயத்தைப்பற்றி மிக்கச்சம்சயித்தறியச் சாத்தியமற்றது அதைச்செவ்வையாய் அறியமுடியாது. அவ்விஷயத்தைக்காதாற்கேட்பினும் அஞ்ஞானிகளுக்குப் பிரகாசமாகாது எப்படி அணு



வானது வெகுசூக்ஷ்மமாகுமோ அங்ஙனமே வெகு சூக்ஷ்மமானதாலும் இதை செவியும் அடைய முடியுமோ முடியாதோவென, சந்தேகமான பாவத்தையுடைத்தாயிருப்பதாலும் வேறுவரனைக்கேட்டுக்கொள்க என்றனர் பிறகு நசிகேதஸ் கூறுகிறார்.

தேவர்களும் விஷயத்தையறிவதற்குச் சக்தியற்றார்கள், என்று நீரே கூறுகின்றீர்கள். அத்தகைய மஹாரகஸியமாயும் பண்டிதர்களாலும் அறிவதற்குச்சாத்தியமற்றதுமான ஆத்மஞானத்தைக்கூறுவதற்கு தம்மையன்றி நான் வேறுயாரை யடையப்போகிறேன். நான் எங்கு தேடினாலும் தங்களைப்போன்ற குருவையடைய முடியாது. இவ்வரனே அடியோடு ஜன்மத்தை நிவர்த்தித்து மோக்ஷப்ராப்திக்கேதுவானதால் இதற்குச் சமமானவரன், வேறெனக்கில்லை என்றனர். மேற்படியதைக்கேட்டமிருத்யுகூறுகிறார் நூறுவயது வரையில்ஜீவிக்கக்கூடிய புத்திர பவுத்திரர்களை ஏராளமாயடையவேண்டுமென்றும் ஆட்டு மந்தைகள் மாட்டுமந்தைகள் யானை குதிரைமுதலிய பசுவர்க்கங்கள் வேண்டுமென்றும் கேட்டுக்கொள்க. பூமியிற் பெருத்த ராஜ்ஜியத்தைக் கேட்டுக்கொள்க. வேண்டியதையும், பிரார்த்தித்துக்கொள்க. பூலோகத்தில் எவ்வளவுநாள் நீ சுகமாகவாழ்க, நீ சுதந்தரமாய் இச்சையுள்ளவரையும் பூமியை அரசு செலுத்தலாம் இன்னும் இத்தகைய வேண்டிய மற்றவைகளை பிரார்த்திப்பினும் கொடுக்கிறேன் நீ நினைத்ததெல்லாமனுபவிக்கக்கூடிய காமங்களைத்தருகிறேன் நான் சத்தியசங்கல்பமுள்ளவனன்றோ! எந்தெந்த காமங்கள் உனக்கு பூலோகத்தில்வேண்டுமோ அவ்வளவையும் பிரார்த்தித்துக்கொள்க. இன்னும் புருஷர்கள் ரமிக்கக்கூடியவர்களாயும், ரதங்களோடுகூடியவர்களுமான வாத்தியங்களோடு கூடியவளவான அப்ஸரஸ்திரீகளைத்தருகிறேன். இத்தகைய ஸ்திரீகள் மனுஷியலோகத்தில் கிடைப்பதரிது அவர்களை உனக்கு பரிசாகஞ்செய்யச்செய்கிறேன், நசிகேதஸ் நீ கேட்ட மரணசம்பந்த பிரசினத்தை விட்டொழிக.

இங்ஙனம் பலவாறு மிருத்யுவான் அவர்மனத்தை பரீக்ஷிக்கப்பட்டும், அவர் அவைகளைச்சிறிதுமபேக்ஷிக்கவில்லை. அதனிடத்தில் ...ச்சபுத்தியுடன் கூறுகிறார், தங்களாற் கூறப்பட்டவைகள் நாளைக்கு இருக்கக்கூடியவைகளா என சந்தேகிக்கக்கூடியன மற்றும்இந்திரியங்களின் சக்தியையொழிக்கக்கூடியதும், அப்படிமான அப்ஸரஸ்திரீகளின் போகங்கள், அனர்த்தத்தையே உண்டுபண்ணும். ஏனெனில், ...ருமம், வீரியம், பிரஞ்ஞை தேஜஸ் யசஸ் முதலியவைகளைக்ஷயிக்கச்செய்

வார்கள். அவர்களது சேர்க்கைத் துக்கத்தையே கொடுக்கும். என்னை
நீர்க்காலஞ்சீவிக்கசெய்கிறேன் என்கிறீர் உமக்குங்காலம் ஓர் அளவு
டையதுதான். பிரமனும், ஓர்காலத்தில் ஒழிந்துவிடுவானெனில், நமது
காலம் எவ்வளவு அமைப்புள்ளது. அற்பமே, ஆனதனால், முக்காலங்
களும் அப்ஸரஸ்திரீகளும், தம்மிடத்திலேயே இருக்கட்டும். தம்மைப்
போன்ற மஹான்களை தெரிசித்தால், அவைகள் எனக்கு கிடைப்பதி
யல்லவே ஆனதால் நான் நூற்கூறியவரையே தரவேண்டும். அவ்வாறை
யன்றி வேறொன்றை யான் வேண்டேன் என்றனர். பிறகு மிருத்தியு
இவரது தைரியத்தையும், வைராக்கியத்தையும் கண்டுமகிழ்ந்து ஆத்ம
வித்தையை உபதேசித்தார். அவ்வித்தையையடைந்து பிரமஞானியாய்
இவ்வுலகம் பற்றற்ற நிராய், ஞானிகளின் திலகமாய் மிருத்தியுவினி
டத்து உத்திரவு பெற்றுக்கொண்டு பிறகு தனது தந்தையிடத்து சென்
றார் அதைகண்ட பிதாவும்மகிழ்ந்து ஆனந்தபரவசராய் தனது ஏகே
புத்திரன் மிருத்தியுலோகத்திலிருந்து திரும்பி வந்ததுடன், பிரம
ஞானியாய் இருப்பதைக்கண்டு அடங்கா ஆனந்தத்தையடைந்தார்
அக்காலத்திய மஹாரிஷிகளுக்கு பணத்திலும் மற்ற ஸ்திரியாதிபோ
கங்களில் சிறிதும் இச்சையில்லையென்பதையும் எக்காலத்தும் தத்வ
ஞானத்தையே எதிர்பார்த்தவரென்றும், அவர்கள் மஹா வல்லமை
யுள்ளவர்களென்றும் இதனாலறிகிறோமல்லவா மற்றும் நசிகேதஸ் எ
னும் சிறுவரது சத்தியவாக்கும், அவரது மனோதைரியமும் அ
மிருத்தியுவினிடத்திற்சென்றுகேட்ட மூன்று வரங்களுடைய மகிமை
களையும் பார்க்க, இத்தகைய பிரம்மசாரிகள் இப்பொழுது நம் தேசத்
தில் ஒருவருளரோ? இல்லையோ பிரம்மசரியமென்ற ஆச்சிரமமே
போய்விட்டதே. ஒற்றைப்பூணூல்போடுவதே பிரம்மசரியமாகவிளங்கு
கிறது அந்தோ! முற்காலத்தில், நசிகேதஸைப்போன்ற பிரம்மசாரிகள்
எவ்வளவு வல்லமையுடையவர்களாயிருந்தார்கள் அவர்கள் வல்லமை
யிலாயிரத்திலொருபங்குகூட இக்காலத்தவர்கட்கில்லையே. இருஷிகள்
வம்சத்திற்பிறந்த நாம் சிறிதேனும் சத்தியன்றி இழந்தோமே, தத்கா
லத்தியவர்கள் சந்தியாவந்தனமும் சரியாகசெய்வதில்லையே, கொண்ட
தேகோலம் கண்டதேகாக்ஷியாக அல்பபோகங்களான இந்திரியங்கள்
போகத்திலேயே நம்மவர் மனம் அழுந்திகிடக்கிறது இப்போகங்க
இன்றைக்கிருந்து நாளைக்கொழியுமே ஓர்நிலையுடையனவில்லையே, ஆ
தால் நமது பெரியோர்கள் திவ்விய சாருவிதங்களுக்கு அநேககோ
வாதனங்களைச்செய்வோமாக.

ஓம் சுபம்

# தமிழருமை.

## ருக்மணிக்கும் ஸத்யபாமாவுக்கும் நடந்த ஓர் அரிய சம்பாஷணை.

---

ஸத்தியபாமை:—அக்காள்! நம் நாயகராகிய கிருஷ்ண பகவானது வதனா
மாய் முழுமதியை இடைவிடாதுன்னிச் செழிக்குஞ் செந்தாமரை மலர்
தலம், விளங்குகின்ற உன் முகம் இப்போது வாடியிருப்பது எம்மதியாலோ?
ருக்மணி:—என்னருமைத் திருத்தங்கையே! இவ்வுலகில் எத்தனையோ
பாஷைகளிருக்க ஆங்கிலேயமே அதிகப்பட்டிருப்பதோடும் அதை அப்பியசிப்
பவர்களுக்கு மாத்திரம் ஆஸ்தி காஸ்திகளும், கட்டட [illegible]களும்,
மேலும் பண்டாகியும் நம்மவர்கள் அப்பாஷையை தம் குலத்திற்குரிய
உயர்ந்ததாகிய மஹா மந்திரமாம். காயத்திரி ஜபத்திற்கும், வேதத்திற்
மேற்பட்டதாக பாவித்துக் கொண்டாடுகின்றார்களே என கவல்கின்றேன்.
ஸத்தியபாமை:—ஆங்கிலம், பிரான்சு, கிரீக், லத்தீன் முதலிய இராஜ
பாஷைகள் தாம் அதிபானத்தையும், ஐசுவரியமும் அழகும் தரத்தக்கதே தவிர
மிருதம் தமிழ் முதலிய ஸ்வஜாதி பாஷைகள் அதற்றைப்போல் மேன்
மையை தரத்தகாததுவென நினைக்கிறேன் என்றார். ஏனெனில் "ஆசன் எவ்
குடிகளெவ்வழி" யென்ற முதுமொழிக்கிணங்கவும்,

"முன்னை யொருவன்பெற்று மும்மையும் துறந்தாரேனும்
மன்னவன் சொன்னவாரே சொல்வது வழக்காரன்றே."

என்பதற்கு யிணங்க அவ்விராஜ பாஷையே மேன்மையை தரத்தக்கது
ன்று

"திருமங்கொள் வளநெறி நீதில் கல்வியு
மிருமையி னென்றினை யய்திடாத
னருமை கொன்ன வுயிர் அதனை ஈற்றவும்
பெருமைய துடையது பேயின் றேற்றமே."

செல்வத்தையும், கல்வியையும், சம்பாதிக்காத மானிட ஜன்மத்திலும் பாச
பிறந்த துயர்வல்லவா யென்றும்,

"மூனிவரு மன்னரும் முன்னுவ பொன்னார் முடியுமென்றம்,"
"வரியா திருமை யறியார்" என்றும்

க்கோவையார் வருளச்செய்தாரல்லவா? செல்வமில்லாதவ செல்லா கன்
பு முடையவராயினும்,

"இல்லாரை இல்லாளும் வேண்டாள்,
மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்;
செல்லாது அவன் வாயில் சொல்"

ன்றும் சொல்லியிருக்கவில்லையா.

"அளவரும் வித்தையே யன்றி மேன்மையு
முளப்படுக் தருமமு முயர்ந்த கீர்த்தியுங்

கொளப்படு வெற்றியும் பிறவும் கொட்டலால்
வளத்தினிற் சிறந்தது மற்றொன்றில்லையே"

யென்றும் அத்துணைச் சிறப்பினையுடைய பொருளைத் தருவது ஆங்கிலேயமன்றோ? செல்வத்தை தருவது ஆங்கிலேயமாயிருப்பதால் அதைப்படியாது பொருளின்மையையும் துன்பத்திற்குள்ளாக்கும்படியான தமிழ், ஸம்ஸ்கிருதம் முதலிய தரித்திரபாஷையைப் படிப்பதினால் யாதொருபொருளும் கிடைக்காது க்ஷேமமுமில்லை, க்ஷாமமே குடிகொள்ளுமென்பது நிச்சயமென்றார்.

உருக்மணி :—இவற்றை யெல்லாம் கேட்டுச்சிரித்து போ! போ!! தென்மொழி வடமொழி யென்ற இரண்டு பாஷைகளுக்குள் தென்மொழியிலிருந்து கன்னடம், கேரளம் முதலிய அரியபாஷைகளும், வடமொழியிலிருந்து அங்கம், வங்கம், கலிங்கம் முதலிய பாஷைகளுங்கூடி பரதகண்டபாஷைப் பதினெட்டாயிற்று. ஆகையால் ஆதிபாஷை யிரண்டே. சிலர் ககரம் முதலிய ஐவர்க்கத்தினும் முதலும் ஈருமாகிய விரண்டுங்கூட்டிப் பத்தெழுத்தும், ய முதலிய நான்கெழுத்தும் கூட்டி ஆகப்பதினன்கும் (ற, ன, ழ, ள) இந்நான்கும் கூட்டி பதினெட்டு மெய்யும்; உயிரில் ரு முதலிய நான்கையும், அம் ஆகாவென்ற இரண்டெழுத்துக்களையும் கழித்துப் பத்தும் எ, ஒ வென விரண்டும் கூட்டி முதலெழுத்து 30-ம் சார்பெழுத்தாகிய ஆயுதமும் கூட்டி 31 யெழுத்தில் இலக்கண ஆசிரியராகிய அகத்தியமாமுனிவர் பிராமணராணபடியினால் இவ்வாறு சேர்த்தார். ஆகையால் தமிழும் வடமொழியிலிருந்து வந்தது என்ப. சிலர் அகத்தியருக்கு கடவுள் உபதேசித்தது, தமிழ், வித்திலிருந்து மரம் வெளிப்பட்டாங்கு, ஐவர்க்கத்தினும் இடையில் மூன்றும் கிளைத்ததும், உயிரில் இடையில் நான்கு கிளைத்தும் ஈற்றிலிரண்டு துளிர்த்தும் தமிழிலிருந்து ஆரியம் வந்ததென்ப. அது எவ்வாராயினும் இவ்விரண்டும் தெய்வ பாஷையே.

ஸத்தியபாமை :—தென்மொழியை எவ்வாறு தேவபாஷையெனச் சொல்லலாமென?

உருக்மணி :—சொல்லலாம்; தேவனாலே சொல்லப்பட்ட பாஷை, தேவபாஷை நீதியுள்ள பாஷை, தேவபூஜாருகமான பாஷையென்று பொருள்யென.

ஸத்தியபாமை :—ஆனால் தேவன் யாரோ வென?

உருக்மணி .—ஆரியர்களாலே அர்ச்சிக்கப்பட்ட சங்கர நாராயணரே.

ஸத்தியபாமை :—இத்தமிழை யாரால் வெளியிடப்பட்டதென?

உருக்மணி :—உயர்வுள்ளவருக்குபதேசித்தாரா? உயர்வில்லாதவருக்குபதேசித்தாரா? உயர்வுள்ளவருக் குபதேசித்திருப்பாரேல் யாம் ஒப்புக்கொள்ளத்தக்கது. அல்லரேல் ஒப்புக்கொள்ளத்தகாதென.

உருக்மணி :—சிரித்து என்னருமை தங்கையே நீ கேட்பாயாக. அது உயர்வுள்ளவருக்கே உபதேசிக்கப்பட்டது.

ஸத்தியபாமை :—உபதேசிக்கப்பட்டவர் யாரோவென?

உருக்மணி :—அகத்தியமாமுனிவருக்கு, அவர் பெருமை இன்னும் சொல்லுகிறேன். உன்னுலுயர்த்திப்பேசப்படு மித்தமிழானது ஆரியற்கு உரித்தான



மொழியாக ஒப்புக்கொள்ளத்தக்கதென்பாயேல் அது உயர்வுள்ளவருக்கே உபதேசிக்கப்பட்டது.

ஸத்தியபாமை :—அவர் யார்யென?

உருக்மணி :—விருத்திராசூரன் கரந்து ஒளித்த கடலை உழுந்து அமிழ்த்தும் அளவின் ஜலமாயுறிஞ்சிய (ஆசமித்த) வரும், நாரத ருட்சியால் மகாமேருவுக்ு யாரும் சூரியச்சந்திரர் முதலிய கோள்களையும் நாள்களையும் தந்தார் கெதியில் செல்லவிடாது தடுத்தெழுந்திருமாந்திருந்த விந்திய பர்வதத்தை தேவர்களின் வேண்டுகோளிற்கிணங்கி கடலை யடக்கிய கையை பிரமபுரம் வரையிலுயர்த்தி மேற்படி மலையினுச்சியில் கையைவைத்து பாதாளத்திலழுந்தச்செய்தவரும் ஸ்ரீ பார்வதி தேவியார் திருக்கலியாண காலத்தில் தேவலோகத்திலுள்ள முப்பத்துமுக்கோடி தேவர்களும் முனிவர்களும் மற்றுமுள்ளோரும் இமவத் பருவதத்தில் ஒருங்குசேர வடபாகம் பாதளம் செல்ல அதையறிந்த சிவபெருமான் ஆக்ஞையால் பொதிகைமலையிலிருந்து முப்பத்திமுக்கோடி தேவர்களுக்கும் மூவர்களுக்கும் தன்னையொப்ப நிறுத்து காட்டியவருமாகிய அகஸ்தியமாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்டது.

ஸத்தியபாமை :—ஆம், ஆம், அக்காள் நன்றாய் சொன்னாய். நீ எடுத்துக்கொண்ட சுகல்ப் தமிழை யுயற்றிப்புகழ, இவ்வளவு அகடு புகடு பேசி மேலோர்களை எல்லாம் தாழ்த்தி உன் அகத்தியமுனியை யேற்றிப்பேச நீ எங்கேபோய்க் கற்றுக்கொண்டாயோ. தொன்னூல் கருத்துக்களை முறைபெருகின்றாய் முசலாக்கிராமாய் உன் புத்தியை ஸ்படிகில் வைத்துதான் இழுக்கவேண்டுமெனச்சொல்லி இருகைகொட்டிச்சிரித்து இதற்குவேறு ஏதாவது பிரமாணங்கள் உண்டாவென?

ருக்மணி :—என் அருமைத்தங்காய் நான் சொன்னதற்கு அனேக பிரமாணங்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைச்சொல்லுகிறேன், நீ சற்று கவனித்துக்கேட்பாயாக.

அதாவது :—கடலுறிஞ்சி என்றதற்கு புராணச் சாக்ஷியான கவி.

கைதவன் தந்நுனைக்கும் கடலை வெற்படக்குங் கையால்
பெய்தலுமத் தெல்லைத்தாக்கிப் பதிகினன் பிறைசேர் சென்னி
மையனை மருளைப்பெற்றோர் அதிசயமிதன்பின் மூன்று
...றிலும் செய்ய வல்லவரவரே யன்றோ.
மலையமுநத்தினைத்தற்குச் சாக்ஷி.

செட்டது மதனைச் சிற்றங்கிளைத்திட சிவைத்து நாதன்
தாட்டுகிளை யுண்ணித் தொன்றான் ததமகன் வேண்ட வாழி
மட்டுறத் தெறித்த கையை மறையவன் பதத்தின்சாறு
நீட்டினன் றவமேயன்றி கெடுபொருள் பிறவுமுண்டோ.
அற்புதமெமர் கொள்ள வாற்றவும் புரியோர் விந்த
வெற்பினை தும்பர் தன்னினிப்புயர் குடங்கை சேர்த்தி
கற்புற இன்ற வல்லேமற் றவட்புவிக் கட்டாழ்த்து
சொற்பிலம் புகுத்து சேடன் ரென்னிலை யடைத்த தன்றே.

## ஒப்ப நிறுத்ததற்குச் சாக்ஷி.

பொதிய மலைதன்னும் வெற்பிற் புனிதமா முனிவன் வைத்த
துதியுறு வடபாற் றென்பாற் புவனியோர் துலையோ லொப்ப
வுறுபொழு துயிர்களோடு ரணங்கொளி இயரானோ யேத்தி
மதிமகிழ்ந் தமர்ந்தார் தொல்லை வதுவையின் செய்கை சொல்வாம்

ஸத்தியபாமை :—ஆம் அக்கா அது தேவப்பிரீதியுள்ளதாவென :

ருக்மணி ;—ஆம், தேவப்பிரீதி யுள்ளதுதானென்பதற்கு புராணசாக்ஷிய மிருக்கின்றன. அதாவது :—

"மொய்தாரணி குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்பான்' என அருணகிரியாராலும்
"தமிழ்த் திருச்செவி மாந்தவு மன்றே" யென திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதிமாமுனிவராலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸத்தியபாமை :—எஸ், என் அக்கா அப்படியானால் இந்த தமிழ்பாஷையை அங்கீகரித்தவர் யாரென்று கேட்டாள்.

உருக்மணி :—இந்த ஸ்வேத விராக கல்பத்தில் உலகம் ஒடுங்கிப்போக, பிரம்மா, ஈசுவரனுடைய ஆக்ஞையால் மறுபடியும் ஜகத் சிருஷ்டி செய்தபோது தேவர்முதல் தாவரம்வரையில் தோற்றமாயின. அப்போதே பிரம்ம, க்ஷத்திரிய வைசிய, சூத்திரர்களும் பிரம்மாவின் முகம், புஜம், தொடை, பாதம் ஆம் அவயவங்களினின்றும் தோன்றினார்கள். இவ்வித லீலைகளை நடத்துபவரும், ஸர்வத்திற்கும் சாக்ஷி பூதமாய் ஸகலத்தையும் பார்ப்பவருமாகிய பரமசிவத்தின், கையிலுள்ள உடுக்கையினின்றும் ஓர் மஹா வாக்கியம் பிறந்தது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | இ | உண் | ஜ | ட | தச் |
| ரு | லு | க் | ச்ச | ப்பக்க | ட்டதஷ் |
| எ | ஒ | ங் | க | ப | ய் |
| ஐ | ஔ | ச் | க்க | ப்பச்ச | ட்டத்தவ் |
| ஹ | யவர | ட் | ச | ஷ | ஸர் |
| ல | | ண் | ஹ | | ல் |
| ஞ | ம | ஞ் | | | |

யெனக்கரங்க ளினதே. அதுதான் மஹேசுவர ஸ்தோத்திரமென்று பெயர். மேற்சொல்லிய சூத்திரத்தின் பாணினிமுனிவர் அச்சூத்திரத்தை முதலாகக்கொண்டு பாணினீயமென்றும் ஓர் நூலைச்செய்தார். அதற்கு பதஞ்சலிமாமுனிவர் மாபாஷியஞ்செய்தார். (இதுநிற்க) அகஸ்தியமாமுனிவருக்கும் அவ்வாறே இலக்கணமுபதேசித்தார். அகஸ்தியமாமுனிவரும் அதிலநின்றும் இயல், இசை, நாடகமென மூன்றாய்ப்பிரித்து தொல்காப்பியமாமுனிவர் முதலிய பன்னிரு மாணாக்கர்களுக்குபதேசித்தார். தொல்காப்பியமாமுனிவர் இயலை வேறுபிரித்து எழுத்து சொல், பொருள் என மூன்றாய் வகுத்து தொல்காப்பியமென ஓரிய நூலைச் செய்தார். அதை முதலாகக்கொண்டு இலக்கண விளக்கம் நன்னூல் முதலிய



முப்பத்திரண்டு இலக்கணங்கள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென ஐந்தாகப்பகுத்து பிற்காலத்தாரால் 32 சார்புநூல் செய்யப்பட்டன. முன் சொன்ன அகத்தியத்துள் இசைநூலை வேறுபிரித்து வழிப்படுத்தார். பெருநாரை பெருங்குருகு முதலிய நூலுடையார் இதற்கு வழிசையாவன உயிர் கெட்டொழிந்து வழுமாம்.

நாடகத்தமிழை வேறுபிரித்து வழிப்படுத்தார். முறுவல், சயந்தம், குணநூல், செயற்றியம் முதலிய நூலையுடையார். அகத்தியமும், அதனைவழி நூலாகிய தொல்காப்பியமும், பெருநாரைப் பெருங்குருகு, முறுவல் முதலிய வழிநூல்களும், இதை யாதாரமாகக்கொண்டு செய்யப்பட்ட மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கும் முதலிய நூல்கள் முதலிடைகடைச்சங்கங்களிலும் ஆராயப்பட்டன. முதல்சங்கநூலும், இடைச்சங்கநூலும் கடல் கொண்டன. கடைச்சங்கநூல் நவாபு காலத்தில் அவர்கள் மதத்திற்கு மேலான நூலாகிய குரானுக்கு மாறுதலையாயிருந்தமையால் அம்மிலேச்சர்களால் அக்கினிக்கு இரையாக்கப்பட்டன. போக மீதியிருந்ததையும் செல்லுக்கிரையாயின. அதினும் தப்பியிருந்தவைகளை பிற்காலத்தில் தமிழபிமானியும், தமிழ்ச்சாகரம் தாண்டுவதற்கு ஓர் நாவாய்போன்றவரும், சைவநெறி வழாது நடைநொடி பாவனைகளால் உலகத்தில் நடாத்தி விளங்கினவரும் சைவமணியும் எமது ஆசாரியருக்கு ஆசாரியரும் ஞானகுரியரும், மாணியாசார சிவச்சங்கருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களாலும் மாசற்ற மாந்தர்களின் மனதை விளக்கிக்காட்டும் மனவுறுதியுள்ள தாமோதரம்பிள்ளை அவர்களால் இலக்கியங்களும், சிவபுராணங்களும் பலபிரதிகளை வெகு பிரயாசைப்பட்டு தேடியும் முறிந்து, கெரிந்து. நொருங்கி, செல்லிற்கிரையாயிருந்த நூல்களை கோர்வைப்படுத்தி இது இன்ன நூலெனக் கண்டுபிடித்து அச்சேற்றினார்கள். சமண நூல்களை விட்டுவிட்டதினால் இக்கும்பகோணத்தில் கெவர்ன்மெண்டு காலேஜில் தமிழ் தலைமைப்புலமை வாய்ந்து நடாத்தினவரும் தற்காலம் மதுரைச்சங்கத்திற்கு மஹா மஹோபாத்தியாயர் பட்டம் பெற்றவருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ வே. சாமிநாதையர் அவர்கள் சிந்திச்சிதைந்துபோன அரிய பெரிய நூலாகிய பஞ்சகாவியங்களையும் பெரும்பான்மையும் அச்சியற்றினும் ஆக ஆதியாவதை பாணினி மஹாமுனிக்கு உபதேசித்த வடமொழியும், அகஸ்தியமஹாமுனிவருக் குபதேசித்த தென்மொழியுமாகிய ஆதிபாஷை இரண்டே. இவ்வாறு நான் சொன்னதற்கு பிரமாணம்.

"கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழேனை
மண்ணிடைச் சிலசில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்பட கடந்ததா யெண்ணவும் படுமோ" என்றபடி

"தொண்டர் நாதனை தூதிடை விடுத்தது முதலை."
"வண்டபாலனை அழைத்ததும் எலும்பு பெண்ணுருவாய்
கண்டதும் மறை கதவினை திறந்ததும் கன்னி தண்டமிழ்ச்சொலோ மறு
புலச்சொல்லோ சாற்றீர்

என்று திருவிளையாடல் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முதற்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர் சிவபெருமானாகிய இறையனார், குமரவேள், அகத்தியமாமுனிவர் முதலாகிய ஐந்நூற்று நாற்பத்தி ஒன்பதின்மர்; இடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர்,' ஸரஸ்வதி அவதாரமாகிய நாற்பத்தி யென்மரும், இறையனாரும் கூட்டி நாற்பத்தி ஒன்பதின்மர். இவருக்குச் சிவபெருமானால் சதுரமாம் அளவரண்டு சாணளவதாய் சிவபெருமானால் கொடுக்கப்பட்டதும், மெய்ப்புலவர்களுக்கு முழம் வளர்ந்து இடங்கொடுக்கும் தெய்வத்தன்மை யுடையதும் கலைமகள் திருமேனியாகிய ஐம்பத்தி ஒரெழுத்தில் நாற்பத்தொன்பது எழுத்தும், நாற்பத்தி ஒன்பது புலவருமாயிருந்தாரென்பது திருவிளையாடல் புராணத்தில் முறையிடுகிறது.

ஸத்தியபாமை:—உருக்மணி! நீ சொல்வதெல்லாம் ஆகாயத்தில் மணற்கோட்டைக் கட்டுவதுபோலிருக்கிறது. ஆகையால் அவ்வாகாய வீண்கோட்டை நீ கட்டவேண்டாம். இதற்கு வேறு பிரமாணமுண்டா? நீ சொல்லத்தான் கேட்டேன். முதலில் சிவபெருமான் சொன்னார் யென்பதற்கு பிரமாணம் என்ன?

உருக்குமணி:—ஆ! ஆ! நன்று வினவினாய் காஞ்சி புராணத்தில், வடமொழியை பாணினி பகுத்தருளியதற் கிணையாய்த்

"தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாம் தொழுதேத்த
குடமுனிக்கு அருள்புரிந்தார் கொல்லேற்றுப் பாகரெனின்
கடல் வரைப்பின் அதன் பெருமை யாவரே கணித்தறிவார்" என்று

சொல்லியிருக்கின்றது யென்றார்.

ஸத்தியபாமை:—அப்படியிருந்தால் அதை ஒப்புக்கொள்வோம். ஆனாலும் தேவனால் செய்திருந்தாலும் தேவப்பிரீதி யில்லாமலு மிருக்கலாமே என?

உருக்குமணி:—அதன்று தேவப்பிரீதியுள்ளதே யென்பதற்குப்பலப் பிரமாணங்கள் உண்டு, முன்னே தானே சொல்லியிருக்கின்றேன். அக்கவியானது னக்குஞாபக மில்லைபோலும். அதாவது.—

"மெய்தாரணி குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையு மங்கு வாழவைப்பான்" யென்று அருணகிரியாராலும்,

"கடுக்கவின்பெறு கண்டனம் தென்றிசை நோக்கி
அடுக்கவன்று ஆடுவன் ஆடலி னினைப்பு
விடுக்க வாரமின் காறிரு முகத்தினை வீசி
மடுக்கவும் தமிழ்ச்செவி மாந்தபு மன்றே."

"விடை யுகந்தவன் பாணினிக்கிலக்கணம் மேனாள்
வடமொழிக் குரைத்தாங்கியன் மலையமாமுனிக்குத்
திடமொத்தி யம்மொழிக் கெதிராக்கிய தென்சொல்
மடமகட் கரக்கென்பது வழுக்கிற லன்றே."

"கன்னுதற்பெருங் கடவுளும் சுழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழேனை
மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப்படக் கிடந்தா வெண்ணவும் படுமோ."



"தொண்டர் நாதனை தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்ததும் மெலும்பு பெண்ணுருவாகக்
கண்டது மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொ லோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்."

என்று பரஞ்சோதிமாமுனிவரும் திருவாய் மொழிந்திருக்கிறார். இதுவுமன்றி திருவாதவூரடிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையாரென்னும் இரண்டையும் வேதத்தே யெழுதாது சொன்ன சிவபிரான், தமது அருமைத் திருக்கரத்தால் யெழுதி "பாவை சொன்ன வகயாம் கோவை சொல்" யென்று சொன்ன சிவபெருமான சகல ஜெஸ்வரியுமுள்ள தன்னாலேயே போதிய சான்று.

ஸத்தியபாமை:—ஆனாலும் ஆரியருள்ளும் சூத்திரரே யன்றி பிராமணரால் அங்கீகரிக்கப்படவில்லையே என்றார்.

உருக்குமணி:—நன்று சொன்னாய்; ஆ! ஆ! ஆ! ஆ! அருட்பாவாகிய தேவாரம், திருவாசகம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் திருவாதவூரடிகளும் பிராமணரன்றோ. திருவாய்மொழிசெய்த நம்மாழ்வார், திருமழிசையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் முதலிய ஆழ்வார்களும் தேவர். மணவாளமாமுனிவர் முதலிய சைவ வைஷ்ணவ ஆசாரியர்களும் பிராமணர்களே. தமிழிலக்கணம் செய்த தொல்காப்பியரும் பிராமணரே தமிழிலக்கிய உரையாசிரியர்களும், நச்சினார்க்கினியார், பரிமேலழகரும், பிராமணரே. இன்னும் தமிழில் பெரிய பெரிய நூல் செய்தவர்கள் பிராமணர்களே யிருக்கின்றனர்.

ஸத்தியபாமை:—அப்படி இருந்தாலும் என்? "செந்தமிழ்ப்பிராகிருதமும் பாப்பாரத் தமிழும், பழமையில் குழமை பேசலாம் பறமொழி யுமிழ்கிறது? அம்முதுமொழி பழுதாமோ? நீ இப்பழமொழி யறியாது பேசுகின்றாய் யென்றார்.

உருக்மணி:—அருமைத்தங்காய் அதன்று. 'செந்தமிழும் பிராக்ருதமும் பார்ப்பான் தமிழும் விழுவதுவே' என்பதே. இதன் கருத்து யாதெனில் வேளாளரால் செய்யப்பட்ட அநேக நூல்களும், பிராமணராலே செய்யப்பட்ட தொல்காப்பியமும் இல்லாவிட்டால் உலகத்தில் தமிழ் விழுவாய்விடுமென்பது நிச்சயம்.

ஸத்தியபாமை:—ஆனால் இக்காலத்தில் பிராமணர்கள் கைக்கொள்ளவில்லையே என?

உருக்மணி:—அறிவுள்ளவர்கள் சொல்லுவார்கள் மேற்போல் அறிவில்லாதவர்கள் திருபாஷையாகும் பொருள் வேண்டிய யெழுத்து அற்றதாய் மனிதர்களாகிய இன்னெழுத்தும் கூட்டி யொக்கவிட்டுவென்று மனிதர்களாலேயைத் தக்கொண்டதாயும் காலத்திற்குத்தகும் மனிதர்களாலேயும், வெள்ளையர்களாலும் கன்னக்கிறிஸ்துவர்களாலும் ஏற்படுத்தப்பட்டதாய் அமைக்கப்பெற்ற இங்கிலீஷ் பாஷையை தங்கள் வேதத்திலும் ஸமஸ்கிருதத்திலும் அருமையாய் கம்பரிலவாளிகள் காரியமற்ற திருபாஷையை தம் வேதம் காயித்திரிக்கும் மேலானதாகப்பாவித்து ஸதா பாதுகாத்து மனனபாடம் பண்ணவில்லையா யென்றும், இக்கியாயத்தை யொத்துத்தான் உன்கருத்து மிருக்கிறதென நினைக்கிறேன் யென்று ஸத்தியபாமைக்குச் சொன்னார்.

ஸத்தியபாமை:—உடனே நான் ஒருக்காலும் பொய் கூறேன் என்றாள்.

உருக்மணி:—ஸத்தியபாமா; உன் வார்த்தைகளுக்கும், கேள்விகளுக்கும் கருத்துக்கும் உள்ள ஆழ்ந்த கருத்தும், அறிவும் பெற இச்சிக்கும் ஜன்மபிரமாணரும் வெட்கி மதிமயங்கி சிரிப்பாரென்றால் காரியம் காரணம் பகுத்தறியும் காரிகையர்களும் அறிவிற்சிறந்த ஆசிரியர்களும் ஆச்சரியப்பட கேட்பாயேனென்று சொல்லினள்.

ஸத்தியபாமை:—இது எங்கும் நடவாத விஷயம். உருக்மணி நீ பொய் சொல்லுகிறாய் என்றாள்.

உருக்மணி:—என்னருமைத்தங்காய் இன்னும் என் அநுபவத்திலுண்டான ஒரு அநுபவ நிலைமையும் சொல்லுகிறேன் கேள். அதாவது, நான் விபவகார ஸமித்தியமாக ஓர் வைக்கில் வீட்டிற்குப் போயிருந்தபோது அங்கு அந்த வைக்கீலுக்கும் அவர் பிள்ளைக்கும் நடந்த விவாதத்தைச் சொல்லுகிறேன். நீ சாவதானமாய் கேழ்க்கக்கடவாய் என்று சொல்லத் தொடங்கினள். நான் குடமொக்கு மென்னும் மாநகரத்தில் ஈசான்யதானன் அக்கிரகாரத்தில் உள்ள ஓர் பிரபுவாகிய வைக்கீலிற்கும் அவரது அருமைத்திருக்குமாரருக்கும் நடந்த விவகாரமாவது: இங்கிலீஷ் படிப்பை வெளியாதிருந்த தன்னுடைய பிள்ளையின் குற்றத்திற்காக தம் குமாரனிடத்தில் கோபாவேசராகி, அடே பயலே; யான் இனி உனக்கு உபநயனஞ்செய்வித்து வேதபாடசாலையிலனுப்பி பஞ்சாதி சொல்லும்படி போதிப்பிக்கச் செய்வேனென்று சொல்லவே, அவ்வருமைத் திருக்குமாரன் நடுநடுங்கி நிலைகலங்கி தந்தை தாளிணையிலும் விழுந்து நமஸ்கரித்து அண்ணா அண்ணா, அப்படிச்செய்யவேண்டாம். இனி நான் இங்கிலீஷ் பாடம் கவனமாய் படிப்பேன். லண்டன், கேம்பிரிட்ஜ்முதலிய விடங்களுக்குப்போய் ஹைதையர், யாகோப் முதலானவர்களுக்கு உவப்பாகிய புண்ணிய வித்தியா ஞான நகருகளுக்கு ஏகி, அவ்விடத்து துரைமார்களின் மிகுந்த படிப்பைப் பின்னிடச் செய்யும்படியாய் படித்து மேலான இராஜ உத்தியோகம்பெற்று வருகின்றேன் என்று மிகுந்த பயபக்தி வினயத்தோடு வணங்கிச்சொன்னான். இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த நான் ஐயா, உன் தங்கள் அருமைத்திருக்குழந்தைக்கு ஸமஸ்கிருத சண்டாள பாஷையைக் கற்பித்து, உபநயனம் என்னும் கான்வர்ட்டு பண்ணி, வேதபாடசாலை யென்னும் படுகுழி வழியாய் நரகிற் செலுத்த எத்தனித்தீர் யென்றேன். என் வார்த்தையை இப்படியாகக்கேட்ட இம்மஹான் வெட்கி மனவருத்தமடைந்து ஐயா, இக்காலத்து கூற்று அப்படிச் சொல்லலாயிற்று என்று வருந்தியிருக்க அதற்கு அப்போது எதா ராஜா ததாப்பிரஜா வென்றேன். அதற்கு அம்மஹான் நம் பாஷையும், நம் குலமும், நம் மார்க்கமும் என்று விளங்குமோவென ஏக்கமடைந்தார். கோர்ட்டு அச்சபாரத்தி லெல்லாம் தமிழில் அச்சிட்டிருக்க நீங்கள் இங்கிலீஷில் எழுதினால் என் அவர்கள் ஸந்தியா வந்தன மந்திரத்தையும் இங்கிலீஷில் அனுசரிக்கக்கூடாதென்று சொல்லமாட்டார்களா? லோயர் ஸெக்கண்டரி, மெட்ரிக்குலேஷன் பிரவேச பரீக்ஷைகள் தமிழிலேயே போகலாமென்று வைத்ததை யார் அநுஷ்டானத்திற்கு கொண்டுவந்தார்கள். நம்மவரில் ஒருவருமில்லையே அந்தோ



பாலம். ஸ்வேதர்களோத பல்லாயிரம் மைல் கடந்து கோடிக்கணக்காய் பொருள் கொண்டுவந்து தங்கள் மதப்பஞ்சரத்தில் ஆரியப்பறவைகளை தங்கள் குருவாகிய பார்வை வைத்து இங்கிலீஷ் வலையை வீசிப்பிடித்து அடைபட்ட ஆரியப்பறவைகளுக்கு ஓர் எல்லை யில்லையே. எத்தனையோ பேர் அநேக கம்பெனிகளில் பணம்போட்டு இலவுகாத்த கிளிபோல் ஏங்கி நிற்கவில்லையா? நம்முடைய பணத்தை வித்தியா தர்மத்தின் பொருட்டு செலவிட்டு பெரும் புகழும் பெரும் புண்ணியங்களையும் தேடின் வருஷத்திற்கு நூற்றுக்கு ஆறு ரூபாய் வட்டிக்கு குறையாமல் கிடைக்குமே. இதையறிந்தும் அறியாத நம்மவர்கள் "தன்கைப்பொருளும் தன்னுயுதமும் பிறன்கையில்கொடுக்கும் பேதையும் பதே" என்ற வாக்கியத்திற்கு இலக்காக நம்முடைய பொருளையும் புத்தியையும் நம அருமைத் திருக்குழந்தைகளையும் அவர்களுக்குக் கொடுத்தால் நாம் எப்படிக் கடைத்தேறுவது என்றேன். இப்பொழுதாவது நாம் "பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு என்ற முதுமொழிக்கு இணங்கி நமது அரிய அறிவில் தேடிய பாரிய பொருளை அன்னியரிடம் கொடாமலும் நம் குழந்தைகளையும், அறிவையும் அவற்றில் தத்தம் பண்ணாமலும் தங்கள் தங்கள் பொருளைக்கொண்டு இத்தனை மகத்துவம் பொருந்திய தமிழ் வித்தியாசாலைகளை ஸ்தாபித்து வித்தியா வியாபகஞ்செய்து பெயசம் பொருளைத்தேடி புத்திரர்களை அவ்வித்தியாசாலையி லனுப்பி புருஷார்த்தத்தை யடையச்செய்து புத்தியை இத்தமிழ் பாஷையில் செலுத்தி புத்தி முக்தியை யடையும்படிக்கு சிவபெருமானை பிரார்த்திக்கின்றேன். தேவ பாஷை இரண்டில் தேவர்கள் பேசும் பாஷை வடமொழி, தேவர்க்கு பிரியமாய் மனிதர் பேசும் பாஷை தென்மொழி. தமிழென்றால் இனிமை யென்கிற அர்த்தம் கடவுளுக்கு கேட்க இனிமையான பாஷை தமிழ் என்றாயிற்று.

(இன்னும் வரும்).

D. பஞ்சநதய்யர்,
ஸிசர்வ் பாடசாலை உபாத்தியாயர்,
கும்பகோணம்.

## முனையடுவார் நாயனார் சரித்திரம்

கடல் புடைசூழ்ந்த இப்பெரும்பூமியின்கண் திருவளர்ந்தோங்கும் பரதகண்டத்துள் எவற்றிற்கு முதல்வராகியுள்ளோரின் பெரிய தவத்தையுடைய அகத்திய முனிவரது கமண்டலத்தினின்றும் வெளிப்பட்டுப் பூமிதேவியின் பாற்றோன்றிய திக்கிலமாலையைப் போலத் காவிரியாற்றாற் சிறப்புப்பெற்று பலவளங்களும் நிறைந்துள்ள பாசோழநாட்டில் வேதிரு சோணியம்மைசமேத ஸ்ரீ அருட்சோமநாதசுவாமி திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் புண்ணியக்ஷேத்திரமாகிய "திருநீடூரிலே" மண்மிகுந்தோங்கும் வேளாளர் குலத்தில் விண்ணுலகுளோர்முதல் மண்ணுலகுளோர் யாவர்களும் போற்றிப்புகழ்ந்து பூமாரிபொழிய புரட்டாசிமீ மகநக்ஷத்திரங்கூடிய சுபசோபன முகூர்த்தத்திலே முனையடுவார்

நாயனார் சுவாமிகள் திருவவதாரம் செய்திருந்தனர். அவர் ! ஆதி, அந்தம், உருவம், அருவம், குணம், குறி, முதலியவைகளில்லாதெக்கும் நிறைந்து மனம், வாக்குக்கெட்டாது உயிருக்குயிராயிருப்பதுபோன்ற அளவிறந்த தன்மைகளையுடைய பரிபூரணமான ஒப்பற்ற சிவ்ஞானப்பொருளாயிருக்கிற சிவபிரானின் திருவடிக்கர்ச்சித்துத் தமித்தன்பு பூண்டொழுகி சிவாகம விதிப்படி

"உச்சியே நெற்றிகண்ட முடம்பரை வல்லை பின்னர்
மெச்சி வெண்சீ ரூன்று விரல் திடச்சாத் தினின்று
கச்சியும் பெண்மாக கவைபோர் புலித்தோலைவி
யிச்சையாம் பரசுபாதித்தோ ரூ மக்கிருக்கும்மன்றே"

எனச் சிவபுராணத்திற் கூறியவாறு திருநீற்றைச் சகலவினைமையுந் தீர்க்கும் மருந்தென்று உண்மையாகத்தியானித்தன்புடன் உச்சி, நெற்றி, கழுத்து, உடம்பிற் பாதியான விப்பு நால்கை முதலிய மற்ற ஸ்தானங்களிலும் முறைமைப்படி மூன்று விரல் பொருந்தத்தரித்து

"உருத்திரன் விழித்துளிகளே யுருத்தி ராக்கந்
திருத்திரவி சந்திரன் றிருந்து கண்ணணி
வருத்த மிகுபெத மிரண்டாறு பதினறு
பொருத்தொருமுகங்ள் திறம் போன்றவைகளாரே"

எனச்சொல்லுகின்ற உருத்திராக்ஷமணிகளில் சிவாகம விதிப்படி ஒரு முகமுதல் பதின்மூன்றுமுகம் வரையுள்ள மணிகளை முறையே

"மிக்கபதின் மூன்றிற்கு மேலுமுகமில்லை
தக்கதலையொன்று தலையாலையு நாலெண்பா
மக்கலைமிரட்டிகள் மார்க்கு நூற்றெட்டாம்
கைக்கணிகள் பன்னிருவர்கான தலைமைப்பான்"

எனச்சொல்லும் உயர்வாகிய பதின்மூன்று முகமுள்ள மணிகளுக்குமேற்பட்ட மணிகளில்லை. அம்மணிகளை தகுதியாகிய சிகையினிடத்தில் ஒரு மணியும் சிரமாலை முப்பத்தாறுமணியும், கழுத்திற்கு எழுபத்திரண்டு மணியும், மார்பிற்கு நூற்றெட்டு மணியும் கைகளுக்குப் பன்னிரண்டு மணியும் வாகுவளையம்பதுமணியும் அணிந்துச் சிவபிரானை வேதாகம விதிப்படி பயபக்தியுடன் பணிந்து இல்லறத்தை ஒழுக்காக நடத்தி சிவனடியாரைச் சிவமெனச் சிந்தையுட்கருதி அதிதீவிரபராக்கிரமசாலியாய் மண்டலம் எண்டிசை மன்னர்கள் புகழ்ந்தேத்த நன்கு வாழ்ந்திருந்த அவரிடம் சத்துருக்களுடைய போர்முனையிலே தோற்று இராஜாக்கள்வந்து முறையிட்டு இராஜ்யத்தை மீட்டுக்கொடுக்கக் கூலியேற்று விதிப்படி யணிந்த விபூதி, உருத்திராக்ஷத்தோடின் பூரித்தபுயமும் நீதி சாஸ்திர நெறிமுறைப்படியன் தெரிந்த சொற்பொருளையும் விற்பனமும் விளங்கிய சௌந்தரியமும், கூர்வேல் தாங்கும் கியமுறைடைய முனையடுவார் நாயனார் சுவாமிகள் அவ்வரசர்களுக்காகப் போய்ப்போர்செய்து வெற்றிக்கொடிநாட்டி யென்று பொருள்சம்பாதித்துச் சிவனடியார்களுக்குத் திருத்தொண்டுசெய்து திருவமுது அறுசுவையுடனளித்து அவர்கள் வேண்டியமட்டும் திரவியம்



கொடுப்பதித்து நிறம்பக்கொடுத்துச் செல்வந்தராய்ச் செழித்தோங்கி நன்கு வாய்த்திருந்ததினால் அவருக்கு "முனையடுவார் நாயனார்" என்னும் திருநாமம் உண்டாயிற்று. அவர் நெடுங்காலம் இப்படியாகிய திருத்தொண்டைச் செய்துகொண்டிருந்து பங்குனிமீ பூசநக்ஷத்திரத்தில் கைப்பெருங்கடலையுடைய சிவபிரான் திருவடிகளைக்கூடாச் சாயுஜ்யப்பதம் பெற்று சிவலோகத்தையடைந்து பேரின்பத்தை அநுபவித்துக்கொண்டு அறுபத்துமூன்று நாயன்மார்களிலொருவராய் நன்குவாழ்ந்திருக்கின்றார்.

அம்முனையடுவார் நாயனார் சுவாமியின் குருபூஜையை ஓர் புண்ணியபுருஷர் இராமநாதபுரம் சமஸ்தானம் பரணச்செய் கோட்டையூர் மகா-ா-ஸ்ரீ சி. வ. சிதம்பரம்பிள்ளையவர்களை ஆனைத்தும் பங்குனிமீ பூசநக்ஷத்திரமுதல் பிரதிவருஷம் பங்குனிமீ பூசநக்ஷத்திரத்திலுஞ் செய்துவரும்படி திருவாய் மலர்ந்தருளிய வண்ணம்

"பருதிமதிமாவுலகு பாண்டிநாட்பரனச்செய் பகருங் கோட்டையூர்நல்
லருமையிலசிதம்பரன்றனைத்தந்தாய்த்தலைமையமீனப்பூசாவில்
கருணைமிகு முனையடுவார்மைலபசமர்ச்சித்துக்களிப்புடனே காக்கக்கூறு
யுருத்திராக்கமணி நீறுமுடையாலீ யணிந்தோர்க்கே யமுதவையோடமுதிட்
டனரே"]

எனப் பிரதிவருஷமும் முனையடுவார்நாயனார் சுவாமிகள் குருபூஜை நடத்திவருவதோடு அன்றையனார் சுவாமிகள்பேரால் மனை நிலம்விட்டு முனையடுவார் நாயனார் திருமடம் அமைத்துத் தருவதாய் சித. கா. சிதம்பரம்பிள்ளை 1904-ம் வருஷம் ஆகஸ்டு 1உ மாலை 1மணிக்குக் கழுதி சப்ரிஜிஸ்திராரவர்களாபீசில் 1வது புஸ்தகம் 111 வது வால்யம் 59-60-வது பக்கங்களில் 2092, நிர். தஸ்தவேஜாய் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தபடியே முடித்து குரோதிவருஷம் ஆவணிமீ 19உ விடப்பட்டு அவ்வருஷம் பங்குனிமீ 5உ வந்த முனையடுவார் நாயனார் சுவாமிகளின் குருபூஜையையும் சித. கா. சிதம்பரம்பிள்ளையவர்களாலேயே நடத்தி மேற்படி திருமடத்தில் பிரதிவருஷமும் தவறாது எக்காலத்திலும் அறுபத்துமூன்று நாயனமார்களிலொருவராகிய முனையடுவார் நாயனார் சுவாமிக்குக் குருபூஜை குறைவன்றி நடந்துவரவேண்டுமென்று அவர் தனது விளைநிலங்களில் மேற்படி முனையடுவார் நாயனார் சுவாமியின் திருமடத்தின் பேருக்குச் சாசுவததானமாய் ஒன்றரையேமாகாணி அறுமாகாணிக்கு குருக்கம் விளைநிலத்தை 1905-ம் வருஷம் ஏப்ரல்மீ 26உ கழுதி சப்ரிஜிஸ்டராபீசில் 1 வது புஸ்தகம் 121 வது வால்யம் 166 167-வது பக்கங்களில் 712 நெ. தஸ்தாவேஜாய்த் தாக்கல் செய்துவிடப்பட்டு அவ்வரும்படியைக்கொண்டே விசுவாவசுவருஷம் பங்குனிமீ 22உ வந்த குருபூஜையும் நடந்தேறி முனையடுவார் நாயனார் சுவாமிகள் திருமடம் நன்குவிளங்கிவருகின்றது. சுபம்.

மு. திருமாலழகு பிள்ளை,

வில்லாளி ஜனகன் யெதிர்கொண்டுவந்தானே இராமச்சந்திரா
வீதை கையைப்பிடித்து சுபகாரியஞ் செய்தாய் இராமச்சந்திரா
நீதிபாய் தம்பிகட்கு கலியாணஞ்செய்தாயே இராமச்சந்திரா
வீரத்துல ஜனும் ஜனகன் மனைவானா இராமச்சந்திரா
மாறனும் மோஹிக்க வீதிவலம் வந்தாயே இராமச்சந்திரா
ஆதிகாரணன் வில்லை ஆரோகணஞ்செய்தாய் இராமச்சந்திரா
வாதுசெய்த பரசுராமனைத் துரத்தினாய் இராமச்சந்திரா
தந்தைதாயுடனே திருநகரி சேர்ந்தாய் இராமச்சந்திரா
வந்த ஜானகியோடு மகிழ்ந்து யிருந்தாயே இராமச்சந்திரா

## அயோத்தியாகாண்டம்.

அரசர் குருவுடனே ஆலோசனை செய்தார்கள் இராமச்சந்திரா
வரிசையாயபிஷேகம் செய்ய எத்தனித்தானே இராமச்சந்திரா
மேதினியை ஆளவைத்த லக்கினத்தில் இராமச்சந்திரா
மாதவத்தோர் யேத்த மாதாசொல் கேட்டாயே இராமச்சந்திரா
கங்கையைத்தாண்டி குகனுடன் நேசித்தாய் இராமச்சந்திரா
யெங்கும்புகழுஞ் சித்திரகூடஞ்சேர்ந்தாயே இராமச்சந்திரா
காடேகவும் அரசன் நாடேகவும் இராமச்சந்திரா
வாடிவருந்திப் பரதனும் வந்தானே இராமச்சந்திரா
ஆதித்தன் குலத்திலே அதிகாரஞ்செய்ய இராமச்சந்திரா
பாதுகையைத்தந்து பாதனை நியமித்தாய் இராமச்சந்திரா
ஆபாஸம் வரச்செய்த காயாஸத்தின்மேலே இராமச்சந்திரா
நீயோர் அஸ்திரம்விட்டு நயனத்தைக் களைந்தாயே இராமச்சந்திரா

## ஆரண்ய காண்டம்.

அத்திரிமுனிதன்னை பக்தியோடு தொழுதாய் இராமச்சந்திரா
பத்தினி அநஸூயை பிராட்டிக்கு நலஞ்செய்தாய் இராமச்சந்திரா
விராதர்கள் வாழுங்காட்டில் நடந்தாயே இராமச்சந்திரா
விராதனைக்கொன்று விண்ணுலகீந்தாயே இராமச்சந்திரா
சரபங்கமுனிக்குத் தரிசனந்தந்தாயே இராமச்சந்திரா
வரமுனி அகஸ்தியர்பால் வில்லை வளைத்தாயே இராமச்சந்திரா
தண்டகவனத்தோர் தண்டனிட்டெழுந்தாயே இராமச்சந்திரா
அண்டியபெருச்செயல் தந்திருந்தாயே இராமச்சந்திரா
அண்டர்கள் இடர்தீர தண்டகம் வந்தாயே இராமச்சந்திரா
சண்டி சூர்ப்பனகை காதுமூக்கரிந்தாய் இராமச்சந்திரா
கானகத்தில் வந்த கரனையும் வதைத்தாயே இராமச்சந்திரா
ஞானவிமலமாயனை தழுவியணைந்தானே இராமச்சந்திரா
பேராவில் பஞ்சவடி கண்டாய் இராமச்சந்திரா
கூராளவாளினால் மாரீசன் உயிர்கொண்டாய் இராமச்சந்திரா
வானோர் உயிரை நீக்க வஞ்சைதான் இறையிருந்தானே இராமச்சந்திரா

# இராமச்சந்திரா.

### விருத்தம்.

### வால்மீகி ஸ்துதி.

அண்டர்கோன் அணியரங்கத்தம்மானே ஆராதிக்க
யெண்டிசையோரும்போற்ற இராமனும் வந்துதித்த
புண்டரீகாக்ஷன் தன்னோர் புகழையே விரித்துரைக்கும்
மண்டலம் போற்றும் வால்மீகமுனிவனை வணங்கினேனே.

### அனுமார் ஸ்துதி.

ஸத்தியவானென்றும் தர்மாத்துமாவென்றும்,
தம்பிசொன்ன அஸ்திரமனைத்து சத்துருவைப் போய் ஜெயித்த
இராமபத்திரன் சரிதையைச் சொல்லுவதற்காக வாயு
புத்திரனும் அனுமந்தனெனும் ஆஞ்சநேயன் காப்பு.

### நம்மாழ்வார் ஸ்துதி.

காரிமாறப்பிரானாக வந்துதித்துக் காசினியில்,
மாரிபோல் தமிழ் வேதத்தை விட்டுவைவளவத்தை,
பாரெங்கும் பாவச்செய்துவைத்த பெருகன் பராங்குசனும்
வீரன் ரெகுபதி கதைசொல்லவந்து வணங்கினேனே.

### கண்ணிகள் (காம்போதி)

### ஆரண்ய காண்டம்.

தி தேவர்கள் பிரார்த்தித்து புகழ்ந்தேத்த இராமச்சந்திரா
தை ஸ்தாபிக்க தரணியில் உதித்தாயே இராமச்சந்திரா
நும் தெய்வமென்று தசரதர் மகிழ்ந்தேத்த இராமச்சந்திரா
தி கௌசல்லிக்கு ஆனந்தந்தந்தாயே இராமச்சந்திரா
ரகுவம்சத்தில் ஆட்சியாயிருந்தாயே இராமச்சந்திரா
டனைநேருடு கண்காக்ஷி தந்தாயே இராமச்சந்திரா
கலையோதி வீரனாயிருந்தாயே இராமச்சந்திரா
தாக்களை வணங்கியிருந்தாயே இராமச்சந்திரா
தை இரட்சிக்க யோகியுடன் சென்றாயே இராமச்சந்திரா
தைப்போல்வந்த தாடகையைக் கொன்றாயே இராமச்சந்திரா
ல் கௌசிகன் பரமாஸ்திரந் தந்தானே இராமச்சந்திரா
மூதலோரை வாரி நீ யெரித்தாயே இராமச்சந்திரா
யின் கதையைக்கேட்டு நீ மகிழ்ந்தாயே இராமச்சந்திரா
ர் தரிக்க மங்கையமர்ந்தானே இராமச்சந்திரா
நின் சாபத்தைவிட்டு இரக்ஷித்தாயே இராமச்சந்திரா
சரிதையை விசுவாமித்திரன் விரைத்தான் இராமச்சந்திரா
த்தைப்பார்க்க நீ யேகினாய் மிதிலைக்கு இராமச்சந்திரா
ம் வராமல் வில்லை நீ வளைத்தாயே இராமச்சந்திரா
ன ஞாலையைக் கண்டு மகிழ்ந்தாயே இராமச்சந்திரா

மான்விழியாளைத்தேடி மனங்கலங்கி வந்தாய் இராமச்சந்திரா
அடாதுசெய்தவனை அடவியில் வதைத்தாயே இராமச்சந்திரா
அச்சடாயு இராஜனுக்கு சுரலோகம் கொடுத்தாயே இராமச்சந்திரா
வக்கரம் நீங்கி யசுரன் மெய்ச்ச ஸ்துதி செய்தானே இராமச்சந்திரா
சுக்கிரீவனிடம் சிநேகம் பேசேர்ந்தான் இராமச்சந்திரா
உபயவிபூதிக்கும் அரசனானாயே இராமச்சந்திரா
சபரிக்கு மோக்ஷைதந்தாயுஞ்சயம் தந்தாயே இராமச்சந்திரா

கிஷ்கிந்தா காண்டம்.

பம்பாதீரத்திலே பார்த்தாயநுமானை இராமச்சந்திரா
சம்பிரமமாய்ப்போய்ச் சேர்ந்தாய் சுக்கிரீவனை இராமச்சந்திரா
வாலியைக்கொல்ல மராமரந்துளைத்தாயே இராமச்சந்திரா
காலன் வேலைசெய்ய வாலிதன்னை வதைத்தாயே இராமச்சந்திரா
வானர வீரனுக்கு மகுடஞ்சூட்டினாயே இராமச்சந்திரா
சேனைகளைக்கூட்டி தேடவிட்டிருந்தாயே இராமச்சந்திரா

சுந்தர காண்டம்.

அங்கதன்முதல் வானரர் அநுமானோடேகினான் இராமச்சந்திரா
இலங்கையைச் சாட ஓர் கடலைத் தாண்டினான் இராமச்சந்திரா
சீதையர்தமை தேடியலைந்தாரே இராமச்சந்திரா
அசோகவனத்திலே அம்மாளைப்பார்த்தாயே இராமச்சந்திரா
சீதையைக்கண்டனுமான் செப்பினான் செய்தியை இராமச்சந்திரா
மோதிரத்தைத்தந்து வாங்கினான் மணிதன்னை இராமச்சந்திரா
கடியாய்வந்த இராக்ஷசரை யழித்தாயே இராமச்சந்திரா
அநுமனைக்கூட பட்டணஞ்சுடச்செய்தாயே இராமச்சந்திரா
அநுமானைவேவிவிட்டு இலங்கையைச் சுட்டாயே இராமச்சந்திரா
ஜானகியின் சேதியைத் தூதனால் கேட்டாயே இராமசந்திரா
ஆடாதசேனையோடு ஆழிமேலிருந்தாயே இராமசந்திரா
சூடாமணியைக்கண்டு நீகோபத்தீக்கெழுந்தாயே இராமசந்திரா

யுத்தகாண்டம்.

ஜானகியைமீட்க தக்க படையுடன் சென்றாயே இராமசந்திரா
சாகரத்தைத்தோற்றி திருவணைக்கட்டினாய் இராமசந்திரா
சரணாகதிசெய்த சாதுவை ரக்ஷித்தாய் இராமசந்திரா
வருணனையத்திண்மேல் வழிசெய்து கர்ச்சித்தாய் இராமசந்திரா
நம்பும் விபீஷணனுக்கு இராஜ்யம் தந்தாயே இராமசந்திரா
கும்பகர்ணன்தன்னை கூறுகூறாய்ச்செய்தாயே இராமசந்திரா
இந்திரஜித்தன்தன்னை அந்தரத்திற்பெற்ற இராமசந்திரா
மந்திரஞ்சொல்லிவென்று வந்தான்தம்பி இராமசந்திரா
மூலபலத்தை முழுதும் துடைத்தாயே இராமசந்திரா
காலனேமிதன்னை காலனூருசேர்த்தாய் இராமசந்திரா
இராவணனைக்கொன்று நாடெங்கும் காத்தாயே இராமசந்திரா



மூவரின் முதல்வன் நீயென்றுவிதிசொன்னார் இராமசந்திரா
இந்திராதிதேவர்கள் அந்திரத்தில் வந்தார் இராமசந்திரா
தந்தையைக்கண்டு வந்தனஞ்செய்தாயே இராமசந்திரா
அக்கினியில் குதித்தென் அன்னையெழுந்தாளே இராமசந்திரா
உக்கிரம்நீங்கியவனை ஒப்புக்கொண்மகிழ்ந்தாயே இராமசந்திரா
புஷ்பகத்திலேறி தட்சணம் திரும்பினாய் இராமசந்திரா
இலட்சுமிசீதைக்கு சேதுவைக்காட்டினாய் இராமசந்திரா
பரத்துவாஜமுனிவன் பாதம்பணிந்தாயே இராமசந்திரா
அறஞ்செய்யவிரும்பி அயோத்திக்கேகினாய் இராமசந்திரா
தாயார்மூவரையுந் தண்டனிட்டெழுந்தாயே இராமசந்திரா
வாயாரத்துதித்துவசிட்டரைப்பணிந்தாயே இராமசந்திரா
பரதாதிகள்வேண்ட பட்டந்தரித்தாயே இராமசந்திரா
வரதாவரதாவென்று மாமுனிகள்மகிழ்ந்தார்கள் இராமசந்திரா
சீதாலட்சுமண பரதசத்துருக்கனரோடு இராமசந்திரா
மேதாவியநுமந்தன் உன்னைப்போற்றினின்றான் இராமசந்திரா
சத்தியவான்யென்று சாத்தினார்முனிவர்கள் இராமசந்திரா
பத்தரை ரட்சிக்கும்பாதரென்றார்தேவர்கள் இராமசந்திரா
இராமஇராஜியமென்று நார்புகழ்ந்தார்கள் இராமசந்திரா
நாமத்தைச்சொன்னோர்க்கு ஸாயுஜ்யபதம் ஈந்தாய் இராமசந்திரா
எத்திசையிலும் வந்து இரட்சித்து அருள்வாயே இராமசந்திரா
பக்தர்முதலோர்க்குமுக்திதந்தருள்வாயே இராமசந்திரா
சுந்தரனுகிய சதனை தந்தருள்வாயே இராமசந்திரா
எத்தப்பக்கத்திலும் வந்தருள்செய்வாயே இராமசந்திரா
ஆகமஅனுட்டான மொன்றுமறியேனே இராமசந்திரா
இராமதாசன்மேல்வேக கண்ணனே அருள்செய்வாய் இராமசந்திரா
மங்களம்வரச்செய்வாய் மதுசூதனே இராமசந்திரா
தக்கணக்கட்டிகாப்பாற்றுமெல்லோரை இராமசந்திரா

## தத்துவஞானம்.

## கபிலசாங்கியம்.

பிரதானமென்கிற பிரகிருதியே இப்பிரபஞ்சத்திற்கு மூலகாரணம்.

சாங்கிய சூத்திரம்.

அத திரிவித துக்காத்தியந்த நிவ்ருத்திர
த்தியந்த பரம புருஷார்த்த;

ஆத்யாத்மிக (சரீரத்தாலுண்டாவது) ஆதிதெய்விக (தெய்வீகமாக வருவது) ஆதிபௌதிகம் (பூதங்களாலுண்டாவது) என்கிற இம்மூன்றுவித துக்கங்கள் முற்றிலுமொழிவதே பரமபுருஷார்த்தமாம். அது எங்ஙனமுண்டாகுமெனில் ரஜோகுணதமோ குணங்களையொழித்து கேவலசத்குணத்தை அபிவிருத்தி செய்வதாலுண்டாகிறது.

(ஸத்வாத்ஸம் ஜாயதே ஞானம்)

என்றபடி சத்வகுணத்தாலேயே ஞானோதயமாகிறது. ஆனதாலதற்குச் செய்யவேண்டுவதியாது. சாதுக்கள் சங்கத்தைச் செய்து தர்*குணங்களை யொழித்துக்கொள்ளவேண்டுமென விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது விரிப்பின் வளரும். இவர்களை ஸேச்வரஸாங்கியரென்னும்யோகிகள் சில விஷயங்களில் மறுக்கிறார்கள்.

பாதஞ்சலயோகம்-

சாங்கியர்களும் யோகிகளும் அநேக விஷயத்தில் ஒற்றுமையாக விருப்பினும் ஈசுவரனை நிமித்தகாரணமாகக் கூறுகிறார்கள். எங்ஙனமெனில் சத்வரஜஸ்தமோ குணரூபமான பிரதானமே உபாதானகாரணமாக விருப்பினும், ஸர்வஞ்ஞனாய், ஸர்வகர்த்தாவாய், சத்திய ஸங்கல்பராய், பரமானந்தராய், சர்வபிராணிகளுடைய, இருதயத்திலும் விளங்குபவராய், இருக்கும் ஈசுவரனை நிமித்தகாரணமாய்க்கொண்டு பிரதானம் பிரவிருத்திக்கின்றது. ஆனதால், பிரதானத்திற்கு ஸ்வதந்திரமாய் பிரவிருத்தியில்லை. சேதனமின்றி, ஜடமான பிரதானமானது பிரவிருத்திக்க முடியாதானதால் ஒரு சேதனமான ஈசுவரனையே ஜகத்காரணமாக ஒப்புக்கொள்ளவேண்டும். அந்த ஈசுவரனுடைய சர்வஞ்ஞாதி குணங்களை யடைவதே மோக்ஷம், அதை யெப்படி யடைவதென்றால்,

யோக சூத்திரம்.

யோகச் சித்தவிருத்தி நிரோத:

யோகமென்பது மனதின் விருத்தியை வெளியில் விஷயத்தை இச்சித்துச்செல்லவொட்டாமல் தடுத்து ஒடுக்கி ஒருவழிப்படுத்தலே. அது எட்டுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. யமம், நியமம், ஆசனம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தியானம் தாரணை, சமாதி என்பனவாம். அம்முறையே ஒவ்வொன்றாக குரு உபதேசத்தாலியற்றி இறுதியிற் சமாதியை யடைந்தால் பரமானந்தமான ஸத்திய ஸங்கல்பத்தையு



டைய ஈஸ்வரத்துல்லியருகலாம், என்பதே விரிவஞ்சி விடுத்தாம். இவர்களை யின்பற்றியே அநேக சித்தர்களும் சிற்சில பேதமான ரஸகற்ப சித்திகளோடு போகமியற்ற வேண்டுமெனக் கூறுகிறார்கள். நிற்க ஈசுவரன் ஒருவனுண்டென்று வாதிப்பவர்களி லனேகபேதமுண்டு. அவர்களில் துவைதிகளான மாதவர், சைவர், முதலியோர், இவ்வுலகமும் சத்தியம், மாயையும் சத்தியம், ஈசுவரனும் சத்தியம், ஜீவனும் சத்தியமென்கிறார்கள்.

மாதவர்.

சர்வலோகேசுவரனான விஷ்ணுவே ஜகத்காரணம். அவரோடு ஜீவர்களும் அவித்தியாபத்தர்களாக இருக்கிறார்கள். மாயையும் சத்தியமே பூதாதிகளும் சத்தியமே. இவைகள் எப்பொழுதும உள்ளனவே பிரளயகாலத்திலழிகினும் தன் மாத்திரைகளின் அம்சமான அணுக்களழிகிறதில்லையெனத் தருக்கமதத்தை யொட்டிக் கூறுகிறார்கள். ஜீவர்களுக்கு மோக்ஷமென்பது யாதெனில் ஈசுவரனை பக்திசெய்தால் அவரது அனுக்கிரஹத்தால் அப்பிராகிருதமான ஈசுவர துல்லியமான சரீரத்தோடு ஸ்ரீ வைகுண்டத்திற்குச்சென்று மஹா விஷ்ணுவோடு கூடிவாழ்வதே.

தார்க்கிகர்கள்.

அவரது சங்கல்பத்தால் ஈசுவரனொருவனை யொப்புக்கொண்டாலும் பிரபஞ்சமானது பரமாணுக்களின் பரிணாமமே என்கிறார்கள். பரமாணுக்களானது ஒன்றோடொன்று கூடி அணுவாகிறது. அணுக்கள் ஒன்றோடொன்றுகூடி அவிணுகமாகின்றது. அவிணுகம் திருணுகமாகின்றது இங்ஙனந் முறையே பூதங்களினுடைய அணுக்களின் பரிணாமமே பிரபஞ்சமென்கிறார்கள். ஜீவனுக்கு இருபொத்தொருவிதனுக்கதுவம்ஸமே மோக்ஷம்.

சைவஸித்தாந்திகள்.

பதி, பசு, பாசம், எனமூன்று அநாதியாயுள்ளது. பதி நித்தியமுக்தர். அவர் பரம சிவனே, அவர் கைலாசவாஸி. பசு ஆணவம். கார்மணம் மாயை யென மும்மலங்களால் பந்தப்பட்டிருக்கிறான், அப்பாசத்தை ஈசுவரபூஜாதிகளான சரியை, கிரியை, யோகாதிகளால் ஒழிக்கப்படின், ஜீவர்கள் கைலாயத்திற்குச் சென்று ஈசனது திருவருள்பெற்று அவருக்குச் சுதிருசமாக, வாழ்வதே முக்தி. அதையே வேதசிவாகமங்கள் கூறுகின்றது என்கிறார்கள். இங்ஙனமே விசிஷ்டா

த்துவிதிகளும் கூறினும் சிறிது பேதத்தைக் கூறுகிறார்கள். அவர்களும் சைவ வைணவ பேதத்தையுடையவர்கள். சைவர் ஸ்ரீகண்டாச்சாரியார், இங்ஙனமே த்வைதவாதத்தை வாதிக்கக்கூடிய நாரதபாஞ்சராத்திரம். வல்லபமதம், பாகவதமதம் தெரிய அநேக வாதங்களுள. அவைகள் ஒன்றுக்கொன்று சிற்சில பேதங்களையேயுடைத்தாயிருக்கின்றன. இவ்வுலகத்தின் காரணத்தை விசாரிக்க புகுந்த மகான்களில் அவரவர் அறிந்ததைக் காரணமாகக் கூறுகிறார்கள். எல்லோரும் இறுதியில் எங்கும் வியாபித்த கடவுளையே ஒவ்வொரு அம்சங்களாய்க் கூறுவதால் ஒருவரிடத்தும் த்வேஷம் பாராட்டலாகாது. கிறிஸ்துவாதி மதவாதிகளும் ஈசுவரன் ஒருவன் உண்டென்று கூறுகிறார்கள். தேகாத்மவாதிகளான நாஸ்திகரும் ஈசுவரனை இல்லையென்று கூறினும் இல்லையென்று சொல்லுகிறவன் ஒருவன் இருக்கிறானோ இல்லையோவெனில் அங்கு யோசிக்கவேண்டிவரும். அவர்களும் விசாரித்து மிக்க சிரமப்பட்டால் ஈசுவரனை நம்புவதற்குத் தொடங்குவார்கள். ஆனதால் எந்தெந்த வாதமாயினும் வாதித்து ஈசுவரனைத் தெரிந்து கொண்டாலன்றி அவர்கள் விசாரணையின் முடிவுண்டாகுமென்று நினைக்கலாகாது, ஈசுவரனே அவர்குணரஹிதர் நிரவயவர் நித்தியர், சாந்தர், வியாபகர், முதலிய இலக்ஷணங்களோடு கூடியவர். அவரொருவரையன்றி. மற்றப்பார்க்கப்படும் பதார்த்தங்களனைத்தும் பொய்யோ எங்ஙனம் பொய்யெனின் ஏகமாயும் வியாபகமாயிருக்கிற பிரம்மத்தினிடத்தில், அவிவேகத்தாற் (அதாவது விசாரணையால்) தோன்றுகிறது. விசாரித்தால் நசித்து விடுகிறது. அவ்விவேகத்தையே அஞ்ஞானமென்பது அதற்கே மாயையென்று பெயர்.

வரும்.

## சுகப்பிரம்மரிஷி

79-ம் பக்கத் தொடர்ச்சி.

அதைக்கேட்ட சுகர்; ஜநகன் விதேகபுரவாஸி என்று கேழ்விப்பட்டேன். தேகமற்ற புருஷனிய பிரம்ம சுவரூபமாக விருக்கும் அரசனது பட்டணத்தில், குலமேது, கோத்திரமேது, சூத்திரமேது, இது என்ன புதுமை.



ஜன்மமிருத்யு, சோகதுக்க வர்ஜிதம்
ஜாதி நீதி குலகோத்ர தூரகம்
சித்விவர்த்த ஜகதோஸ்ய காரணம்
தத்ஸதாஹ மிதிமௌன மாச்ரய.

என்றபடி சுவயம்பிரகாசமாயும், நித்தியமாயும், ஆநந்தமாயும், விளங்கும் ஆத்மரூபமாய் ஜன்மமும் நாசமும், இல்லாததாய் சோகமும் துக்கமுமற்றதாய் இப்பிரபஞ்சத்திற்கு அபின்ன நிமித்தோபாதான காரணமாய், விளங்கும் பரமாத்மனை, எனக்கு ஜாதி எது, குலமேது, கோத்திரமேது, என்று கூறினர். அதைச் செவியுற்ற, சேவகன் அன்னாலே! தம்போலியருக்கு, இங்கு ஒரு விசாரணையுமில்லை. நமஸ்கரித்து அஞ்சலிபண்ணி தாங்கள் இக்கோட்டைக்குள் எங்கு இஷ்டமோ அங்கு போகலாம் என்று கூறினன். அதைக்கேட்டு, ஓமெனக்கூறி கோட்டைக்குள் சென்றார். சென்றதும் இதுகாறும் பட்டணத்தையே பாராதவராதலால் பட்டணத்தின் கோலாஹலத்தை நோக்கி ஒன்றிலும் அதிசயபுத்தியின்றி, பிறந்தபடி ஆடையின்றிச் சென்றனர். முன்னொருக்கால், சுகர் தனது பிதாவுடன் ஓர் வனத்தில் போய்க்கொண்டிருந்த காலத்தில், வழியில் தடாகத்தில் ஆடையின்றி, ஜலக்கிரீடை பண்ணிக்கொண்டிருந்த ஸ்திரீகள் சுகரைக்கண்டு சிறிதும் லஜ்ஜையின்றி, கிரீடித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு போகிற வியாஸரைக்கண்டவுடன் நாணி, ஆடைகளையணிய ஆரம்பித்தார்கள். அதைக்கண்ட வியாஸர், அப்பெண்களை நோக்கி பால்யப்பருவமும் நிர்வாணியாகவும் போகிற எனது புத்திரனை சுகர் சென்றபோது நீங்கள், லஜ்ஜையின்றி இருந்தீர்களே. இப்பொழுது என்னைக்கண்டு வஸ்திரம் தரித்ததற்குக் காரணம் யாதெனக்கேட்டனர். அதற்கவர்கள் (தவஸ்திரீபும் பிதாஸ்தி) உமக்கு ஸ்திரீபுருஷ பேதத்தோற்றமிருக்கிறது. அவருக்கு அது இல்லை. எல்லாவற்றையும் ஒரே சின்மயமாய்ப் பார்க்கிறார், ஆனதால எங்கட்கும் லஜ்ஜை தோன்றவில்லை என்றார்கள், அத்தகைய ஏகரூபஞானத்தையடைந்து, ஆநந்தமான ஆத்மஸ்வரூபத்தையன்றி, சரீராதி புத்தியின்றி சஞ்சரிக்கும் இவருக்கு பட்டணமாயினும் கிராமமாயினும் வனமாயினும் ஒன்றே.

ஸ்வமஹமஹிமானுபூதிமொமோதிதநாகராஜநாசார: விஹாரதிபால வநிதேகாவிமலசுகாம் பொலிதேன மக்ன என்றபடி

நீ, நான் என்ற அபிமானமற்றவராய், மலரஹிதமான அழுக்கின்றிய சுகசமுத்திரமான ஆத்மாநந்தத்தில் முழுகினவராய், குழந்தைகளைப்போல பட்டணத்திற்குட் சென்றார். பட்டணத்திலுள்ள ஜனங்கள் கண்டு ஆ இதென்ன அதிசயம் கோடிசூரியப்பிரகாசமுகமும் ஆநந்தம்பூரித்த மந்தகாசமும் பாலியப்பருவமும், பொருந்தியவரும் அவதூதராயுமுள்ள, இவர் யார்? வைகானஸிகளிலொருவரோ அல்லது வியாசரது புத்திரரான சுகரோ? தாருகாவனத்து மஹரிஷிகளது கர்மபங்கப்படுத்திய சென்ற பிக்ஷாண்டவக்கோலமோ? என ஒருவருக்கொருவர் விஸ்மயத்தோடு பேசிக்கொண்டனர். சுகரோ மாடமாளிகை பொருந்திய பட்டணத்தைக்கண்டு ஒன்றையும் அதிசயமாகப் பார்க்கவில்லை.

ஜகத்ஸர்வமிதமஸாரம்மாயிகமேவேதி
மத்வைவம் ஸ்வாந்த: பர்யடதிபாதிதாச: பிர
கலிதமதமான மத்ஸரகோபி:

என்றபடி அகிலப்பிரபஞ்சத்தையும் மாயையால் தோற்றுகிறதென்றும் அஸாரமென்றும், மனதில் திடமாய்ப் பார்த்தவர்களாய், மதமான மாத்ஸர்யாதிகளற்றவராய், ஆசையை யொழித்தவருமான, எம் கருணாநிதிக்கு ஆச்சர்யமாதலாது, எல்லா வீதியையும் கடந்து அரசனது அரண்மனைவாயிலில் சென்று உள்ளே நுழைந்தார். அங்கு நிற்கும் சேவகர்கள் இவரைக்கண்டவுடன் பயந்து நமஸ்கரித்து, நிம்போ, அரசனண்டையிற்சென்று தெரிவித்துவந்து அழைத்துச்செல்லுவோம் எனச்சொல்லி, அங்கேயே நிறுத்திவிட்டு உள்ளேசென்று, இவரது வரவைத்தெரிவித்தார்கள். அதைக்கேட்டு சுகமொனவரிந்து ஒன்றும் கூறாது மௌனமாயிருந்தார். சேவகர்களும் மௌனமாய்த் திரும்பினார்கள். வாயாலேயே ஒருவரும் அழையாமல் ஏழுநாள் அன்னமின்றித் தாகத்திற்கு நீருமின்றி, நேத்திரதிருஷ்டியன்றி மானுவமானமின்றி காத்திருந்தார். பிறகு மந்திரிகளைவிட்டு அரண்மனையில் ஓர் புறத்திலழைத்து ஆகாராதிகளைக்கொடுத்துபசரிக்கும்படி, அரசனாஞ்ஞையளித்தார் அங்கு ஸ்காமினியானயுவதிகளைக்கொண்டு, ஆஹாராதியுபசாரங்களைச்செய்யும்படி ஆக்ஞையளித்தார். அங்கும் ஓர்விஸ்மயமுமின்றி இருந்தனர்.



இளமென்றென்றல் பொன்னவசலத்தின்
மிக்கபொருப்பனை யிழுக்கவற்றோ.

என்றபடி இளங்காற்றனது இமயமலையின் ஓர் முகட்டை இடித்து விடுமோ அங்ஙனமே மகாதீரரான எம் ஆனந்தமூர்த்தியை மலமா காற்றத்தோல் ரூபமான ஸ்திரீகளால் மயக்கமுடியுமோ முன்னொ ந்தகால் வியாஸர் தன் புத்திரனைக்காணாது ஏ சுக என்று கூவிக்கொண்டு வனங்களிற் சுற்ற மரங்களெல்லாம் ஏன் ஏன் என்று கேட்டனாம். அதற்கு தாத்பரியம் யாதெனில் (அவர் எங்கும் வியாபித்தசிதாகாசஸ்வரூபமாகவே இருந்ததால் மரங்களிலுமிருப்பதால் அந்தருமாகவுமிருந்து கேட்டனர் என்று பொருள். அத்தகைய மஹாமகிமைபொருந்தியவராதல், இவர்கள் மயக்கில் சிறிதுமயங்காதிருக்க அவர்கள் பட்ட சிரமம் வீணாய்விட்டதையரசனிடத்து, முறையிட அரசனும் ஆநந்தபரவசனாய் இவ்விடத்தில் வந்து ரிஷிபுத்திரனை நமஸ்கரித்து அர்க்கிய பாத்திய ஆசனம் கொடுத்து முனிவ, தாம் இங்கு வந்தகாரணம் யாதோ என்றார். அதைக்கேட்ட சுகர் கூறுகிறார்.

தன்னுளவிகற்பித்தெழுந்தவிகற்பம்போகிற்
றவிர்ந்திடும்மாயையிற்பயனொசற்றுமில்லை
யின்னவதைத்தானவுண்மையியம்பவேண்டும்
யார்மயக்குமாற்றுமிறைவ.

ன்று ஆத்மசுவரூபத்தில் கற்பனையாகத்தோன்றும் விகற்பமான, அவதமொழிந்தால், கூறப்படுகிற மாயையால் பயனொன்றில்லை. இவ்வுண்மையை எனது அனுபவத்தாலறிந்தேன். இதுதான் அடையவேண்டிய ஞானமா? இத்தகையஞானமேதாமும் அடைந்திருக்கின்றீரோ அவ்வுண்மையை சிறுவனான எனக்குக் கூறவேண்டும் என்றார்.

அதைக்கேட்ட ஜனகர்

முனிவநீயேமதித்துணர்ந்து பிதாவுரைக்க
மறுத்துங்கேட்டாயங்கிலேயே நிச்சயமிங்கு
கண்டஞானவாகாய புருஷனுளயலொன்றில்லை,

முனிவ, நீயே பூர்வஜன்மபாக்கியவசத்தால் ஆத்மஞானத்தை சுவயமாகவே யடைந்தீர். தமது பிதாவிடத்துக்கேட்டு, மறுத்தும் உரைத்தீர். நீர் எந்த சுவாநுபூதியையடைந்தீரோ அங்கிலேயே நிச்சயம், இங்கு அகண்டமாயும் ஞானமாயும் சிதாகாசமாயுமிருக்கிற பரமாநந்தத்தையன்றி மற்றொன்றில்லை. பிறகு சுகர் இந்த ஞானத்தோடு இல்லறத்திலிருக்கமுடியுமா? என்றார்.

ஜனகர் முனிவ, இந்த ஞானமடைந்தவரெங்கிருப்பினும் தோஷமில்லை. காட்டிற்சென்றாலும் அங்கும் ஆகாராதிகளைச் சம்பாதிக்கவேண்டும் வியாக்கிராதிகளாற் பீதியுண்டாகும். சீதோஷ்ணாதிகளால் சரீரத்திற்கு வாட்டமுண்டாகும். ஆனதால் இங்கிருக்கும் பிரவிருத்தியைப் பார்க்க இன்னும் அநேக பிரவிருத்தியைச் செய்யவேண்டும். இங்கு அத்தனைசய ஹிம்சையில்லை. நாம் எங்கிருப்பினும், அகண்டாகாசமான ஆத்மசுவரூபமே எங்கு சென்றாலும், பிராப்தமுள்ளமட்டும் பிரகிருதியின் சேஷ்டைகள் நம்மைவிடாது. ஆனதால் நாட்டில் இருப்பினும் காட்டிலிருப்பினும் வருவன வந்தேதீரும் என்றார். அதைக்கேட்டு சம்சயந்தெளிந்தவராய் (தனது பிதாவிடத்துச் சென்றனரெனத் தேவிபாகவதம் கூறுகின்றது) இமயமலைச்சாரலுக்குச் சென்று ஆபிரவருஷகாலம் சமாதியில்

பச்யதி கிமபிநரூபம்
ச்ருணோதிகர்ணோ நகிஞ்சிதபி
வசனம் நிஷ்டதி கிருபம்
பூமனி நிஷ்டாவலம்பிய
காஷ்டவத்யோகி.

என்றபடி உவமானமற்ற ஸ்வயம்பிரகாசமான ஆத்மாவிடத்து நிஷ்டையடைந்து ரூபங்களொன்றையும் பாரார். ஒன்றையும் கேளார். ஒருவசனத்தையும் சொல்லார், கட்டை எப்படிக் கிடக்குமோ அதேமாதிரி ஆநந்தத்தில் வீற்றிருந்தார் அம்மஹாயோகியே லோகத்திற்கு அநுபவமார்க்கத்தை விளக்கியவர். இவர் பிர்மவித்தையின் ஆசாரியர். இவ இவர் கருணையங்களுடல் இவரது மகிமையை புராணங்களுள் விரிவாய்க்கூறப்பட்டிருக்கிறதாயினும் நாம்சங்கிரஹமாகத்தெரிவித்தோம் இச்சரித்திரத்தால் நாம் அறிவது யாதெனில்,

ஞானமென்பது புஸ்தகபடிப்பால் மாத்திரம் வருவதல்ல, ஞானத்திற்குச்சாதனம் விவேகம், வைராக்கியாதிகளோடு சத்சங்கத்தைச் செய்யவேண்டும். செய்யினும் பூர்வபாக்கியமில்லையானால் ஞானோதயமாகாது நமது மஹரிஷியான சுகரோ பிறக்கும்போதே ஞானத்தோடு உதித்தவர். அவருக்கு பிறர் உபதேசத்தால் ஞானோதயமாகவில்லை. தமது பூர்வபாக்கியத்தாலேயே ஆத்மாவையறிந்து அடங்காதானந்தத்திலமூழ்கி அத்வைதபேறுபெற்றவராதலால் அவரது திருவடியை முக்காலத்தும் நமஸ்கரிப்பாம்.

ஓம்.

# ஆரியன்.

## மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் 1 ] 1906ஞு டிசம்பர்மீ [ இலக்கம் 5

### ஸ்ரீ சகத்குரு சங்கராசாரியரின்

## அவதாரலீலை.

கோளந்தன்னிற் கிளரவதரஞ்செ
யேரிளவிந்து மௌலீசர்
ஏரிளவிந்து மௌலீசரெங்கோன் சங்க
ராரியராக வந்தாரே. (1)
பிரணவோச்சாரணையுடன் பிறங்குலகதனின்வந்
தாரெனை வாதரித்தாரே
ஆரெனைவாதரித்தாரனந்தங்கோடி
சாரணர் தாந்தாமெனுமாறே. (2)
வளநனிமொய் வாரணாசிமன்னும் வந்த
வெளுமுடை மண்டலமிச்சிரன்
வெளுமுடை மண்டலமிச்சிரனை வென்றுறு
தளர்வறு காவிதந்தாரே. (3)
வெண்டாமரையாள் விண்மின்னெனு முன்னர்வாய்
விண்டுரையாடி வென்றாரே
விண்டுரையாடி வென்றாரன்னவடனைப்
பண்டைப் பீடத் தமைத்தாரே. (4)
வாதராயணருடன் மாறி வாதாடவத்
தேதமில் சீர்த்திதந்தாரே
ஏதமில் சீர்த்தி தந்தாரதையேற்றனர்
ஆதி குருபரனாரே. (5)
மதங்கள்வனையும் மதாந்தகாரப்படப்
பதங்கனெரித்துப் பறித்தாரே

பதங்கடெரித்துப் பரித்தாரெனு மிருமூன்று
மதங்கள் வருத்து விர்த்தாரே. (6)
ஒளிசெழும்ப்ரஸ்தானத்ரயபாஷ்யோத்கிருஷ்டாதி
மிளிர்கலைகளை விதந்தாரே
மிளிர் கலைகளை விதந்தாரத்விதானந்த
அளிமழை சொரிய நின்றாரே. (7)
சினந்தவிர் முனிவரிருடியர் சித்தர்க
ளினந்தமதெனமுனீடேறவே
இனந்தமதெனமுனீடேறவே ஜகத்குரு
தனந்தனியாக வந்தாரே. (8)
பூமிக்கணியாய்ப் பொலிதிருக்காஞ்சியிற்
காமக்கோட்டிபீடக்காக்ஷிசேர்
காமக்கோட்டி பீடக்காக்ஷிசேர் ஸ்ரீசக்ர
சமத்தாபிதமிழைத்தாரே. (9)
ஆரிய சங்கரனாருள் பெற்றவர்
ஓரியல்பொன்றி நிற்பாரோ
ஓரியல்பொன்றி நிற்பாருலவார் தவச்
சிரெலாம் சேர் திறலாரே. (10)

# கருணாநிதி சீதாலக்ஷ்மி

## அல்லது

## சற்குணாலயம்.

(இந்நாடகத்தில் வருபவர்கள்)

அளகேசன்—சண்முகாபுரிக்கிறைவன்.
கருணாநிதி—அரசன் சகோதரன் இளவரசனும் கதாநாயகனும்.
ஜிளிகண்டசோழன்—சிவபுரத்தரசன்.
சூட்சுமபுத்தி—முதன் மந்திரி.
சுந்தரமூர்த்தி—மந்திரி புத்திரன்.
ஜெகப்புரட்டன்—மந்திரியின் உறவினன். (சுந்தரமூர்த்தி போலுமுருவமுடையவன்.)
நிர்மலன், குலசேகரன்—கருணாநிதியின் அந்தரங்க சேவர்கள்.
தூர்த்தசேகரன்—சண்முகாபுரியின் அரண்மனைக்கதிகாரி.
மாணிக்கவாசகன்—அளகேசன் மைத்துனனும், காந்திமல்லியின் முதற் சகோதிரனும்.
இலட்சுமிநாராயணன்—மாணிக்கவாசகனுடைய இளையசகோதிரன்.



சந்திரசௌந்திரபாண்டியன்—அளகேசன் கருணாநிதி இவர்களின் தந்தை
காந்திமல்லி—அளகேசன் மனைவி.
மதனப்பாள்—காந்திமல்லியின் சகோதரி.
கோமதி—அளகேசன் கருணாநிதி இவர்களின் தங்கை.
அகிலாண்டதேவியார்—அளகேசன் முதலியோரின் அன்னை.
சீதாலக்ஷ்மி அல்லது சற்குணாலயம்—ஜிளிகண்ட சோழன் குமாரத்தி (கதாநாயகி)
வேதவல்லி—சற்குணாவின் தாய்.
சாவித்திரி—சூட்சுமபுத்தியின் குமாரத்தி.
கமலவல்லி கௌரி = காந்திமல்லியின் தோழிமார்.
சித்திரரேகை, ஐராவதம் = கோமதியின் தோழிகள்
பத்மாக்ஷி, பதுமை = சற்குணாலயத்தின் தோழிமார்.
புஷ்கரவனம், அருந்ததி = வேதவல்லியின் தோழிமார்.
ஏகவில்லி = ஒருவேடன்.
ஜயம்வல்லோன் = சொல்தாண்டாக்கோட்டை என்ற ஒரு சிற்றரசின் தமயன், மற்போர்வல்லோன்.
பக்தர்கள், சேவகர்கள், கேரதோர் முதலியோர்.
கதாநிகழ்ச்சி = அதிபாகம் சிவபுரம், சண்முகாபுரி, வேதாரணியத்திலும், பிற்பாகம் மற்ற ஏனையவிடங்களிலும்.

### நாடகாரம்பம்.

இடம்—சண்முகாபுரியின் பூஞ்சோலையிலோர் சித்திரமண்டபம்
காலம்—(கொண்டக்காலத்து வெப்பம் போலுமுள்ள) காலை. கருணாநிதி தனித்து அம்மண்டபத்திலுட்கார்ந்திருந்து சிந்தித்தல்.

கருணா—என்னன்னையேனும் பிதாவேனும் மிவ்விடமிருப்பின் இப்படி நிகழுமா? என்னன்னையே என் அண்ணியார் மனத்திலெழுந்தி என்னையும் றந்தாளையோ, ஐயோ, யானவரை அடிக்கடிவேண்டியு மதரிக்காதொழிந்தனர். இனி நானென்ன செய்வேன் மற்போரில் மரிப்பேனோ? அப்படி மரித்தல் மிகவு மேன்மையே. இல்லாவிடில் தற்கொலைபுரிவேன், ஐயோ மிகவுங் கொடிது! அதை யொருவன் "நினைப்பதிறுவேலேய மீனாநகித் காவருவ" வென சான்றோருரைத்திருப்பதால், இப்போது காலவேற்றுமையினால் நினைத்த காறுமென்னிருதயத்தை பயிர்ந்தி எரிந்துவிட்டாலென்ன, ஐயோ அதுவும் தற்கொலைத்தானே. என்னசெய்வேன். கடவுளுடைய சிருஷ்டிப்பொருள்களி லொருவனாகிய யான் செய்யவேண்டுவதெது எவ்வித கஷ்ட நஷ்டம் வரினும், மக்கலை இப்பொருளின்மீது சுதந்திரமுமெல்லாவித சூழ்களையுமுடைய ஆதி காரணருக்குரிய தென்றல்லவோ விட்டிருத்தல் தகுதி;

மேலும், யான் சிந்தனை செய்வதில் யாதுமில்லை. என் சிந்தனை இப்போது எதற்குதவும்?

"என்செய லாவதி யாதொன்று மில்லை யினித்தெய் வமே
யுன்செய லேயென் றுணரப் பெற்றே னிந்தவூனெடுத்த

பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்ஙனே வந்து மூண்டதுவே "

என நமதான்றோர் கூறியவாறு எல்லாந் தெய்வச்செயலேயாம். " இக்குற்றவனுக்கு தெய்வமே துணை " என்பார்களே:—

(தார்த்தசேகரன் வருகிறான்.)

தார்த்த—இளவரசே, தங்களை யழைத்துவரும்படி என்னை யனுப்பினரும தி தலைமையன், எங்கள் மகாராஜா.

கருணை—அப்படியா, இதோ வந்துவிட்டதாகச் சொல்லும். தார்த்தரே என்று மற்றொரு புறத்தில் நின்றுமனச்சிந்தையோயோடிருக்கிறார். பெருமூச்சுவிடுகிறார். அப்படியிருக்கையில்)

(தார்த்தசேகரன் போகிறான் போகும்போது காந்திமல்லியைப் பார்த்துப்போக முயலுகின்றான்)

(மகாராஜாவருகிறார் வந்து கருணாநிதிக்குப்பின்புறமாய் நின்று)

அனகேசன்—அடே கருணாநிதி, என்ன இருக்க யிருக்க ராகதி அதிகமாய்விட்டது. 'அரும்பேறுக் குறும்பேறும்' என்பதை உன்னிடத்தில் தானப்பா கண்டேன்.

கருணை—அண்ணா, ஏன் என்மீது கோபங்கொள்ளுகின்றீர்கள்? யாதொன்றுந்தவறு செய்யாதவனுயிற்றே ஏன் என்மீது இத்தனை கோபம்,

அனகேசன்—அடா நிறுத்து போதும் "பன்னிப்பன்னி" பழங்கதையடிக்கிறாய், நீ யெனக்குப் பயந்தவனென்றால் நமது குலத்திற்கு மங்கலத்திற்கு மீனமுண்டாகச் செய்யு மற்போரிற்குடன்படுவையா, அடா எப்போதென்னுமதி தப்பினையோ அப்போதே நீயார் நான் யார்.

கருணை—அண்ணா, மன்னிக்கவும். எல்லாந்தங்களைக்காண முடியாததினலும், காணினுந் தங்கள் கடைக்கண் பார்வையேனுமென்மீது வீழாததாலுமப்படி விழுந்தாலும் வெறுப்பே மிகுந்திருந்ததினலும் நேரிட்டவையேயாம்.

அனகே—அப்படியா சங்கதி, வந்தாயா வழிக்கு, நானே குற்றவாளி. சரி நன்று நன்று மிக நன்று.

கருணை—அண்ணா, 'சிறியார் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே' ஆதலின் மன்னிக்கவும்.

அனகே—சரி இப்போது அந்த மல்யுத்தத்திற்கு போகாதொழிவையேல் நீ யெனக்குப் பயந்தடங்கி நடப்பவனென்றாகும்; இல்லாவிடில்

கருணை—அண்ணா, என் கருணை சாகரமே, இதைத்தவிர வேறென் வேண்டினும் யான் செய்யச் சித்தமாயிருக்கிறேன்—இதைமாத்திரம் அண்ணா தயைசெய்து—

அனகே—என்ன அப்படியா சங்கதி, உன்னிராத்தத்திரிஸ்லவாயிப்படிச் சொல்லச் செய்கிறது? பார்ப்போம்.

(போகிறார்: போகும்போதே தனக்குள்: அப்பா இவனை நம்பக்கூடாது, நமக்கு மீறிவிட்டானே பயல!)



(நிர்மலன் வருதல்.)

கருணை—அப்பா நிர்மலா எப்போது வருவாயென்று காத்திருக்கிறேன் நானிருக்கும் நிலைமையை யென்னென்றியம்புவேன் ஐயோ,

நிர்மலன்—என்னருமைத் தோழரே, என்ன முகமிவ்வளவு வாட்டமுறுகிறது. நேரிடாத விபத்து நேரிட்டதாலும் மென்றுந்தைரியத்தைக் கைவிடலாகாதெனப் பன்முறையும் நீரெடுத்துரைப்பீரே.

கருணை—ஆமாம். ஆனவிப்போப்பட்ட சங்கடம் வருமென்று நானொரு போதும் நினைக்கவேயில்லை. தவிர, பிறருக்குப் புத்திசொல்லுவதெளிது; ஆனல் தன்படி தானே நடத்தலுங்கூடாதெனவிப்போதுதானெனக்குத் தெரிந்தது. தனக்கு கஷ்டம் வந்தாற்றானே தெரியும்; 'தன்காலிற்பட்டாற்றெரியு மென்னும் முதுமொழியும் பொய்யாமோ? இதுவுலகியல்பெனினும், இவ்வுலகப்பிராணிகளிலொருவனுகிய நானுமவ்விதப் பிழையினின்று தப்புதல் கூடுமோ?

நிர்மலன்—ஆமாமென்னருமை நேசரே! நீங்கள் சொல்லுவதுண்மைதான் நாமிவ்வுலகிலெத்தனையோ இராமாயண சாஸ்திரிகள், தங்கள் மனைவியார்களைக் கோபித்து மிரட்டியுமுள்ள " சுரைக்காய் கதைகளை " ப்படித்துங் கேட்டுமிருக்கிறோம்; இதோமாதிரியாக தற்காலத்திலெத்தனை பிரசங்கிகள் தாம் நல்ல கல்வித்திறம் வாய்ந்தவரென்றும், மிகவுமினிமையாயும் நினைக்காமலே சொற்களை ன்றாய்ப்பின்னென்றாய் அடுக்கடுக்காய் கிமிஷத்திற்கறுபது வார்த்தைகளை வெளிப்படுத்தக்கூடிய வல்லமையுடையோரென்றும், மற்றவர்களால் மதிக்கப்படவோ, அல்லது ராவ்பகதூர் முதலான பட்டப் பெயர்களைப் பெறக்கருதியோ அல்லது பெரிய அந்தஸ்துள்ள உத்தியோகம் முதலியவைகளைக் கருதிக்கொண்டோ இலக்கியவிலாச கூடத்தில் ஒருநாள் " இந்துப் பெண்கள் கல்வி " யைப்பற்றியும், மற்றொருதினம் " பாலகரைப்பயன் படுத்தும் உபன்யாஸ சீபா " வில் " கைம்பெண்கள் கலியாணம் " செய்துகொள்ளவேண்டியது மிகவும் முக்கியமான காரியமென்றெடுத்தோதுவதினலும் ஐயோ; பாவம்; எத்தனைபேர் இப்பிரசங்கிகள் மனதிலொன்றும் வாக்கிலொன்றுமுடையவரென்பதை யறியாததும், இவர்கள் வெளியிலொன்றும் மறைவிலொன்றுஞ் செய்யும் மனிதரென்றுணராமலும், இவர்கள் மேடைமேல் நின்று சபையின் முன்னிலையில் ஆட்டத்தையே யுண்மையான இவர்களிருதய வாட்டமெனக்கருதியும் ஏமாந்து, தங்கள் வீட்டிலுள்ள விதவைகளுக்கு மிகப்பொருள் விரயமிட்டு கல்யாணஞ்செய்தவர்களோ சொல்லிமுடியாத கஷ்டநஷ்டமுற்றவரையின்னும் மனுபவிப்பவரையும் பார்க்கிறோம்; இவ்விதமாகவே மற்றவிஷயங்களிலுங் காணக்கூடுமவைகளையெல்லாம் எல்லா நற்குணமும் விவேகமும் பொருந்திய வுமதுமுன் யானெடுத்துரைப்பின் " சூரியன் முன் சிட்டொளி " போல்லாகும், அன்றியும், உண்மையு மென்னையு மொப்பிட்டுப் பார்க்கில்——

கருணை—அப்பா நிர்மலா; நிறுத்து நிறுத்து—என்ன; இவ்வுலகத்திலிப்போது நல்லென்னமுடைய பிரசங்கிகள் கிடையாதென்பதனல், புருஷனைப்போக்கிய பூவையருக்கு மறு விவாகம் நடப்பித்தல் கூடாதென்பது முன்னுடைய கொள்கையா?

நிர்மலன்—என்னின்பச் சிநேகரே, ஐயோ, என்னெண்ணமுமக்குப் புலப்படவில்லையா? நான் சொல்வதென்னவென்றால் நான் மேலேகூறிய குற்றமுள்ள பிரசங்கிகள் பிறரைத் தூண்டிவிடுகிறார்களேயொழிய தங்கள் வீட்டிலெப்போதுஞ் சுமங்கலியம் நிறைவுற்றிருக்குமென்ற களிப்பினால் மயங்கி ஏதோதெய்வச்செயலாய்த் தங்கள் வீட்டிலுள்ள சுமங்கலி யொருவள் அமங்கலியாய்விட்டாலவர்கள் செய்வதியாதென்பதை யறியீரோ? உடனே தாஞ்சேர்ந்து முதன்மையாயும் மிகத்துரிதமாயும் நடத்திவந்த "சீர்திருத்தச் சபா" விற்குத் தன் பெயரை அந்த ஸபாபுஸ்தகத்திலின்றும் நீக்கும்படியாக ஒரு ராஜிநாமா கடிதமெழுதிவிடுவதுமன்றி யந்த சபையையே வெறுக்கவும் வேரோடேகளையவும் முயலுகிறார்கள். என்னன்பரே! "ஊர்ப்பெயரைச் சொன்னாலும் ஆள்பெயரைச் சொல்லாதே" எனப்பெரியோருரைத்தனராகையால், யான் சொல்லாமலே யுமக்குத் தெரியும். இதைவிட வேறென்ன கொலைத்தொழில் புரியவேண்டும்? அப்பா! இவர்களை நினைத்தலுந்தீதே. ஆகையாற்றான் "தீயாரைக் காண்டலுந் தீதே, திருவற்ற தீயார் சொற் கேட்டலுந் தீதே" சான்றோரும் புகன்றனர்.

(குலசேகரன் வருதல்.)

குலசே—ஆ! என் நண்பர்களே! உங்களிருவருக்கும் வந்தனம்.

கருணா—இப்படி உட்காருங் குலசேகரரே. (நிர்மலனைப்பார்த்து) என் வார்த்தையை நிறுத்திவிட்டீர்?

குலசே—என்ன விசேஷம்? சற்று சொல்லுங்கள், நானுங்கேட்கிறேன்.

நிர்மலன்—வேறொன்றுமில்லை, "கொழுநரைக்கொடுத்த கோதைமார் மறுபடியும் மணம்புரியலாகுமோ" வென்பது தானிவர் கேட்பது.

குலசே—நீங்களிருவருந் தயவுசெய்தெனக் கனுமதிகொடுத்தா லெனக்கிவ்விஷயமாய்த் தெரிந்தவற்றைச் சொல்லுகிறேன்.

இருவரும்—அப்படியே; நம்மில் பேதமுண்டோ? எப்படியாவது சங்கதி தெளியவேண்டியதுதானே முக்கியம்.

குலசே—முதலாவது விவாகமென்பதென்ன? அக்கினி, அருந்ததி, தேவர் முதலானோர் சாக்ஷியாகவும், இஷ்டர், பந்துக்கள், முதலியோர் முன்னிலையிலொருவன் ஒருபெண்ணைத் தானென்றும் (கனவிலுங்கூடப்) பிரியாதபடி மிகவும் அன்யோன்யமைக்கியத்தோடெக்கூடி, உயிரொன்றும் உடலிரண்டுமாக வெண்ணி இல்லறத்தை இனிது நடத்திப், பார்ப்போர் கேட்போர் யாவருக்குங் களிப்புண்டாகும் வண்ணம் செய்வதாகவும், அம்மாது தன்மாமிமாமனார் முதலிய தன் கணவரது சுற்றத்தாரிஷ்டர்களுக்குங் கவறின்றி தன் கற்பு நிலைமைக்குக் குறைவுறாதபடி தன் கணவனையே தெய்வமாகவும் தன கணவனது தந்தைதாயாரையே தன் தந்தை தாயாராகப்பாவிப்பதாகவுஞ்சொல்லி வேதவிதிப்படி பிராமணர், குருக்கள் முதலியோரைக் கொண்டு தத்தம் மரபிற்கேற்ற சடங்குகளை முடித்து, அம்மணாளர்களிட முறுதிபெறுவதுதான் விவாகமென வெனக்குத் தோற்றுகிறது. இதில் மற்றவை எப்படியாயினுமாகுக மிகவும் முக்கியமானது



நாம் தெய்வத்தின் முன்பும், சபையின் முன்பும் நமது மனசாக்ஷியின் முன்புஞ் செய்யுமுறுதியே யுறுதியெனின், பின் வேறு விவாகமென்பது எங்கிருந்து இடையிற் கிளம்புகிறது?

கருணா—அப்படியானால் ஒன்றுமறியாத சிறுமிச்செல்வங்கள் பருவமுற்று வருந்தவும் இன்னும் வேறுவித அனர்த்தங்களில் துயருறவும் விட்டிருப்பதுதானோ? அன்பின் நிலையோ! கருணையின் காரணமோ! பாவம்! ஐயோ, அவர்படும் பாட்டை யானென்னென்றியம்புவேன். ஓ தெய்வமே; இவர்களுக்கேதாவது வழியுண்டோ, அப்படியிருந்தாலெனின்னன்பர்க்குறையாமலிருக்கின்றீர்; ஓ தயாபரரே, (எனச்சிந்தித்தல்.)

குலசே—என்னன்பரே, கடவுளின்பேரிலேன் சுமையைச் சுமத்துகின்றீர்? நம்முடைய குற்றத்திற்கவரையிடல் முறை? ஆயினுமென் சிற்றறிவிற்கொன்று தோற்றுகின்றது. அதாவது நாம், பால் மணமாறுதபாலருக்கு மணமுடிக்குமேற்பாட்டை யடியோடே நிறுத்திவிட்டாலிவ்வளவு சங்கடம் நேரிடாதென வெனக்குத் தோற்றுகிறது. தவிர, ஆண்மக்கள் குறைந்தபக்ஷம் இருபது வயது பொருந்தி தன் மனைவியைச் சரிவரக் காத்து நிலைமையிலுமிருந்தால் திறம். அவ்வாறே பெண்மகள் பக்குவமடைந்தவளாகவுங் காரியாகாரியந் தெரிந்தோனும் அறிந்தவளாகவுமிருத்தல் மிகவும் மேன்மையை விளைக்கும். (வரும்)

## ஸ்ரீ கிருஷ்ணன்.

ஈசுவரனது தசாவதாரங்களுக்குள் கிருஷ்ணாவதாரத்திலேதேற்புதங்களைச்செய்யப்பட்டது, அவரது அநந்தமகிமைகளைக் காண்பித்தார். இந்த அவதாரத்தில் பக்தர்களை மாத்திரம் ஸம்ரக்ஷித்தா ரென்பதில்லை. துவேஷிகளையும் வைரிகளையும் இவரது கடாக்ஷத்தால் இரக்ஷித்தார். அர்ச்சுனனை நிமித்தமாகக்கொண்டு பூமியின் பாரத்தைக்குறைத்தார். கோகுலத்திலுதித்த கோபிகளைவருக்கும் தனது பதவியையளித்தார். தாம் வெகு ஸம்ஸாரியாய் விளங்கினார் பல்லாயிரம் பிள்ளைகளைப்பெற்றார். ஒருவராலும் சாத்தியமாகாத யோகங்களைச்செய்தார். பலசாலிகளான அஸுரவரசர்களை துரும்பாக நினைத்தொழித்தார். கோபிகைகள் கிரகந்தோறும், ஒவ்வொரு கிருஷ்ணனாக விளங்கினார். ஒருவராலும் பார்க்கமுடியாத விச்வரூபதரிசனத்தை யசோதைக்கும் அர்ஜுனனுக்கும் மற்றும் சிலருக்குமளித்தார். வஸுதேவருக்கும் தேவகிக்கும் தான் பிறந்தவுடன் தனது நிஜரூபத்தைக்காட்டினார் கோகுலம்முழுதும் கூத்தாடிவிளையாடினார். பசுக்களை கூட்டம் கூட்டமாக மேய்த்து இப்படியே ஜீவர்களெவரையும் ஸம்ரக்ஷிப்பதாகத்தெரிவித்தார். வெண்ணையைத்திருடி பக்தர்களான கோபிகைகள் கையால் லீலையாக அடிப்பட்டார், இராஜக்ரீடையில் ஒவ்வொரு கோபிகளுக்கும் ஒவ்வொரு கோபாலனாயிருந்தார். இத்தகையமஹா வல்லமையுடைய கிருஷ்ணவதாரத்தைச் சில மத்தர்கள் பரிகசிக்கின்றார்கள். அது அவ்வுண்மையை யறியாத குற்றமே, ஸர்வ வல்லமையுமுடைய பரமேசுவரனுக்கு எந்த காரியம் விரோதமானது, ஆகாசம் எதில் ஒட்டுகிறது, ஒன்றிலும் ஒட்

டவில்லையன்றோ அங்ஙனமே பரமேசுவரனுமொன்றிலும் பற்றுவதில்லை, அங்ஙனமே சுருதியும் கூறுகின்றது. "நலிப்பியதேபாஹ்யதோஷை:" பாஹ்ய தோஷங்களில் அவன் ஒட்டுவதில்லை, ஆனதால் அவரிடத்தில் ஓர் குறையும் சற்பிக்கக்கூடாது. ஸர்வஜீவதயாபரனான எம்பெருமான் அவதாரஞ்செய்து துஷ்டநிக்கிரஹ சிஷ்டபரிபாலனம் செய்வதையே தொழிலாகக்கொண்டிருக்கிறார். அவர் ஏன் துஷ்டர்களை சிக்ஷித்து மறுபடியும் நிக்ரஹிக்கவேண்டும்?

ஜீவர்கள் கருமத்தால் ரஜோகுணத்தில் ஆழ்ந்து அசுரபாவனையிலழுந்துகிறார்கள். அதைக்கண்டு கருணாநிதி அவ்வப்பொழுது அவதாரஞ்செய்து பாபிகளையும் இரக்ஷிக்கிறார், பாபிகளை இம்சிப்பது இரக்ஷிப்பதாகுமா? அவர்கட்கு பாபத்திற்கேதுவான சரீரத்தை யொழித்து ஸாத்விக குணமபிவர்த்தியாகத் தக்க தனுவைக்கொடுக்கிறார், மற்றும் அவரது கையால் ஸம்ஹரிக்கப்பட்டவன் அவரையே யடைகிறான். ஏனெனில் அவர் ஞாபகமாகவே இறப்பதால் உடனே அந்த இடத்தையேயடைகிறான். ஈசுவரனையடைவதற்கு பலமார்க்கங்களுண்டு சிலர் வைரத்தாலுமடைவார்கள் கம்ஸனுமங்ஙனமேயடைந்தான் அங்ஙனமே பாகவதமும் கூறுகின்றது.

## 7-வது ஸ்கந்தம்.

பரீக்ஷித்துக்கூறுகிறார். ஸ்ரீபகவான், ஸமமாயும் சுத்தராயும் பூதங்களுக்கெல்லாம் ஸுஹ்ருத்தாயுமிருக்கிறார். அங்ஙனமிருக்க இந்திரனுக்காக அசுரர்களை எதற்காகவதம் பண்ணவேண்டும். நிர்குணனான ஈசுவரனுக்கு தேவர்களால் பிரயோஜனமுமில்லை தைத்தியர்களிடத்தில் த்வேஷமுமில்லை. அங்ஙனமிருக்க தேவபக்ஷபாதமாக தைத்தியர்களை எதற்காக நசிக்கச்செய்தாரென, ஸ்ரீமந் நாராயணனுடைய நிக்கிரஹானுக்கிரஹ குணங்களிடத்தில் எனக்கு மிக்க சம்சயமிருக்கிறது. அதைபோக்கவேண்டும் என்றார்.

சுகர், ஹே, மஹா ராஜனே உன்னால் நல்ல பிரசனம் பண்ணப்பட்டது. கூறுவாம் பகவான் நிர்க்குணனாயிருந்தாலும் தனது மாயையினுடைய சத்துவ குணத்தை சுவீகரித்துக்கொண்டு தைத்தியர்களுக்கு பாதகரானார். ஸத்வம், ரஜஸ் தமஸ் என்று பிரகிருதிக்கு முக்குணமுண்டு. அவைகளுக்கு ஒரே காலத்தில் விருத்தியாவது, க்ஷயமாவது, வருவதில்லை. ஸத்வம் மேற்பட்டால் தேவர்களையபிவிருத்தி செய்கிறது. ரஜோகுணம் மேற்பட்டால் அசுரர்கள் அபிவிருத்தியாகிறார்கள். தமோகுணமதிகரித்தால் ராக்ஷஸர்களபிவிருத்தியாகிறார்கள் இங்ஙனம் அந்தந்தகாலானுகுணமாக பகவான் இருக்கிறார் எங்ஙனம் அக்னி விறகு முதலியவைகளில் அந்தந்த ரூபமாகத்தோன்றுகிறதோ அங்ஙனமே பகவான் தேவாதிகளிடத்தில் இருக்கிறார், நிபுணர்கள் அவரை சிருஷ்டியாதி காரியத்தால் விசாரித்தறிகிறார்கள். எப்பொழுது பகவான் சிருஷ்டிக்க இச்சிக்கிறாரோ அப்பொழுது ரஜோகுணமபிவிருத்தியாகின்றது ஸம்ரக்ஷிக்கும் காலத்தில் சத்வகுணம் ஸம்ஹரிக்கத்தமோகுணம், இவ்விஷயமாக இராஜஸூய யாகத்தில் ஒரு பிரசினம் நடந்தது அதைச்சொல்லுகிறேன்.



ராஜஸூயயாகத்தில் ஸ்ரீகிருஷ்ணன் சிசுபாலனை வதஞ்செய்த பொழுது அவனது தேஜஸானது அப்பொழுதே எம்பெருமானை கிருஷ்ணனிடத்து வந்து, ஐக்கியமாயிற்று அதைப்பார்த்து யுதிஷ்டிரர் நாரதரைக்கேட்கிறார். பிரேம இடைவிடாது பக்தி செய்யும் மஹான்களுமடைய முடியாத, ஸ்ரீகிருஷ்ணப்ராப்தியை கிருஷ்ணத்வேஷியான சிசுபாலன் எப்படியடைந்தான் அதையறிய நாங்கள் இச்சிக்கிறோம். பகவானை நிந்தித்ததால் வேனனென்பவன் பிராமணர்களால், தமஸிலழுத்தப்பட்டான் அங்ஙனமிருக்க சிசுபாலனும் பாபியக்கூடங்கி இதுபரியந்தம் கிருஷ்ண த்வேஷியாகவிருக்கிறான். அங்ஙனமே தந்தவக்திரனும் இவ்விருவரும் கிருஷ்ண த்வேஷிகளன்றோ இவர்கள் நரகத்திற்குச் செல்லவில்லை, ஆனால் ஸ்ரீபகவானது ஸாயுஜ்யத்தையடைந்தார்கள், இச்சந்தேகத்தை நிவர்த்திக்கவேண்டுமென, நாரதர்கூறுகிறார். ஜீவர்கள் பிரகிருதி புருஷவிவேகமின்றி சரீரத்தையடைந்திருக்கிறார்கள். அச்சமயத்தில் தேஹாபிமானத்தாலும் நான் என்னுடையது என்னுமகங்காரத்தாலும் வைஷம்யமும் அதனால் ஹிம்சாதிகளுமுண்டாகின்றது அங்ஙனமிருக்க ஸர்வாந்தர்யாமியான ஈசுவரனுக்கு வைஷம்யமேயில்லை, அப்பொழுது ஹிம்சையெப்படியுண்டாகும் ஆனதால் வைரத்தாலாவது, நிர்வைரத்தினாலாவது பயத்தினாலாவது காமத்தினாலாவது, ஸ்ரீஹரியிடத்தில் மனத்தை வைத்தலே அவரையடையச்சாதனமாகின்றது. எப்படி ஜீவர்கள் வைராநுபந்தத்தால் தன்மயமாவார்களோ அப்படி பக்தியோகத்தாலடைய முடியாதென எனது நிச்சயம்; அதெங்ஙனமெனில் குளவி ஒரு பச்சைப்புழுவை தனது கூட்டில் வைத்து அடிக்கடி அதைக்கொட்டுவதால் அப்புழு அவ்வலியை பொறாமல் ஸதா அந்த நினைவையேயடைந்து எங்ஙனம் அப்புழுவும் குளவியாய் விடுகின்றதோ அங்ஙனமே வைரத்தால் ஈசுவரனை நினைத்தால் ஈசுவரனையே யடைந்துவிடுகிறான். அப்படியே புருஷர்கள் பகவானிடத்தில் மனதைவைத்து அந்தஸ்வரூபத்தையடைகிறார்கள். அநேகர் காமத்வேஷாதிகளால் பகவானிடத்தில் மனதை, வைத்து அக்கதியை யடைகிறார்கள் அவர்கள் யாரெனில்,

காமத்தால் கோபிகள்
பயத்தால் கம்ஸன்
த்வேஷத்தால் சிசுபாலன்
சம்பந்தத்தால் யாதவர்கள்
சிநேகத்தால் பாண்டவாதிகள்
பக்தியால் நாரதாதிகள்.

இவர்களைப்போல் ஒரு விதத்தாலும் வேனன் ஈசுவரனை நினையாததால் தமஸிலழுத்தப்பட்டான். ஆனதால் ஈசுவரனுக்கும் ஒருவரிடத்திலாவது வைஷம்யமாதிகளில்லாததால், அவர் எந்தக்காரியத்தைச்செய்தாலும், ஒன்றையும் செய்யவில்லை அனைத்தும் அவர் ஸந்நிதானத்தில் குணவைஷம்யத்தால் நடக்கின்றன, அதற்கு அவர் ஸாக்ஷியாய் விளங்குகிறார் ஆனதால் இவ்வவதாரத்தின் மஹிமையைக்கூற ஆயிரம் நாவுபடைத்திருப்பினும் முடியாது இவ்வவதாரரகஸ்யத்தைக் கிருஷ்ணோபநிஷத்தும் கூறுகின்றது. ஸர்வாங்க சுந்தரனும் ஸச்சிதாநந்த ஸ்வரூபியுமான ராமச்சந்திரனைப்பார்த்து வனவாஸியான

ரிஷிகள் கல்விஸ்வயத்தையடைந்து ஆலிங்கனம் செய்துகொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அப்பொழுது ஸ்ரீராமன் நாம் கிருஷ்ணாவதாரஞ்செய்யும்பொழுது நீங்கள் கோபிகைகளாகவந்து எம்மை ஆலிங்கனஞ்செய்துக்கொள்ளுங்கள் மற்றும் கிருஷ்ணாவதாரஞ்செய்த காலத்தில் கூடவந்தவர்களனைவரும் தேவாம்சமாகவே சொல்லப்பட்டிருக்கிறது ஆனதால் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியிடத்தில் இடைவிடாது பக்தியைச்செய்வோமாக.

சாது ஜனத்தை நலியுங்கஞ்சனைச் சாதிப்பதற்கா
யாதியஞ்சோதியுருவையங்கு வைத்திங்குபிறந்த
வேதிறுதல்வனைப்பாடி வீதிகள் தோறுந் துள்ளாதா
ரோதியுணர்ந்தவர் முன்னுவெஞ் சேவிப்பார் மனிசரே.

---

# "ஆத்மாநாத்மவிவேகம்" பிரசித்நோத்திரம்.

சாதன சதுஷ்டய சம்பத்து வராமலிருந்தாலும், கிரகஸ்தர்களாத்மவிசாரஞ்செய்வதாற் தோஷமில்லை. ஆனால் மிக்கச்சிரேயஸ் உண்டு. அங்ஙனமே ஒவ்வொருநாளும் பக்தியுடன் குரு சிசுருஷையைச்செய்து வேதாந்த சிரவணம் பண்ணினால் என்பது கிருச்ரம் பலம் கிடைக்குமென ஸ்மிருதிகளும் கூறுகின்றன. (கிருச்ரம் பதினாயிரம் காயித்திரியின் பலன்) பூர்வம் ஆத்மாநாத்மவிவேகஞ்செய்யவேண்டுமென்று கூறப்பட்டது.

ஆத்மாவென்றால் என்ன?
ஸ்தூல, சூக்ஷ்மகாரண சரீரமென்ற மூன்றின் விலக்ஷணன்
பஞ்சகோசங்கட்கு விதிரிக்தன்
அவஸ்தாத்திரயசாக்ஷி ஸச்சிதானந்த ரூபனே ஆத்மா.
அநாத்மாவென்றால் யாது?

அநிருதஜட துக்கரூபமான (பொய்யாயும் ஜடமாயும் துக்கமாயும்) ஸமஷ்டி வியஷ்டி ஸ்வருப சரீரத்திரயமே. (ஸமஷ்டி - தோட்டம் வியஷ்டி - தருமரம் ஸமஷ்டி - உலகம் முழுவதும் வியஷ்டி - ஒரு சரீரம்.)

சரீரத்திரயமென்றால் என்ன?
ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரமென மூன்று
ஸ்தூல சரீரமென்றாலென்ன

பஞ்சீகிருதபூதகாரியம், கருமத்தாலுண்டானது ஜன்மாதிஷட்பாவவிகாரங்களுடன் கூடியது (ஷட்பாவவிகாரம் இருக்கிறது. உண்டாகிறது வளர்கிறது முதலியன,) அங்ஙனமே பஞ்சீகரணமும் ஆத்மபோதமும் கூறுகின்றது.

ஐந்து பூதங்களையும் இரண்டாய்ப்பிரித்து அரைப்பாகத்தைத் தள்ளி மற்றொரு பாகத்தை ஒன்றோடொன்று கலப்பதற்கே, பஞ்சீகரணமென்று பெயர்)

பஞ்சீகிருத மஹா பூதத்தாலுண்டானதாயும் சுகதுக்கங்களையனுபவிக்காதாரமாயும் இருக்கிறது. ஸ்தூலசரீரம், பால்ய கௌமார யௌவன வார்த்திகியம் முதலிய வியவஸ்தைகளால் சீரணப்படுகிறதால் சரீரமென்று பெயர். (தஹ் - பஸ்மீகரணே) தகிக்கப்படுகிறதென்று பொருளால் தேகமென்றால் பஸ்மபாவத்தை யடைகிறதென்று பொருள்



பிராமணர்களுடைய தேகங்கள் பஸ்மபாவத்தையடைகின்றது. சிலருடைய தேகங்கள் புதைக்கப்படுகின்றது. ஆனதால் எல்லா ஸ்தூலதேகங்களும் பஸ்மமாக்கப்படுகிறதென எப்படிக் கூறலாம்? ஆனால் எந்த எந்த அக்னியால் தஹிக்கப்படுகிறதெனில், எல்லா ஸ்தூலசரீரங்களும் ஆத்தியாத்மிக ஆதிபௌதிக ஆதிதெய்விகாதி தாபத்திரயமென்ற அக்னியால் தஹிக்கப்படுகின்றது.

ஆத்யாத்மிகமென்றால் தேகத்தை விஷயீகரித்துண்டாவது அதற்கு அத்யாத்மமென்று பெயர், அதனாலுண்டாகும் துக்கத்திற்கு அத்தியாத்ம துக்கமென்று பெயர். அவையாதெனின் வாதபித்தசிலேஷ்மங்களாலுண்டாகும் தலைவலி முதலிய வியாதியால் அடையப்படும் தாபமே அத்தியாத்மதாபமென்று பெயர்.

ஆதிபௌதிகமென்றாலென்ன? பூதங்களை விஷயீகரித்துண்டாகிற தாபத்திற்கு ஆதி பூத தாபமென்று பெயர், அது யாதெனில் திருடர் புலி முதலியதாலுண்டாகும் துக்கரூபமான தாபம் ஆதி தெய்வமெனில் தேவர்களை விஷயீகரித்துண்டாகும், குளிர், வெயில், மழை, இடி, மின்னல் இவைகளாலுண்டான துக்கரூபமான தாபம் ஆதி தெய்வதாபமெனப்படுகிறது.

பி—ஸூக்ஷ்ம சரீரமென்றாலென்ன?

உத்திரம்—அபஞ்சீகிருதபூதகாரியம் 17 இலக்ஷணங்களோடு கூடியது. பதினேழு தத்துவங்கள் யாது? ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து. பிராணாதிகள் ஐந்து, புத்தியும் மனதும் கூடி ஆக பதினேழு தத்துவங்கள்.

பி—ஞானேந்திரியங்கள் எவை?

உ—காது, துவக்கு, கண், நாக்கு, கிராணம். காது என்றால், காதின் துவாரத்திற்குள்ளிருக்கும் ஆகாசத்தை யாச்ரயித்த சப்தத்தை கிரஹிக்கும் சக்தியையுடையது. துவக்கென்றால் தோலுக்கு வேறாக, அதையே ஆச்ரயித்து பாதம் முதல் தலைவரையில் வியாபித்துச் சீதோஷ்ணாதிஸ்பரிசகிரஹண சக்தியோடு கூடிய இந்திரியத்திற்கு துவிந்திரியமென்று பெயர். சக்ஷுரிந்திரியமென்றால் கண்ணுக்கு வேறாக, கண்ணையே ஆச்ரயித்து முழியின் நுனியிலுள்ள ரூபாதிகளை கிரஹிக்குஞ் சக்திக்கு சக்ஷுஸென்று பெயர். ஜிஹ்வை யென்றால் (நாக்கு) நாக்கிற்கே வேறாக நாவையே, ஆச்ரயித்து அதின் நுனியிலிருந்து ரஸாதிகளை கிரஹிக்கும் இந்திரியத்திற்கு ஜிஹ்வை என்று பெயர். கிராணேந்திரியமென்றால் மூக்கிற்கு வேறாக, அதையே யாச்ரயித்து அதின் நுனியிலிருந்து வாசனைகளை யறியுஞ்சக்திக்கு, கிராணமென்று பெயர்.

பி—கர்மேந்திரியங்க ளெத்தனை வகைப்படும்?

உ—வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் (வாய், கை, கால், குதம்குறி) வாக்கென்றால், வாய்க்குவேறாக அதையே யாச்ரயித்து எட்டுஸ்தானங்களிலிருந்து சப்தோச்சாரணத்தைச் செய்யும் சக்திக்கு வாக்கென்று பெயர் அஷ்டஸ்தானங்களாவன. உரஸ், கழுத்து, தலை, கன்னம், நாக்கு, பல்லு, உதடு, மூக்கு இவைகளே. பாணீந்திரியமென்றால் கைக்கு வேறாக அதையே ஆச்ரயித்து கொடுக்கல் வாங்கல் முதலிய காரியங்களைச் செய்யும் இந்திரியங்கட்கு பாணி இந்திரிய மென்றுபெயர்: பாதேந்திரியமென்றால் பாதத்திற்கு வேறாக பாதத்தையே தழுவி, அதிலேயே இருந்து நடக்கவும் ஓடவும் உபயோகப்படுகிற, இச்

திரியத்திற்குப் பாதமென்று பெயர். பாயு இந்திரியமென்றால், குதத்திற்குவேறாக அதையே தழுவி மலத்தை வெளியாக்குவதற்கு பாயுவென்று பெயர். உபஸ்தேந்திரியமென்றால், உபஸ்தத்திற்கு வேறாக, அதையே யாச்ரயித்து சுக்லமூத்திரங்களை வெளியாக்கும் இந்திரியத்திற்கு உபஸ்தமென்று பெயர். இவைகளே கருமேந்திரியங்கள்.

பி—அந்தக்கரணமென்றாலென்ன ?

உ—(மனோபுத்தியகங்காரம் சித்தமென ஐந்து) மனத்திற்கு ஸ்தானம் கழுத்து) (புத்திக்கு முகமிருப்பிடம்) சித்தம் நாபியிலிருக்கிறது. அகங்காரம் ஹிருதயத்திலிருக்கிறது. (இவைகள் உட்புரத்தில் ஹிருதயத்தை யவலம்பித்தந்தந்த ஸ்தானங்கள் மட்டும் வியாபித்திருக்கிறதென சிலர் கூறுகிறார்கள். இவைகளின் விஷயங்கள், (மனத்திற்கு ஸம்சய விருத்தி) (புத்திக்கு நிச்சய விருத்தி) (சித்தத்திற்கு தாரண விருத்தி) (அகங்காரத்திற் கபிமான விருத்தி) அநுசந்தானம் பண்ணுகிற அந்தக்கரண விருத்திக்கு சித்தமென்று பெயர் அபிமானிக்கிற அந்தக்கரணவிருத்திக்கு அகங்காரமென்று பெயர் சித்தமானது புத்தியில் அடங்கியிருக்கிறது. எனெனில் விஷயத்தையறியும் சக்தி பொதுவாயிருப்பதால் அகங்காரமானது மனதிலடங்கியிருக்கிறது. சங்கல்பமென்பது பொதுவாயிருப்பதால் புத்திக்கு அபூர்வத்தை சிந்திப்பது விஷயம், சித்தம்பூர்வானுபவத்தை சிந்திப்பது விஷயம். மனஸ் உள்ளும் புறம்புமுள்ள விஷயங்களை யறிவது விஷயம் அகங்காரத்திற்கு அநாத்மாவை ஆத்மாவென்றெண்ணுவது விஷயம்.

பி—பிராணாதிகளென்றால் என்ன ?

உ—பிராணாபான ஸமானோதான வியானனென ஐந்து. அவைகளின் ஸ்தானங்களைக் கூறுகிறோம்.

1. ஹிருதயத்தில் = பிராணன்
2. குதத்தில் = அபானன்
3. நாபிதேசத்தில் = ஸமானன்
4. கழுத்தில் = உதானன்
5. ஸர்வசரீரத்திலும் = வியானன்

இவைகளின் விஷயங்களாவன. பிராணன் மூச்சை வெளிவிடுகிறது. அபானன் உள்ளேயிழுப்பது உதானன் உயரத்தூக்குவது ஸமானன் ஸமம்பண்ணுவது வியானன் முழுதும் வியாபிக்கச்செய்வது இவைகளில் உபவாயுக்களாகு. நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன், இவைகளின் விஷயங்கள், தும்மல் முதலியன.

இந்திரியங்கட்கதிபதிகள்.

| | இந்திரியம் | | தேவதைகள் | |
|---|---|---|---|---|
| 1. | சுரோத்திரம் | = | திக்கு | |
| 2. | த்வக் | = | வாயு | |
| 3. | கண் | = | சூரியன் | ஞானேந்திரியங்கள். |
| 4. | ஜிஹ்வா | = | வருணன் | |
| 5. | கிராணம் | = | பூதேவி | |
| 1. | வாக் | = | அக்னி | |
| 2. | பாணி | = | இந்திரன் | |
| 3. | பாதம் | = | உபேந்திரன் | கருமேந்திரியங்கள். |
| 4. | பாயு | = | மிருத்யு | |
| 5. | உபஸ்தம் | = | பிரஜாபதி | |



| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மனது | = | சந்திரன் | |
| 2. | புத்தி | = | பிரகஸ்பதி | |
| 3. | சித்தம் | = | ருத்திரன் | அந்தக்கரணசதுஷ்டயம். |
| 4. | அகங்காரம் | = | க்ஷேத்ரக்ஞன் | |
| 1. | பிராணன் | = | ஈசுவரன் | |
| 2. | அபானன் | = | விசிஷ்டன் | |
| 3. | வியானன் | = | விச்வசிருஷ்டா | பிராணபஞ்சகம். |
| 4. | உதானன் | = | விசுவயோனி | |
| 5. | ஸமானன் | = | அயோநிஜன் | |

இவைகளில் பிராணமய கோசமானது கிரியா சக்தியையுடையது காரணமேனோமயகோசமானது இச்சாசக்தியையுடையது காரண ரூபம். இவைதும் கூடிய லிங்க சரீரமென்று பெயர்.

வரும்.

## என் தலைவிதி

இத்தேசத்திலனைவரும் தமக்குத் துக்ககாலங்கள் நேர்ந்த "என் தலைவிதி" என்று கூறுவது வழக்கம். விதி யென்னக்கேட்டால் பிரமன் சிருஷ்டிக்கும் காலத்தில் தமக்கு வரவேண்டுமென்று விதித்திருக்கிறார் என்பர் சிலர். என் பென்பர் சிலர், இதனுண்மையாதென விசாரிப்பாம்.

மார்களும்கூட இவ்வார்த்தையைவிடாது சொல்லுவார்கள் தை நமது தேசத்தில் பண்டைய காலம் தொட்டு வழங்கப் கின்றது. இவ்வாக்கியமானது மஹாதுக்கத்தை அக்கண சாந்தப்படுத்திவிடுகின்றது. மஹாசுகந்தானுண்டாகும் ரத்தை யளாக்ஷணத்திற் றுலைக்கும் வலிமையுடையது. பாம வ்வார்த்தையினாலேயே துக்கசாகரத்தை யடைவதுடன் அக தையும் பொழிக்கிறான். கிழவனும் தன்னை யாதரிக்கும் தா பனை இழந்து தத்தளிக்கும் காலத்தும் என் தலைவிதி யென்று கத்தை நிவர்த்தித்துக் கொள்ளுகிறான். பெரிய அரசனும் ம தக்கப்பண்டிதர்களும், இயல்பாகவே இவ்வார்த்தையின் ாயறிந்து துக்காதிகளில் மூழ்குவதில்லை. ஆனதினால் இவ்வா மகிமைபொருந்தியதே. எப்பொருளைக்கொண்டு இவ்வார்த் மவர், மனத்தின் வழியாக நாவிலுதிக்கின்றது, நாம் என்னும் கூறுகிறோம் என்றால், கூறுவோம்.

மென்பது சரீரமா ? அல்லது வேறா ! சார்வாகர்களும் மற் ரும் சரீரத்தையே நாமென்று எண்ணுகிறார்கள். அது அறி ய. சரீரத்தை விசாரித்தால், பூதாம்சமேயன்றி வேறல்ல.

இச்சரீரம் ஸ்தூலபூதங்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. இ[illegible]ப் பூதங்களோ ஜடப்பொருளைச் சார்ந்தன. இது அன்னத்தைத் தின் [illegible]யப்பதினால் வளர்கின்றது. தாயினது யோனியிற் பிதாவானவன் காம[illegible]த்தாலே ரேதஸ்ஸை விட்டால் அது கர்ப்பாசயத்தில் சுரோணிதத்தோ[illegible]டு பரிபக்குவப்பட்டு பத்துமாசத்திற்குள், பூரணமான சரீரமாகின்ற[illegible]து. இக்கருப்ப ரகசியத்தை சமயம் நேர்ந்தபோது கூறுவோம். [illegible]ந்தடாது சென்று கீழே விழுந்தவுடன் தாயினது பாலால் வளர்க்[illegible]கப்பட்டுப் பிறகு அன்னத்தால் வளர்க்கப்படுகின்றது. நாம் உண்ணு[illegible] உணவுகள் மூன்றாகப்பிரிந்து அதில் ஸ்தூலபாகமனைத்தும் ஸ்தூ[illegible]ல சரீரத்தை வளர்க்கின்றன. சூட்சுமபாகங்கள் மனதையும் இந்திரியங்களையும் வளர்க்கின்றன. இங்ஙனம் அன்னத்தால் அபிவிருத்தியாகி அன்னமின்றேல் அழிகின்றது. ஆனதினால் இச்சரீரத்தை எப்[illegible]படி நான் என்று கூறலாம். நான் என்று சேதனத்தையே [illegible]ல் கூறுகிறார்கள். இச்சரீரத்தையே நான் என்று கூறத்துணிந்தால்[illegible], மரத்தையும் நான் என்று கூறவேண்டும். ஏனெனில் மரமும் ஜட[illegible]ம். சரீரமும் ஜடந்தான். இறந்த சவத்தையும் நானென்னக் கூறலாம். [illegible] அங்ஙனம் கூறுவது வழக்கமில்லை. ஒருவனிறந்தால் சரீரமெதிரிலிருக்[illegible] அவன் எங்கேபோய்விட்டானென்று சுற்றத்தாரனைவரும் வீழ்ந்[illegible]ழுகிறார்கள். [illegible]லக்ஷணம் நீங்கிவிடாதிருந்தால் நாற்றமுண்டாகிவிடுகின்[illegible]து. [illegible]வது பிணத்தை நான் என்று கூறத்துணிவானோ? [illegible]யானன்றோ அங்ஙனமே சரீரத்தையும் நான் என்று கூறலாகாது. அ[illegible]ன்றேல் நான் என்பதெதுவென்றால் சரீரத்தையாள வல்லமையுடைய[illegible], மற்றொரு பொருளே. அப்பொருளையே ஆன்றோர் ஜீவனென்பர். ஜீ[illegible]வலக்ஷணம் யாதெனில் இத்தூல சரீரத்தையொழித்து இதற்கு விலக்ஷ[illegible]ணமாக சூக்ஷுமமான பூதங்களாலமைந்த சூக்ஷும சரீரமென்றொன்[illegible]ருக்கிறது அச்சரீரமும் நாமல்ல. அதுவும் ஜடப்பொருளாலமைந்ததே [illegible]அசரீரத்தில்மாத்திரம், நாம் இருக்குங்காலத்தில் கனவைக்காண்கிறோ[illegible]ம், பிறகு விழித்தவுடன் நாம் கனவு கண்டோமென்று ஞாபகமுண்[illegible]டாகிறது. அக்கனவையறிந்தவன் ஜடப்பொருளுக்கு வேறான சேதனம[illegible]மாயிருத்தல் வேண்டும். அங்ஙனமே தூங்குமஸ்தானத்திற்கு காரண[illegible]ரமென்று பெயர். அக்காலத்தில் நாமொன்றையுமறியாமலிருந்து வி[illegible]ழித்தவுடன் இதுவரையில் தூங்கினோம் என்று கூறுகிறோம், அத்[illegible]த்தையும் அறிந்தவன் ஒருவனிருத்தல் வேண்டும். இவ்விஷயத்[illegible] காலம் நேர்ந்தபோது விரிவாக விரிப்பாம். ஆனதால் ஸ்தூலசூ[illegible]ம காரண சரீரங்கட்கு விலக்ஷணனாய் இச்சேதனனிருத்தல் வேண்[illegible]டும் அச்



சேதனன் இச்சரீரத்திலிருந்து வியவகாரங்களைச் செய்கிறான். அவன் முற்கூறிய மூன்று சரீரங்களையும் அறியும் சக்தியுள்ளவன். இவைகளழிந்தாலும் அழியாதவன், அவன் நித்தியன் அவன் இத்தூல சரீரத்தை விட்டு வெளிக்கிளம்பியவுடனே இறந்தான் என்று கூறுகிறார்கள் அவன் எப்படி வெளிக்கிளம்புகிறான் எவைகளோடு போகிறானெனில் அதற்குத்தாரம் வேதாந்தசாஸ்திரிகள் கூறுவது யாதெனில் பஞ்சபூதங்களுக்கு ஆதாரமாயும் இவ்வுலகமனைத்தும் தோன்றுவதற்குக் காரணமாயும், அனைத்தையும் தாங்கியும் ஒன்றிலுமொட்டாமலாகாசம்போல் வியாபித்து, விளங்குகிற பரமேசுவரனை ஜீவாத்மாவிடத்து நிர்வசனீயமான அஞ்ஞானத்தால் ஜீவபாவமுண்டாகி, ஸூக்ஷுமகாரண சரீரங்களுடன்கூடிய, அநேக கோடிஜீவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஸ்வச்செனமங்களியற்றும் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி ஸ்தூலதனுக்களுண்டாகிறது. அச்சரீரங்களை ஒவ்வொரு ஜீவர்களும் கா[illegible]ன நினைத்து விவரிக்கிறார்கள். சரீரத்தை நாமெனனினைத்து இச்ச[illegible]த்தின் சுகத்தின் பொருட்டு கிருத்தியங்களைச்செய்கிறார்கள். அவ[illegible]வைகளனைத்தும் சூட்சமசரீரத்தின் அம்சமான மனதில், பதிந்து கிடக்[illegible]றன. அவ்வாசனையின் வசத்தாலேயே நமது கருமங்களும் நடத்தப்படுகின்றன. ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டுச் சென்றாலும் அவனோடுகூடச்செல்லும் சூக்ஷுமசரீரத்தில் ஸர்வவாஸனைகளும் குடிகொண்டிருப்பதால் அவ்வாசனைக்குத்தக்கவாறு ஜன்மங்களுண்டாகின்றன. இதைப்பற்றி ஜன்மாந்தரமெனறு வேறுவிஷயமாக வெளிகூறுவோம். அவ்வச் செனமங்களிலுண்டாகும் ஸுகதுக்கங்களனைத்தும் பூர்வஜென்மங்களிற் செய்த கருமத்தின் பயனே. எப்படியெனில் ஒரு வீட்டில் குடியிருந்த ஒருவன் இவ்வீட்டிலிருக்கும் காலத்தில் பொய்சாக்ஷி சொல்லியும், திருடியுமிருந்து வேறுவீட்டுக்குச் சென்றாலும் முன் செய்த குற்றத்திற்காக தெண்டிக்கப்படுவானன்றோ. அங்ஙனமே பூர்வசரீரத்திலிருந்த காலத்திற்செய்த பாபபுண்ணியங்கள் மற்றொரு சரீரத்தில் ஸுகதுக்கங்களையனுபவிப்பது இயல்பே வாசனையின் வழியாகவே பிரவிருத்தியுண்டாவதால் அப்பிரவிருத்திக்கு தக்கவாறு பலனுமடையப்படுகின்றது ஆனதால் "என் [illegible] என்பது நான் பூர்வஜன்மத்தில் செய்த கருமத்தின் ப[illegible]றான். ஆனதால் "என் தலைவிதி" என்று நம் தேசத்தில் எல்லோரும் கூறுவதற்குக் காரணம் ஒருவாறு தெரிந்தது. நான் பூர்வஜன்மத்தில் செய்த கருமத்தின பயனே என் தலைவிதி [illegible]தின் பொருள், பிரமன் என தலையில் எழுதினான் என்றால் பி[illegible]ர்கள் செய்த

14534

கருமத்திற்குத்தக்கவாறு, பலனையளிக்கிறார். நியாயாதிபதியானவன்
தண்டனை விதிப்பதுபோல் ஈசுவரனும் இவர்கள் செய்த பாபபுண்ணிய
கருமத்திற்குத் தக்கவாறு பலனைக் கொடுக்கிறார். சிலர் தனக்குத் து
க்கமுண்டான காலத்தில் பாழுந்தெய்வம் எனக்குத் துக்கத்தைக்
கொடுத்ததே, என்பார்கள் அது மூடத்தனம் ஸர்வஜீவதயாபரனா
ஈசுவரனுக்கு யாரால் ஆகவேண்டுவதென்ன? அவர் எல்லா காரியங்க
ளையும் அஸங்கனுயிருந்து லீலையாய் செய்கிறார். அங்ஙனமே பிரம
சூத்திரத்திலும் "லோகவத்து லீலாகைவல்லியம்" என்று கூறப்பட்
டிருக்கிறது. அவருக்கு வைஷம்மியமுமில்லை. அவிஸ்வாஸமுமில்லை
அவர் பெருங்கருணைக் கடலானதால், அவரைத் தூஷிப்பது பி
சகு சுகப்படுங்காலத்தில் ஈசுவரனை நினைப்பதேயில்லை. அக்காலத்தி
ல் என்னாலன்றோ இக்காரியம் செய்யப்பட்டது. என்னுடைய சாமர்
த்தியம் யாருக்கு வரும் என்று அகங்கரித்துக்கொள்ளுவதும் வழக்க
மன்றி. அக்காலத்திலும் ஈசுவரனே இச்சுகத்தையும் கொடுத்தான்
என்று அவரை ஸ்தோத்திரஞ்செய்தால் நன்று. அக்காலத்தில் ஈசு
ரஞாபகமே வருவதில்லை. இது எவ்வளவு அநியாயம். ஆனதால்
நமக்கு எச்சம்பவம் வரினும் நமது கருமத்தால் நேர்ந்ததெனச்சகித்
துக்கொண்டு மறுபடியும் துக்கப்படுவதற்கு ஹேதுவான கருமங்க
ளைச் செய்யாமல் ஸாத்விகமான கருமங்களைச் செய்வது அறிஞரு
டைய இலக்ஷணம் இதற்காகவே நம்மான்றோர்கள் எக்காலத்தும் "எ
ர தலைவிதி" என்று மஹா துக்கங்களையும் சகித்துக்கொண்டுவரு
கிறார்கள் ஆனதால் பண்டைய காலந்தொட்டு பாமரர்களும் வழங்
கிவரும் இவ்வாக்கியம் நம்மவரிடத்திலோர் நன்மையின்பொருட்டே
வழங்கிவருகின்றது. சுபம்.

## அதிக ஆசை மிகுதி நஷ்டம்.

—※(:o:)※—

பூமகள், நாமகள், தேமகள், மூவரும் சேர்ந்து மகிழ்வாழும், செல்வபுரி
எனத்தகும் தஞ்சைமாநகரின்கண் குணத்தாலும், மணத்தாலும், கனத்தாலும்,
இனத்தாலும் ஸர்வமித்திர ஆப்தரத்தினை அப்ரஞ்சியெனக் கொஞ்சிக்குலாவும்
மிஞ்சுவீரிய விஞ்சை பிரதாபமகீய முகில்தேவய நிரையார பிரசங்கவாருதி
நயமிற சொலத்துணைத்து நற்சுகத்தால் சிரமசைத்து ஆனந்தம் விளைத்து பாவல,
நாவல, காவல, சிரேஷ்ட சிரோபூஷணங்களுக்கு முன்னிகராய், சொன்னய
மாம் பரிமளம்வீச, பொற்றுகலமாம் தென்றலதுசார, அன்பாஸ்த்தமதாம் நறும
லர்ச்சோலையில் மேவ, அகமெலாம ஆனந்த நீராட்டி, சீராட்டி, பேரோட்டி
நிர்க்கும் கார்முகில் சுரந்த, நேர்மிகச் செய்த நற்றிருத்திய மிகுந்த சுந்தரமித்

ற்ப்புகழ்
யற்பதினல்
த்தாலே
டு பரிப
து. இச்
ந்துமாத
தப்பட்டுப்
ம் உணவு
ல சரீரத்
ரியங்களை
யாகி அவ
படி நான்
ல் கூறுகி
, மாத்தை
மை. சரீரமு
அங்ஙனம்
க அவன் எ
மூகிறார்கள்.
து. யார
யானவரோ
ந்ரேல் நான்
, மற்றொரு
நீவலக்ஷணம்
ணமாக கு
ருக்கிறது
அசரீரத்தி
ரம், பிறகு
டாகிறது.
மாயிருக்க
ரி பெண்று
ழித்தவுட
ர சுத்தை
ந்த காலம்
மம கா
ரடும் அச்



ரா, சுந்தரமும் மின்விக்கை எமது சிந்தையிற்றோய்ந்து நவரத்தினகவி சிரே
ஷ்டர்களும், நவவித்தியா நாவலவீரர்களும், சதுச்சாஸ்த்திர முதுமைமேவியர்
களும் மந்தகாசமாருத வசனாமிருத சொற்கொத்தெடுத்து நலமுறற்றெடுத்து,
வாரந்தவராதுளித்து, கருமணமாலையதைக் கோணமதாய்த்தொடுத்து வருவதை
தமியேன் நினைத்து இறகு முளைத்த மனஞ்சலித்து உச்சாகஞ்சொலித்தெழும்
போது மலைத்து நிலைதடுமாறினது ஆயினும் செஞ்சொற்றமிழ்ச்சுவையும் அம்சதுர
சுகமனுபவிக்கும் மிக்கிருக்கு நெருஞ்சியிட்டவசமாய் எம்கோரவை நிகராகு
மே என எங்கித்தியக்கி நின்றணிக்கு, நீகரற்ற எம்பதிப்புக்கும் பொருட்பெற்ற
உலகோர்க்கு உன்னதமாம் கருத்துற்று கண்டானவேண்டி புல்லறிவிற்குப் புல
ப்பட்ட அமுக்காற்றலும் அவாப்பெருக்காலும் விளையப்பெற்ற மிகுந்தகஷ்டத்
திற்கு திருஷ்டாந்தமாக அடியிற்கண்ட கதையைவிடுத்து நவரசக்கலையுடுத்த
நின்னிருபிம்மங்களை அபயமென்றோரடுத்த ஆரம்பிக்குமிதனை அரங்கேற்றி எம
மைப்போற்றவும் முறையும் வேண்டுகிறோம்.

### கதையின் வரலாறு.

அபிராமபுரம் என்ற ஓர் சிற்றூரில் அருக்காறு என்னும் பொறாமையை
ஆபரணமாகவும், அவாப்பெருக்கென்கிற பேராசையைப் பூஷணமாகவும், பூண
ப்பெற்றுள்ள அங்கப்பசெட்டி யென்னுமோர் வணிகன் அளவற்ற செல்வ விய
த்துக்கு அதிபதியாகயிருந்து வந்தான் அவன் எக்கணத்தும் அன்னியருடைய
சொத்துக்களை அபகரிக்கும் விஷயத்தில் கண்ணுங்கருத்து முடையவனாக இரு
ந்து வந்ததுமன்றி, அவன் சொந்தபணத்தில் ஒருகாசேனும் செலவழிக்க மனமி
ல்லாதவர்மியாகவுமிருந்து வந்தான். அவன் தனக்கு மனதொத்த வேலையாளொரு
வனை வேண்டி மேற்கண்ட அபிராமபுரத்தில் வசித்துவரும் திம்மப்பையர் என்
னும் தெய்வபக்தியிற் சிறந்த விப்ரகுலபஞ்சாங்கியானவர், தனக்கு புரோகித
மூலமாய்க்கிடைக்கும் ஐவேஜியைக்கொண்டு மனைவிமக்களோடொன்றுபடுத்திவரும்
அந்தணரையன்றி வேறொருவரும் கிட்டாமையாலவ்வவரை நட்பாகக்கொண்டு
உடலும் உயிரும் தேனும்பாலும் போலவெகு அன்யோன்னியமாய் இணைபிரி
யாதமானையொத்து கூடிச்சுகித்திருந்து வந்தான். மேற்கண்ட மறையவர் தினந்
தோறும் அந்தணர்க்குரிய ஆசமனிப்படி வைகறையிற்றுயில் நீங்கி கதிரவன்
உதிக்குமுன்னர் துயிலெழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களைத்தாம் வழுவற
நடத்திய பின்னர், அவ்வூருக்கருகாமையில் பாழடைந்து அடியோடு இடிந்து
விழுந்து கிடக்கின்ற ஈசுவரன் கோவிலின் முன்முகட்டிலுள்ள விக்கினேசுவர
ரைப்பக்தி சிரத்தையோடு வணங்கி அவர் மீது சரிந்து விழுந்து கிடக்கின்ற
கற்களில் சிலவற்றை எடுத்தப்புரப்படுத்திப் பூசித்து வருவதை வழக்கமாய் வைத்
துக்கொண்டிருந்தார். இவ்வண்ணம் ஒவ்வொரு நாளும் தவறாது நடத்திவருவ
தைக் கண்ணுற்ற போதெல்லாம் செட்டியார் இம்மறையவரைப்பரிகாசஞ்செய்து
வருவார். அதைச்செவியேற்ற அந்தணர் கொஞ்சமும் பொருட்படுத்தாது புன்
னகைகொண்டு "யான் எடுத்த ஜன்மம் எற்றுக்கு? இப்பூதலத்தின்கண்ணுள்ள
சராசரமனைத்தும் படைத்தளித்தழிக்கத்தக்க வல்ல கடவுளுக்குத்தொண்டுசெ
ய்யவேண்டியேயன்றி வேறென்னை" எனப்புகன்றுதான் இயற்றவேண்டிய கரு
மங்களை வழுவற நடத்தி வருவார். இப்படியிருக்குந்தருவாயில் ஓர்நாள் மறை
யவரன்றி செட்டியார் மாத்திரம் தனிப்பட்டு தனது தேகாரோக்கியத்தினிமித்
தம் மேற்கூறிய விநாயகமூர்த்தியின் திருவாலயத்தின் முகட்டில் அமர்ந்து
திசைகளோடும் (வானுறவோங்கி வளர்ந்திராநின்ற ஓர்) ஆலமரத்தினடியாரத்தி
னின்று வரும் பரிமளமிகுந்த இளந்தென்றல் கொண்டு நின்றனன். அச்சமயத்
தில் தற்செயலாய் ஓர் தொனியுண்டாயிற்று! அத்தொனியைச் செவியேற்ற

அக்கப்பச்செட்டி ஆ! ஆ! என்னவிந்தை! இங்கு விசும் இவர்க்கென்றவின்றி வேறு தொனிவரக்காரணமென்னே வென்றையுற்று, காற்புறமும் பார்த்து மொருவரும் யாதும் தோன்றிலராய் ஓ! ஓ! விக்கேசுவரப்பெருமானின் திருவருளாலே யெனத்தேர்ந்து எழுந்து கரிமுகவன் திருச்சந்நிதிமுன் அதிக பயபக்தியுடன் வணங்கி "ஏறு கணநாத! " இனக்குள்ள இடையூறனைத்தும் நீக்கத்தலைமுடி நவரத்னமாலைகளைத் தப்புறப்படுத்தி அவ்வயோடு பூசித்தடி பணிந்தேற்றிப் போற்றிவருட அந்தணனுக்கு இதுகாறும் எவ்விதமான கைமாறளித்தனனோயா; அதனை அடியேற்கு அறிவிப்பையேல் அவ்வாறே யானும் நின்திருவருட்படி நடந்து எளியனது இன்னலினைத்தும் தீர்த்துக்கொள்ள வெண்ணுகின்றேனை விரைவில் விடையருளுது" எனப்பிரார்த்தித்தனன்.

பிரதித்துவனி உண்டாயிற்று யாதெனில் "யான் இதுகாறும் வெகு சமுசாரியும் மிக்க ஏழையும், தக்க தருமசிந்தையுள்ளவனும் வெகு தயாளுவான வேதியருக்கு மனமகிழ்ந்தாசம்பூரித்து ஒன்றும் உதவிபுரிந்ததிலில்லை யாரேனும் அடுத்துவரும் புதுவருடப்பிறவேசதினத்தன்று தவறாது ரூபா 10000 அளிக்கப்போகிறேன்" றென்றது. இவ்வற்புத திருவாக்கியத்தைச் செவியேற்ற செட்டியார் திடுக்கிட்டு, இக்கிரமைகொண்டு இங்கு, சிலருபமாயுள்ள இச்சடவிக்கிரகங்களைத் தவிர வேறு ஒருவரையுங்காணேம்! இவ்வொலி உண்டான மூலகாரணம் விளங்கவில்லையே என்று தனக்குத்தானே நெடுநேரம் ஆலோசித்தும் ஒன்றுந்தோன்றாது கடாசியாய் கண்முன்னே நின்ற பிம்பரூபமாக விளங்கும் கடவுளின் வாக்கியமெனவே துணிபுற்று தன் திருப்திபடுஞ்செல்லறு தனது புல்லறிவின் சிறுமையாலும் தனக்கிணையிலா தனக்குள்ள அவாப்பெருக்கின் மிகுதியாலும், தனது அன்பாகனுக்கு கிடைக்கப்போகும் தனத்தினை எவ்வாற்றானும் தந்திரமாகக் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமெனும் எண்ணத்தை வகித்தெழுந்து உடனே அந்தணனைத் தன்பால் வரவழைத்து எனதுயிருக்குயிராய் விளங்கும் அன்பனே எனக்கு நின்மீது நெடுநாளாய் ஏற்பட்டுள்ள அன்பின் பெருக்கால் இன்பமளிக்கத்தக்க பலனை "இன்று நான் நீ அடையும்படியான பெரும்பாக்கிய பரிபக்குவமப்பிராப்தியை கூடயிட்டியதென்று நினைக்கின்றேன் யான் செப்பும் நன்மொழிக்கு மறுத்துரைக்காது ஒப்புக்கொண்டுவீராகில் மேலாகமொழிந்தப்படிக்குள்ள பெரும்பிரயோசனத்துக் குரியவனாவாய்" என மொழிந்தான் அவ்வாக்கியத்தின் முடிவு முற்றும் முடிவதற்குமுன் அந்தணன் அடங்காமகிழ்ச்சிகொண்டு, ஆநந்த தாண்டவமாடி தன்னை மறந்து உள்ளமகிழ்ந்து உடல்பூரித்து தாங்களிஷ்டப்படியின்படி தவறாது நடக்க ஆயத்தமாயிருக்கின்றேனென மொழிந்தான். இவ்வாக்கியத்தைச் செவியேற்ற பேராசைக்கள்வனான வணிகன் தந்திரமாக ஓர் மொழிசொல்லத்தொடங்கினன்.

ஓ ஐயன்மீர் இப்பூதலத்தில் அளவிறந்த தனத்துக்கதிபதியாயிருக்கிறதும், தனமில்லாமைக் குரியவனாயிருக்கிறதும், அவரவர் யுக்திபுத்தி சாமர்த்தியத்தாலல்லவா? அன்றியும் அவரவர்கள் முன்ஜென்மத்திலியற்றிய பூசாபலத்துக்குத் தக்கப்படி தான் இச்சன்மத்தில் உண்டாகக்கடவது என்று அறுதியாய் ஏற்பட்டிருக்கிற விதியை அனுசரித்து வெகுகாலமாய் நடந்தேறி வருகின்றது. இதற்கு வேறு உவமை சாட்சியாய் எற்றுக்கு என்னையும் நின்னையும் பார்வைக்கொண்டே தெரிந்துகொள்ளலாம். கடவுளின் கிருபைக்கு அபாத்திரனாகவும், மிகுந்த ஏழ்மையையும், எப்போ நெடுங்காலம் அனுசரித்து வருகின்றவனுமுள்ள நினக்கு யானே யென்றேனும் கொஞ்சம் பொருளீட்டி உதவிபுரிவோமென்றால் கடவுளின் கிருபாகடாக்ஷத்துக்கு யானும்பாத்திரனல்லாதவனாகி விடுவேனோ என்று அச்சம் எமக்கு மேலிடுகின்றது ஆனால் அதற்கு ஓர் சூழ்ச்சி



இயற்றலாமென எமக்கு தோற்றுகின்றது. எவ்வாறெனில், "உமக்கு பிரதிதினமும் உமது தொழிலினால் கிடைக்கும் ஐவேஜிகளில ஓர் குறிப்பிட்ட நாளின் வரும்படியை மட்டும் நான் அடைகிறதென்றும் அதற்கு பிரதிப்பிரயோசனம் என்கிற முறையில் எனக்கிஷ்டமான தக்கபொருளை நினக்கு இப்பொழுதே கொடுத்துவிடலாமென்றும் எண்ணிக்கொண்டுள்ளேனென்றான் அதற்கு அவ்வேதியன் எனதில்லாள் வெகுபொல்லாள்; அவளனுமதியின்றி ஒருவிஷயமும் யான் இயற்றுகிறதில்லை; ஆதலின் அவளனுமதியை ஒரு நொடியில் பெற்று வந்து தங்கள் கருத்தை முற்றுப்பெறும்படி முடித்துவிடுகிறேனென மொழிந்து உடனே தனதில்லாளிடம் ஏகி வருங்கால் வழியில் எதிர்பட்ட தனது மித்திரனிடம் சண்டமாருத முதலியைக்கண்டு தனக்கும் செட்டிக்கும் நடந்த வாறனைத்தையும் (தொடர்ந்து ஆதியோடந்தமாக மொழிந்து இதற்கு எவ்வளவு ஆசை அளிக்கும்படி கேட்கலாமென நவின்றான் அதற்கு அவன் நினக்குத்தக்க பொருளுதவி அளிப்பதாக மொழிந்த நின்தனபநிய வணிகனுக்கு நின்னிடத்தில் பிரதிப்பிரயோசனமாக அபேக்ஷிக்கும் ஓர் நாளின் அற்பவரும்படி மிகவும் பெரிதாகக் காணப்படவில்லையே, இதைப்பற்றி கொஞ்சம் யோசித்துத்தான் பிறகு முடிவு செய்யவேண்டியதாயிருக்கிறது. எனெனின், நின்னிடத்தில் அவர் அபேக்ஷிக்கிற தொகையிவ்வளவு என்று ஏன் குறிப்பிட்டுச் சொல்லாது, தொகை குறிப்பிடாமலும் ஓர் நாளை மட்டுக்குறிப்பிட்டு அபேக்ஷிக்கிறபடியால் இதில் யாதோ ஒருவிதமான தந்திரமிருக்க வேண்டுமென என் சிற்றறிவுக்கு புலப்படுகின்றது ஆதலால் எனக்கு ஒரு தந்திரந்தோற்றுகின்றது என்னவெனில் மிகுந்த தனமளிப்பதாக மொழிந்த நின்தாதைக்கிசைந்த நேசனோ தக்க தனம் எம்பதற்கு அளவின் பிரமாணம் இவ்வளவு என்பது எனக்கு தெரியவேண்டுமென நவின்று தெரிந்துகொண்ட பிறகு நான் சாற்றவேண்டியதாக இருக்கின்றதென இயம்பு; அதற்கு அவர் நவ்வாவிடில் அவர் அபேக்ஷிக்கிற ஓர் நாளின் வரும்படிக்காக வாய்கொண்டவரையில் அதாவது ரூ 2000 வரையில் கொடுக்க வேண்டுமென கேட்கலாமென நவின்றான். இதைச்செவியேற்ற ஏழை பஞ்சாங்கி இது நல்யுக்தியாயிருக்கின்றதென மனதினில் அடங்காமகிழ்ச்சியோடு வெகு விரைவில் தன் வீட்டு வாசலில் நின்று இன்றையதினம் காலட்சேபத்துக்கு என்ன செய்வோமென்ற ஏக்கத்துடன் தனது ஆசைநாயகன் வரும் வழியையே எதிர் பார்த்தவண்ணமாய் நின்று பரிதவித்துக் கொண்டிருக்கும் தனது அருமைக்காதலியான கௌரியைக்கண்டு தனக்கு தர்ச்செயலாய் நேர்ந்துள்ள விபவத்தினது மகிமையையும், அது விஷயத்தைப்பற்றி நின்னுடன் கலந்தாலோசித்து வெகு விரைவில் வந்து தெரிவிக்கிறேனென மொழிந்த வாக்கியத்தையும், வரும் வழியில் எதிர்பட்ட தனது மித்திரனிடம் கலந்தாலோசித்ததினைபேரில் அவனுரைத்த கடாசியில் இயற்றி முடித்த தீர்மானத்தையும் ஆதியோடந்தமாய் நவின்றதை செவியேற்ற மத்தரும், முத்தரும், சித்தரும், நடத்தும் படியான உத்தமபத்தினி மிகவும் சந்தோஷ சாகரத்திலாழ்ந்தவளாக குதூகலித்து 'நாளைக்குக் கிடைக்கும் பலாப்பழத்தைக் காட்டிலும் இன்றைக்கு கிடைக்கும் களாப்பழமே போதுமானது," நீர் அறிவீர். போதும் மேலும், "அதிக ஆசை அதிக நஷ்டம்" மென்பதையும் "இராசசந்தமுள்ளவன், பிறர் பொருளால் ஜீவிக்கிறவன், கிடைத்ததைக்கொண்டு மகிழாதவன் ஆகிய இம்மூவர்களும் சதாதுக்கத்தையே அனுபவிப்பார்" என்பதையும் பஞ்சதந்திரக்கதையில் நாடகதமனை சம்வாதத்தில் கூறப்பட்டிருப்பதை நீர் தெரிந்துகொள்ளுவல்லபோலும் நீர் இனிமேல் தாமதியாது சென்று கடாசியில் வழியில் எதிர்பட்டு உரைத்த தாய்மொழிந்த நின்னது உயிருக்குயிரான ஆப்தன் வாக்கியப்படி புரிந்து கிடைக்கும் ஐவேஜியுடன் வெகு விரைவில்வந்து சேரவேண்டுமென மொழிந்தனள். (வரு

# இந்தியாவின் தற்கால நிலைமை.

:():

இப்பொழுது இத்தேசமிருக்கும், நிலைமையைச் சற்றுப் பலமாலோசித்துப் பார்ப்போம். இமயமலைமுதல் கன்னியாகுமாரி வரையில் இந்தியாவென்று பெயர். இதில் வசிப்பவரனேக ஜாதியார். அவர்களில் முக்கியமானவர், இந்தியர் மகமதியர், கிறிஸ்தவர் முதலியவர்களே.

## தேசம்.

முற்காலத்தைப்பார்க்கிலும் உஷ்ணம் ஜாஸ்தியாகவே, இருக்கின்றன. அநேகமாகக் காடுகளழிந்து விட்டது. அதனால் விலங்குகளின் ஹிம்சை குறைந்துவிட்டது. காடுகளிருந்த விடமனைத்தும் நாடாய்விட்டது. ஆனால் மழை வேண்டியபொழுது, சரிவர முன்காலத்தைப்போ லவ்வக்காலங்களிற் பெய்வதில்லை. அதற்கு முக்கிய காரணம், காடுகளழிந்துபோனதே. ஐரோப்பியர்கள்கூட காடுகளிருந்தால், மழைபெய்யுமென்று கூறுகிறார்கள். பூமியிலுள்ள பச்சைமரங்கட்கு மேகத்தை ஆகர்ஷிக்கும் சக்தியிருக்கின்றன. காடுகளையழித்துவிட்டதால், மழையும்போதுமானது பெய்யவில்லை. இத்தேசத்தி லெங்காவது ஒரு பஞ்சமிருந்துகொண்டேயிருக்கிறது. ஆனதால் பஞ்சமில்லாதிருந்தால் சௌகரியமாயிருக்கும். அதனால் மற்ற இடங்களிலும் அகவிலை முதலியது அதிகரித்து, கஷ்டத்தை யுண்டுபண்ணுகிறது. எல்லோரும் பூமியில் விளைவதைக்கொண்டே ஜீவிப்பர்களாயிருக்கிறார்கள். பயிரிடும் தொழிலையன்றி மற்றத் தொழிலை யநேகரறியார்.

## ஐசுவரியம்.

முற்காலத்தில் இந்நாட்டையே ஐசுவரியத்திற் மிக்கதாகக் கூறலாம். இப்பொழுதோ க்ஷீத்திரம் மேலிட்டிருக்கிறது. ஏனெனில் நமது தேசத்திலிருந்து அபிவிருத்தியாவது, இங்கில்லாமல் போவதே முக்கியகாரணம். அப்படிப்போவதற்கநேக காரணங்களிருக்கின்றன. அவையாவன முக்கியமாக அரசர்கள் தங்கள் கடமையை ஏராளமாய், தங்கள் நாட்டுக்குக் கொண்டுபோகிறார்கள். மற்றும் மேற்றிசை வியாபாரிகள் புதிது புதிதான சாமான்களைக் கொண்டுவந்து, காட்டி பணத்தைக்கப்பலேற்றிக் கொண்டு போகிறார்கள். நாம் வாங்குஞ் சாமான்கள் நமக்கு ஐசுவரியமாய்ப் பாராட்டக் கூடியதாகவில்லை நாம் வாங்கும் கண்ணாடிகளும், கடிகாரங்களும், சித்திரப் பொம்மைகளும், வாங்கின பிறகு சிலகாலமான மாத்திரம், பிரயோஜனப்படுமேயன்றி பிறகு ஒருபைசாவுக்கும் பிரயோஜனப்படுவதில்லை. மற்றும் நமது தேசத்துச் சரக்குகளெல்லாம் சொற்ப விலைக்கு வாங்கிக்கொண்டு போகப்படுகின்றன. முன் காலத்தினது நடையுடைகள் மேற்றிசையாரைக் நோக்கிமாறுவதால் செலவு அதிகரித்துவிட்டது. முற்காலத்தில் நம்மவர் ஸ்வல்ப செலவில் தங்கள் சரீரத்தைக் காப்பாற்றிக்கொ-



ண்டு 100 வருஷம் திடமாக வாழ்ந்தார்கள். இப்பொழுது வெகு செலவுசெய்து உண்டு சாராயாதிகளை வாங்கிக்குடித்து வெறித்து அற்பாயசில், மாளுவதால் செலவு அதிகரித்துவிட்டது. முற்காலத்தில் ஸ்திரீ புருஷர்கள் பயந்து அடக்கமாயிருந்ததால் செலவு குறைவாக விருந்தது. இப்பொழுது டம்பம் மேல்பட்டு அதிகச் செலவுசெய்யத்துணிந்ததால் செலவதிகரித்தது. தேசம் முழுவதும் ரயில் போட்டிருப்பதால அதற்கு ஏராளமான திரவியங்கள் செலவழிக்கப்பட்டு, அவ்வளவும் அந்நிய தேசத்திற்குப்போய்ச் சேருகின்றன. ஆராயுமளவில், இத்தேசத்தாருக்குப் பூமியையன்றி, வேறு வருவாய் இல்லாததாலும் செலவுகள் ஏராளமாய்ச் செலவழிக்கப்படுவதாலும் பொதுவாகத் தரித்திரம் மேற்பட்டிருக்கிறது. இன்னும் இதற்கு அநேக காரணங்களிருக்கின்றன. விரிப்பின் வளரும்.

## ஜனங்களின் குணங்கள்.

பொதுவாக எல்லாச்சாதியாரிடத்தும் ரஜோகுண மேற்பட்டே இருக்கின்றன. அரசாக்ஷியானது, நீதியாயிருத்தலால் கலகமில்லை. ஆயினும் டம்பம் தர்மம் காமக்குரோதம் முதலியன அதிகமாகவே அதிகரித்தன, திருட்டு முதலியன அரசர்களிடத்தில் பயத்தாலதிகமாகவில்லை. ஜனங்களிடத்தில் ஐக்கியமில்லை. அதற்குக் காரணம் ஈசுவரத்தன்மை வராதலிக்குணக்குறைவே. எல்லோரும் ஒரே தெய்வத்தின் புத்திரர்களென்று சகோதரபாவத்தை யடைந்தில்லாததால் ஐக்கியம் மிக்கக்குறைவாயிருக்கிறது. அது இத்தேசத்திற்கு மிக்கக் குறைவே. ஒருவருக்கொருவர் சண்டையிட்டு நியாயஸ்தலங்களுக்கு கலகங்களபிவிருத்தியாகி செல்லுகின்றன. ஆனதால் முற்காலத்தைப்போல்ச் சாத்விகத்தன்மை சிறிதுமில்லை. ரஜோகுண முதிர்ச்சியால் மாம்ஸ ஆகாரங்களும் குடியும் பரஸ்திரீ கமனமும் முதலிய பஞ்ச மஹாபாவங்களபிவிருத்திக்கின்றன.

## கைத்தொழில்.

இத்தேசத்திற்கெனக் கைத்தொழில் சிறிதுமில்லை. ஏதோ முற்காலத்தில் கண்டுபிடித்திருந்த சிலதொழில்களே ஆங்காங்கு செய்யப்படுகின்றன. இனி சுவதேசிய முயற்சியால் கைத்தொழிலபிவிருத்தியாகவேண்டும். மற்ற தேசத்தாருக்கு நமது நாட்டிலிருந்து ஏராளமான திரவியங்கள் கைத்தொழில் விஷயமாய்ச் செல்லுகின்றன. ஒவ்வொரு தொழிலாளிகளும் வறுமையால் வருந்துகிறார்கள். வியாபாரமென்பது இத்தேசத்தில் மிகக்குறைவே.

## பாஷை.

இத்தேசத்திற்கு சம்ஸ்கிருதம் முக்கியபாஷை அதை தேவபாஷையென்று கூறுவார்கள். அது முற்காலத்தில் தேசமெங்கும் பாஷையிருந்தது. இத்தேசத்துச் சாஸ்திரங்களனைத்தும் முதலில் அப்பாஷையிலேயே எழுதப்பட்டது. முக்காலத்திற் அப்பாஷையிற் பண்டிதர்கள

தேசாரிருக்கிறார்கள்; அரசர்களும் அப்பாஷையை யபிவிருத்திசெய்தார்கள். அத்தேவபாஷைப் பயிற்சி மிக்கக் குறைந்துவிட்டது. இப்பொழுது சிலகாலமாக படிக்கத்தொடங்குகிறார்கள். இனிய விருத்தியாகும்போல் தோன்றுகிறது. அதுவன்றி அதனுடைய மக்களைப்போல தமிழ்தெலுங்கு மலையாளம் கன்னடம், அறுவம மறாராஷ்டிரம் இந்துஸ்தானி குஜராத்தி முதலிய அநேக பாஷைகளிருக்கின்றன. இப்பொழுது ராஜபாஷை ஆங்கிலமாயிருப்பதால் எல்லோரும் அதையே முதன்மையாய்ப் படிக்கிறார்கள். மற்ற பாஷைகளையும சிறிது படிக்கிறார்கள். கல்வி இப்பொழுது ஆங்காங்கு அபிவிருத்தியாகி வருகின்றது. ஆங்கில நாகரீகக்கல்வியே, விருத்தியாயிருக்கிறது. பண்டைய நீதிகளெல்லாம் அநேகமாகக் குறைவுபடுகின்றன. போன நூற்றாண்டைப் பார்க்கிலும் இப்பொழுது வித்தியாபிவிருத்தி சாலவும் நன்றே; இப்பொழுதிருக்கும் வித்தியாயமுயற்சி அபிவிருத்தியானால் மிக்கபயனைத் தரக்கூடியதே.

### நாகரீகம்.

நம்மவரது பழமைநாகரீகமனைத்தும் மெல்லமெல்லக் குறைந்து வருகின்றன. மேற்றிசை நாகரீகம் இங்கு விருத்தியாகிறது. எங்குகண்டாலும் ஆங்கிலபாஷைப்பயிற்சியால், நவீன நாகரீகமே பரவிவிட்டது. பெண்களிடத்திலும், நாகரீகம் வளர்கின்றன. இந்நூற்றாண்டில் பெண்களிடத்தில வித்தியாபிவிருத்தி மிக்கக்குறைவாகவிருந்தது. இந்நூற்றாண்டிலோ மிக்க அபிவிருத்தியாய் விட்டது. ஆனதினால் நாகரீகமாகிவிட்டது. பட்டணங்களிலும் நடை உடைபாவனைகள் மேற்றிசை சார்பாகவே விருத்தியாகின்றன. பழைய நாகரீகமிருந்தால் சிலவு மிக்கக்குறைவுபடும். நவீன நாகரீகத்தால் சிலவு அதிகரித்தது.

### மதம்.

இந்துமதத்திற்கு மற்ற மதங்களாலநேக சீர்கேடுகளுண்டாயின. இப்பொழுது இத்தேசத்தில் இந்துமதம், பௌத்தமதம், கிறிஸ்துமதம், துருஷ்கமதம், முதலியவைகளே இதில் கிறிஸ்துமதம், இந்நூற்றாண்டிலேயே இந்நாட்டில் பரவத்தொடங்கியது. ஆனால் ராஜமதமானதால் கொஞ்சமபிவிருத்தியாயிருக்கின்றன. ஆனால் மகம்மதியமதம் பரவும்பொழுது நமது தேசம் மிக்க வருத்தப்படுத்தப்பட்டது. கத்திக்குப்பயந்து, மகம்மதியரானவரநேகர். இப்போது கிறிஸ்துமதம் பரவி ஜனங்களை ஹிம்சிக்கவில்லை போதனைகளாலும் வேறுதந்திரங்களாலும், சேர்க்கிறார்கள். அதுவும் அரசர்களது சம்பந்தமேயில்லை. எம்மதத்தை யாண்டாலும், அரசர்கள் ஸமமாக இருத்தலால், தேசத்தில் கலகமேயில்லை. தற்காலத்தில் இந்துமதசாஸ்திரங்களைக் கூட ஆங்கிலபாஷையிற் சென்றதாலும் இம்மதத்தின் பெருமை உலகமெல்லாம் பரவியதாலும் பாதிரிகள் இந்துமதத்தை, தாவித்தாலும்



எந்த நாட்டாரும கப்புவதில்லை. நம்மவரிடத்தில் மதாசாரம் அநேகமாக ஒழிந்துவிட்டது. பேருக்குமாத்திரம் இந்துக்களென்று அழைக்கப்படுகிறோம நம்மதாசாரத்தை நடத்துவதாக அநேகர் நடிக்கிறார்கள். இப்பொழுது சிலவருஷங்களாக சிறிது நம்மதபுஸ்தகங்களை வாசிக்கத்தொடங்குகிறார்கள். அநேகமாக இந்துமதசாஸ்திரங்கள் மேற்றிசையிலும் படிக்கப்படுகிறது. நமது பகவத்கீதை செல்லாதவிடமில்லை. இலவாத பாக்ஷயில்லை ஈசுவரகிருபையால் மதாசாரமபிவிருத்தியாகவேண்டும்.

### தேவாலயங்கள்.

முற்காலத்திருந்தவர்களால் தேவாலயங்களைச் சரிவரப்பரிபாலனம் செய்துவந்தார்கள். ஏராளமான ஐவேஜியையும் ஏற்படுத்தினார்கள் உற்சவாதிகள் நடத்திவந்தார்கள். இக்காலத்திற் தென்தேசத்து தேவாலயங்களைத்தும் மடாதிபதிகள் கையிலகப்பட்டுக்கொண்டிருக்கிறது சுவாமி நிவேதனத்திற்குத்தாளம போடுகிறார் ஏதோ சிலதேவாலயங்கள் செவ்வையாய் விசாரிக்கப்படுகின்றன உத்தரதேசங்களில் எல்லோரும் பூஜைசெய்யக்கூடிய ஆலயங்கள் விமர்சையாய் நடக்கின்றன.

### மடாதிபதிகள்.

பூர்விகர்கள் நமது மதத்தை பாதுகாக்கும் பொருட்டு மடாதிபதிகளுக்கு சொத்துக்களை ஏற்படுத்தி அவர்களைக் குருவெனவும் கொண்டாடினார்கள். அவர்களிற் சிலர் போகத்தில் மூழ்கப்பொதுச் சொத்துக்களைத் தாசிக்கும் வேசிக்கும் வாரிக்கொடுத்து வியாதியால பீடிக்கப்பட்டும் தெரியாது வீழ்ந்து பிரமிக்கிறார்கள். அந்தோ! பரமேசுவரனேயவர்களை கடாக்ஷிக்கவேண்டும.

### அரசாக்ஷி.

இத்தேசத்தையாண்ட அரசர்களுக்குள் இப்பொழுது நம்மையாளும் ஸ்ரீ மான் எட்வர்ட் மஹாராஜா அவர்கள், செங்கோல் மெச்சத்தக்கதே இத்தேசமுழுதும் ஒரேஸமமாக, ஆளப்படுகின்றன கலகமேயில்லை. திருட்டுபயமொழிந்தது எங்குகண்டாலும் தந்தி, தபால்கள் போடப்பட்டிருக்கின்றன. ஒருவாரத்திற்குள் இத்தேசம் முழுதும் சுற்றிவரும்படி, ரயில போடப்பட்டிருக்கிறது. எங்குகண்டாலும் இந்திரபவனம் போலிருக்கிறது. நாகரீகம் மிக்க அபிவிருத்தியாயிருக்கிறது இவ்வரசாக்ஷியினுண்டான, நன்மைகள் பல, எங்கும் நிர்ப்பயமாய்ச் சஞ்சரிக்கலாம். வரிகள் சுமையாய் குடிகளின் தலைமேலிருந்தாலும் இவ்வரசாட்சியால் நம்மவருக்குக்கேடொன்றுமில்லை. மகம்மதிய வரசாட்சியில் நடந்த அக்கிரமங்களொன்றுமில்லை இவ்வரசனை நீடூழிவாழ்க.

# அத்துவைத ஸபா கும்பகோணம்.

(:o:)

இத்தேசத்தில் வழங்கும் மதங்களுக்குள் அநேக கோடிஜனங்கள் அவலம்பித்தமதம் அத்துவிதமே அது பரமஹம்ஸபரிவிராஜக ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளவர்களாலேயே ஸ்தாபிக்கப்பட்டது வேதார்த்தத்தை யதேஷ்டமாய் பாடாகச் சொல்லிக்கொண்டு இருந்த சாங்கியர், காணதர், பதசுபரர்; பௌத்தர், சைவர், வைணவர், முதலிய மதங்களனைத்தையும் கண்டித்து வேதத்தினுண்மை வெளியானது; நமது ஆசார்யமணியினனுக்கிரஹத்தினாலேயே அதன் பிறகு எவ்வளவோ இல்லாத மதங்கள் தோன்றியழிந்துவிட்டாலும், இரண்டு மதங்கள் நிலைத்து நிற்கின்றன. அவை அத்வைதம், விசிஷ்டாத்துவிதம், இவ்விரண்டுமே, அவ்வாதிகள் மிக்க ஐக்கியமாய் தங்கள் மதக்கோட்பாடுகளைப்பரிபாலனஞ்செய்துவருகிறார்கள். அவர்கள் ஆசார்யபக்தியிற் குறைவின்றி விக்கிரஹாருபமாக வைத்து உபாஸிப்பதுடன் அவர்கட்காக உத்ஸவமும கொண்டாடுகிறார்கள். அது மாத்திரமா? அம்மதப்பண்டிதர் கட்குதிருப்பதி முதலிய விடங்களில் பரீக்ஷை வைத்து சம்பாவனை செய்வதுடன் உபந்நியாசங்களும் நடத்துகிறார்கள். அத்துவைதிகளான நாமோ இவ்விஷயத்தைச்சிறிது சிந்தித்தேயில்லை. இமயமலை முதல் கன்னியாகுமரிவரையில், அளவிறந்த ஸ்ரீசங்கராசாரிய சிஷ்யர்களிருக்கிறார்கள். இதில் லக்ஷப்பிரபுக்களும் கோடிப்பிரபுக்களும் பலருண்டு இருந்துமென்ன, அவரவருண்டுடுத்துக்களிப்பதையே, பெருமையாய் நினைத்திருக்கிறார்கள். அத்துவைதசாஸ்திரங்கள் இத்தேசத்து ஸர்வபாஷைகளிலுமிருக்கிறது. இருந்துமென்ன படிப்பவரும் மிக்கக்குறைவு ஸர்வலோகதயாபரனான ஸ்ரீமதாசார்யாள் நம்மீது கருணையாக பிரஸ்தானத்திரயத்திற்கும் பாஷ்யமியற்றி, அதைப்படிக்கச் சக்தியற்ற மந்தாதிகாரிகட்கு ஏகச்லோகிமுதல ஸஹஸ்ரலோகிவரையில்பல்லாயிரக்கணக்கானஸ்லோகங்கள் பிரகரணரூபமாய் இயற்றியிருக்கிறார்கள். இவைகளைப்பார்ப்பவரும் மிக்கக்குறைவு உலகில் ஸகுணபிரம்மஸ்வரூபத்தை பிரதிபாதித்த ஆசார்யர்களநேகரிருப்பினும் உண்மையை வெளிப்படுத்திய காருண்ணிய மூர்த்தி நமது சங்கரமூர்த்தியே. இப்பொழுது சிலவருஷங்களாக கும்பகோணத்தில மகா-ஸ்ரீ அப்புசாஸ்திரிகள், முதலியோர் ஒருங்குகூடி அத்வைத சபை ஒன்று மாசிமாதத்தில் நடத்திவருகிறார்கள். அதில் இத்தேசத்திலிருக்கும் மகா-ஸ்ரீ கணபதி சாஸ்திரிகள், மகா-ஸ்ரீ ஹரிஹர சாஸ்திரிகள் முதலியோர் அத்தியக்ஷகராகவிருந்து அத்துவைத சாஸ்திர பண்டிதர்களைப்பரீக்ஷித்து அவரவர்கட்குத்தக்கவாறு பரிசளிக்கப்படுகிறது இப்பரீக்ஷை முதலிய காரியங்கள் கும்பகோணமடத்தில் நடக்கின்றன. சபை நடக்குங்காலத்தில் ஒவ்வொருநாளும் மிக்கப்பண்டிதர்களின் உபந்நியாசங்கள் நடக்கின்றன அத்தகைய உபந்நியாசங்கள் கேட்பதற்கு மிக்க அருமையாயிருக்கும், இவைகளனைத்தும் அவரவர்களால் சேர்க்கப்படும், சிறுதொகைகளால் நடத்தப்படுகின்றன இவைகளை நடத்தத்தக்க முதல் இல்லை. அதற்கென்றொரு கட்டிடமுமில்லை சபையென்ற ஞாபகத்திற்கு வேண்டிய அநேக சின்னங்கள் குறைவாகவே இருக்கின்றன. நம் மதத்திற் மிக்கப்பண்டிதர்களும், தனவான்களும், தரவான்களும், ஏராளமாயிருந்தும் அத்துவைதசபையை அபிவிருத்திசெய்து இது சாசுவதமாய் நடக்கும்படியாக முதல் ஏற்படுத்தி அச்சபையினின்றே அநேக உபந்நியாசிகளை ஆங்காங்கு உபந்நியசிக்கச்செய்யலாம், இச்சபையை ஸ்ரீபகவத்பாத ஜயந்தியின்போது நடத்தினால் பகவத்பாதாளுக்கு ஆராதன உத்ஸவமும் பூர்த்தியாகும், நமது மடாதிபதிகளும் இவ்விஷயத்தைக் கவனிப்பது மிக்கக் குறை வாயிருக்கிறது என்னசெய்வது அவர்களது! பரிவாரங்களை நம்பிக்கவே, அவர்களாற் சாத்தியமாகாமலிருக்க இவ்விஷயத்தைத் தவிரவிடலாமா? இப்பொழுது மடங்களில் விளங்கும் ஆசாரியர்கள் சகலாகம சதுரராக வந்திருக்கிறார்கள் அவர்களது ஆதரவி



னால், இச்சபை முன்னுக்குவரவேண்டும் அவர்களே இதை கைவிட்டால் மற்றவர்களெவ்வனம் பிரவர்த்திப்பார்கள் பெற்றபிள்ளையைத்தாயே கைவிடுவாளாயின, அப்பிள்ளையின் கதியென்ன அதுபோல் நமது பிரமவித்தையை பரிபாலனம் பண்ணத்தாய்போன்ற மடாதிபதிகள், கவனியாததால் அதோகதியை யடைந்திருக்கிறது மடங்களில் பண்டிதர்களின் சேர்க்கையே மிக்கக் குறைவாயிருக்கிறது இருப்பினும் ஸ்வயசலம் பாராட்டும், குருஷிமபரிதாபக வேஷதாரிகள் சிருங்ககிரி முதலிய சிலமடங்களில் தக்கபண்டிதர்களைப் பரிபாலனம் பண்ணுவதாகத்தெரிகிறது. அவர்களாற் கூடியமட்டும் மதபரிபாலனமும், செய்கிறார்களாம். அநேகமாக மடங்கட்காக வைத்திருக்கும், திரவியங்களனைத்தும் பரிவாரதேவதைகளின் பூஜைக்கே, போதாமலிருக்க மற்றவிஷயங்களை எப்படிகவனிக்கமுடியும், மடாதிபதிகாள்!

மடங்கட்கேற்பட்ட திரவியங்களனைத்தும் மதபரிபாலனத்திற்கென்றே ஏற்பட்டது, என்று உங்கள் ஞாபகத்திற் கெப்பொழுதாவதுமோ உங்களை ஆதியில் நமது குருமூர்த்தி எதற்காக ஏற்படுத்தினார்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவில்லையே, இன்னும் உங்களுடைய சிஷ்யர்களை வற்புறுத்தி வர்த்தனைகளை வாங்கிக்கொள்ளுகிறீர்களோ அவைகளை மதபரிபாலனத்திற் செலவழிக்கலாகாதா அந்தோ நமது மதம் போனசீர்கேட்டைப்பார்த்திருந்து மிக்கவருந்தலாகாதே என்னசெய்வது நம்மவர் தூரதிருஷ்டமே அத்துவைத சபையென இந்தியாதேசம் முழுமைக்குமொன்றே இருக்கிறது இதைச்சரிவரபரிபாலனம் பண்ணுவதற்கில்லையே இப்பொழுது நடத்திவரும் சீமான்கள் தைரியத்தைவிடாது விடாமுயற்சியுடன் நடத்துவதால் கூடியமட்டும் செவ்வனே நடந்து வருகின்றது இம்மஹான்கட்கு ஆயுளை ஈசுவரன் நீடித்து கொடுத்து அனுக்கிரஹிப்பாராக.

ஸ்ரீசங்கரபாதரேணு.

## சரீரம்.

மனிதர்கட்குச்சரீரம் ஒரு வீடுபோலிருக்கிறது ஒருவீட்டில் உள்ள ஸம்ஸாரங்களுஞ் சரீரத்திலிருக்கின்றன விசாரிக்குமளவில் மிக்கச்சம்ஸாரியான குடும்பமே இக்குடும்பம் எப்பொழுதும் தரித்திரத்திலேயே மூழ்கியிருக்கிறது தரித்திரமெனில் போகக்கூடியதில்லை அழியாத்தரித்திரமமைந்திருக்கிறது இதை எப்படிக்குடும்பமெலாம், கூறுவோம்.

இச்சரீரம் இரண்டுகால் நிறுத்தி அதன் பேரில் வீடுபோல் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வீடு சலிக்கக்கூடியது. வீட்டில் ஜன்னல்களிருப்பதுபோல காது கண் முதலியவைகளிருக்கின்றன. சாக்கடைகளைப்போல் மலத்துவாராதிகளிருக்கின்றன. கூரையைப்போல் தோலும் மயிர்களும் வளர்கின்றன, இவ்வீட்டிற்கு தினந்தோறும் பழுது பார்க்கவேண்டும். ஏனெனில் ஒரு நாளுணவில்லையானால், இளைத்துவிடும். கண் பஞ்சடையும். காது கேளாது. கால் சோர்ந்து விடும், ஆனதால் தரித்திரமன்றோ,

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றா லேலா யொருநாளுமென்னோ
வறியா யிடும்பை கூரென் வயிறே யுன்
னோடு வாழ்தலரிது.

என்று கூறியிருக்கிறாரன்றோ. ஆனதால் இவ்வீட்டை ஒவ்வொருநாளும் பழுது பார்த்துவரவேண்டும். அதிற் குடியிருப்பவர்கள் யாரெனில் ஜீவனென்ற மஹாப்பிரபு இப்பிரபு எப்பொழுதும் ஸ்திரீப்பிரியர். இடைவிடாது தனது மனைவியை பிரியாமலே இருப்பார். மனையாளிட்டதே இவருக்குச் சட்டம். அவள் காலாலிட்டதை தலையால் வணங்கிக்கேட்டு கையாற் செய்வார். இவரை அவர் மனைவி, மோஹமென்னும் மருந்தைக் கொடுத்து தன் வசப்படுத்திக் கொண்டிருக்கிறாள். அவள் எப்பொழுதும் காம வெறிகொண்ட காதகி. அவள் பெயரைச் சொன்னால் உலகெலாம் நடுங்கும், அவளாலேயே உலகமனைத்தும் மயக்கப்படுகின்றன. அச்சீமாட்டியாரெனில், மனோவதியே, அவள் தனக்காக மூன்று தாதிகளை வைத்துக்கொண்டிருக்கிறாள். அவர்களைக்கொண்டு கணவனுக்கும் தனக்கும் வேண்டிய சுகங்களைச் செய்துவைக்கிறாள். அவர்கள் யாரெனின் புத்தி, சித்தம், அகங்காரம். இக்குடும்பத்திற் குழைப்பதற்கே இவர்கள் அடிமைப்பட்டிருக்கிறார்கள். மனோவதி என்னும் ராணி தன் நினைத்த காரியத்தை உடனே புத்தியிடத்துக் கூறுவாள். அவள் சித்தத்தினிடத்திற் கூறுவாள், அகம்பாவமும் அதையநுமோதிப்பான் ஒவ்வொரு நிமிஷமும் தனது கணவனோடு சுகிக்கத்தக்க முயற்சியையே தேடுவாள். எதைக் கண்டாலும் தனக்குவேண்டுமென்று ஆசைப்படுவாள், அதைச் சம்பாதிப்பதற்கு கணவனைத் தூண்டுவாள் அவர் முடிக்காத பக்ஷத்தில் அவரை பலவழியிலும் மலைத்திடுமாறிருப்பாள். அவள் எப்போதும் கணவன் சொற்படி நடக்கறியாள் எப்பொழுதும் கணவனைத் தனது சொற்படி நடத்துவாள் நடக்காவிட்டால் தாதிகளைக்கொண்டு இம்சிக்கச் செய்வாள், அவளுக்கு பத்து புத்திரர்களுண்டு. அவர்களே கண், காது, மூக்கு, நாக்கு, துவக்கு, கை, கால் முதலியவைகளே. அவர்களை யொருபோதும் தனது கணவன் சொற்படிக் கேட்க விடுவதில்லை, எப்பொழுதும் தனது புத்திரர்களை தனது சுகத்திற்குழைக்கும்படி செய்துகொண்டிருக்கிறாள். இப்படியே சரீரமாகிய வீட்டை இடைவிடாது பரிபாலனம் பண்ணிவருகிறாள், ஒருசரீரத்திற்குப் பழுது வந்தால் தனது பரிவாரங்களோடு மற்றொரு சரீரத்திற்குச் சென்று விடுவாள். தனது புத்திரர்களை தனது சுகத்தின்பொருட்டு வெளியிலிருந்து கொண்டுவரும்படி செய்வாள். அவைகளொவ்வொன்றையும் கணவனோடு சேர்ந்து தானும் புசிப்பாள். அவரொன்றைக்கேனும் இவளிடத்தில் ரமிக்காமலிருக்கக் கண்டால் தனது புத்திரர்களை ஏவி



விட்டு அவர் மறுபடியும் தன்னிடத்தில் ரமிக்கும் வரையில் இம்சிக்கச் செய்வாள். அவளைப் போல் பாதகி ஓரிடத்திலுமில்லை. அவள் நெஞ்சழுத்தம் ஒருவருக்கேனுமில்லை. ஈசுவரனையுமவள் மதியாள் ஆகாசத்திற் பந்துவிட்டு இந்திர ஜாலவித்தைகளையெல்லாம் செய்வாள். வேசிகளைப்போல் கணவனைப் பலமுறை யவனையாகக் கூறுவாள். அந்தோ அவள்வசப்பட்டுழலாத ஜீவபிராணிகளில்லை. எக்காலத்தும் மனோவதியின் மயக்கத்தால் மாண்டவரனேகர். அவள் ஒவ்வொரு விஷயங்களிலும் ஆசையோடு பார்த்துக்கொண்டிருப்பாள். தனது கணவனது ஐசுவரியத்தை யெல்லாமொழித்து அவரை வெளியிற் கிளம்பவொட்டாமல் அந்தப்புரத்தை விட்டகலாமல் காவல் வைத்திருக்கிறாள் அவளிடத்தில் ஐந்து வீரர்களுண்டு அவர்களாலேயே இக்கிரகம் காக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அரண்மனைபோன்ற பெரிய வீட்டின் நவத்துவாரங்களிலுமிருந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாரெனில், பிராணன், வியானன், அபானன், உதானன் இவர்களே இவர்களிடத்தில், நாகன் கூர்மன் தேவதத்தன் முதலியோர் பணிவிடை செய்கிறார்கள். மனோவதியென்னும் ராணியானவள் ஹிருதயமென்னும் அந்தப்புரத்திலிருந்து புத்தி முதலியோர் கைகால் பிடிக்க தனது கணவனோடு கொஞ்சிக் குலாவிக்கொண்டிருப்பாள்; பிராணனென்னும் சேவகன் எப்பொழுதும் ஜாக்கிரதையாய் அரண்மனைக்கபாயம் வாராமற் காப்பாற்றுகிறான். அபானனென்போன் அன்னாசயத்திலிருந்து பாகாதிகளைச் செய்கிறான் உதானன் என்போன் ஆகாராதிகளை உள்ளே செலுத்துகிறான். ஸமானன் என்பான் அவர்கட்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கிறான். வியானன் இவ்வரண்மனை முழுவதும் சுற்றிக்கொண்டேயிருக்கிறான், இவளுடைய பத்துப்புத்திரர்களும் அவர்கள் தங்களுக்குள்ள வேலைகளைச் செய்துவருகிறார்கள், எல்லோரும் தனது மாதாவினிடத்தில் மிக்கப் பிரியமுள்ளவர்கள். அவரவர்கட்டு வேலையாதெனின் காது தனது மாதாவுக்கு வெளியிலிருந்து சொல்லுபவர்களுடைய வாக்கியங்களைக் கேட்டுக் கூறுகிறான், கண் வெளியிலிருக்கும் பதார்த்தங்களை பார்த்து அம்மாவுக்குத் தெரிவிக்கிறான். மூக்கு அம்மாவுக்கு உயர்ந்த வாசனைசாமான்களை கொண்டுபோய்க்கொடுக்கிறான். துவக்கு தன் கிரகத்திற்கு வந்தவர்களை மதித்து உபசரிக்கிறான். நாக்கு தனது மாதாவிற்கு ருசியான சாமான்களைக் கொண்டுபோய்க் கொடுக்கிறான். கால் தனது மாதா நினைத்தவிடத்திற்கு வீட்டையே தூக்கிக்கொண்டுபோகிறான். கை தனது மாதாவிற்கு வேண்டிய சாமான்களை கொண்டுபோய்க் கொடுக்கிறான் [illegible] தனது மாதா [illegible] பெருக்குகிறான். வாயு வீட்டின் வெளிப்புறத்தில் கெட்ட சாமான்களை பொறுக்கித்தள்ளுகிறான் உபஸ்தம் தனது மாதாவிற்கு ஆனந்தத்தை யடிக்கடி யுண்டுபண்ணுகிறான் இவள் தனது புத்திரர்கள் மிக்க ஜயமாகக் குடும்பவேலைகளை யொத்து

மையாகச் செய்யும்படியாகச் சிக்ஷித்திருக்கிறாள். அந்தோ! இந்த ராக்ஷஸிவசப்பட்டு இப்பிரபு திண்டாடுகிறான். அவர் என்னசெய்வார். ஒரு நிமிஷம் விலகவெண்ணினால் நையப்புடைக்கிறாள். சிலசமயம் தனக்குக் களைப்புவருமாயின் புத்திரர்களை யழைத்துக்கொண்டு தாதிகளுடன்கூட குகையிலொதுங்கி விடுவாள். இவளை எப்படியாவது தன் வசப்படுத்தமுயன்றும் தன்னாலாகாமல் தவிக்கிறார். இவளைச்சிலர் தன் வசப்படுத்திச் சுதந்திரமாகவுமிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டவ்வழி நடப்போமென போகவெண்ணினால் அதைப்பலவழியாலும் தடுத்து விடுகிறாள். ஆ! ஆ! இக்காதகியின் கடுமை சகிக்கப்பாலதோ! இவளிடத்தில் காமக்குரோதலோப மோஹமென்னும் ராக்ஷஸகணங்களிருக்கின்றன. அவைகளாலேயே இவ்வுலகத்தையும் வெல்லுகிறாள். எவ்வளவோ மகரிஷிகளும் இவளைச் செயிக்கமுடியாமல் வருத்தமடைந்தார்கள். இவளுக்குப் பரமேசுவரனும் லக்ஷியமில்லை. ஏதோ ஒருவரிருவர் இவளது மாயையிலிருந்து விடுபட்டாலும் அநேகர் அலைந்துவிட்டார்கள். இந்த ராக்ஷஸியின் குடித்தனத்தை நினைக்க நினைக்க பயத்தைக் கொடுக்கின்றது. இவள் ஒரு நிமிஷத்தை யுகமாக்குவாள். யுகத்தை நிமிஷமாக்குவாள். ஒரு நொடியில் வெகுதூரஞ்செல்லுவாள், இவள் வல்லமையை நம்மாற் கூறவொண்ணாது. ஆனால் இவளை எவ்விதத்திலும் வசப்படுத்தலாமென அநேகர் யோஜிக்கிறார்கள் அதற்காகவே வேதசாஸ்திரங்களுண்டாயிருக்கின்றன. அதற்காகவே துறவிகளெத்தனஞ் செய்கிறார்கள். அதற்காகவே தீர்த்தயாத்திரை செய்கிறார்கள். அதற்காகவே தேவாலயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்காகவே கண்மூடிக் குகைகளில் தபசு செய்கிறார்கள். எங்குசென்றாலும் இவளுடைய வார்த்தையே கேட்கப்படுகிறது. இவளை யடக்கிவிட்டால் நாம் சுதந்தரராய் மோக்ஷமடைந்து விடலாம். மனமடங்கல் மதியடங்கும் மதியடங்கில் மோனமே கூடும். அம்மௌனமே மோக்ஷமென்பது அம்மோக்ஷமே இந்த ராக்ஷஸியின் பந்தத்தினின்று விடுதலை. ஆனதால் இம்மகாபந்தத்தினின்று விடுதலையடைய பெருங்கருணைத்தடங்கடலாகியபரம பதியைப்பணிவாம்.

என்னாளு மூடலிலே யுயிரா னதைப்போலிரு
க்கவில்லையோ மனமேதனு
மியானுமென்னட்பாம் பிராணனுமெமைச்சடமெ
தென்றனைச் சித்தென்றுமே
யங்காளிவெவனோ பிரித்தானதைக்கேட்ட
வன்று முதலின்றவரையு
மறியாயமா வெமையடக்கிக் குறக்கேயடந்தாக
பண்ணி யெங்கண்முன்னாக
நீயென்ன கேட்டை கொண்டாயென்று
மூடமனமிகவுபேச



மூண்டெடரியு மனைவிட்ட மெழுகாயுனக்குருகண்
முறைமையோ பதிறையிரந்
சொன்னதுவு நின்னருளிரங்கவிலையே
வினிச்சுகம் வருவதெப்படி சொலாய்
சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே.

ஸ்ரீ சங்கரபாதரேணு.

# பரமஹம்ஸ ஸதாசிவேந்திரர்.

இம்மஹானது ஜன்மபூமியை யவ்வளவு நிர்த்தாரணமாகச் சொல்லமுடியாதாயினும் சிலர் சொல்லுவதைக்கொண்டாராய்ந்தால், கும்பகோணத்திற் கடுத்த திருவிசலூர் என்று தெரிகிறது மிக்கபண்டிதபரம்பரையிலுதித்தவர் சுவாமிகளவாளுடைய பாலியப்பருவத்திலேயே ஸமஸ்கிருதத்தில் மிக்கப்பாண்டித்தியத்தையும் அக்காலத்தில் ராஜபாஷையிலிருந்த ஆந்திரத்தையும் செவ்வையாய் கற்றிருந்தார்கள். இவர் ஓர் மஹாபண்டிதரின் புத்திரர் அரசன் இவருடைய பாண்டித்தியத்தைக்கண்டு [illegible] வித்வானாகவைத்துக் கொள்ளத் தன்னால் கூடியமட்டும் பிரயாசைப்பட்டும் முடியவில்லை பாலியம் முதல விரக்திமேற்பட்டு எப்பொழுதும் ஏகாந்தத்தில் [illegible] வழக்கமாம் ஒருவரோடும் அதிகமாகப்பேசுவதில்லையாம் எவரைக்கண்டாலும் மிக்ககாருண்ணிய திருஷ்டியாக நோக்குவது வழக்கமாம் தாம் துறவியாய் வெளிக்கிளம்பவேண்டுமென்று மனத்திலிருப்பினும் தனது தாய் தகப்பனது உத்திரவைப்பெற்று செல்லவேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தார். ஒருநாள் தாய் இவர் ஒன்றிலும் பிரவிருத்தியாதுகண்டு சிறுவன் கற்றகல்வியை வீணாக்குவதிற்பயனென்ன அரசனது ஸபைக்குச்செல்க என்றுரைத்தாள் அதைக்கேட்டயண்ணல் அம்ம அங்குபோம் நான் செய்யவேண்டுவதொன்றுமில்லை. இவ்வாழ்க்கை நீர்க்குமிழிபோல் நிமிஷத்திலொழிந்துவிடும் ஆயுள் சூரியனது போக்குவரத்தால் சென்று கொண்டேயிருக்கிறது ஒவ்வொருவரும் தினந்தோறும் செய்தகாரித்தையே செய்துகொண்டிருக்கிறார்கள் நோக்குங்கால் ஜன்மமெடுத்தது முபாலியம், கௌமாரம், யௌவனம், வார்திக்கியம், ஜராவியத்து வியாதி முதலியவைகள் ஒவ்வொன்றாகவந்து அவ்வப்பீடைகளைச் செய்கின்றன. இவைகளனைத்தும் முக்கமொன்றமிருந்தும் சர்வஜனங்களும் மோஹமெனும் பைத்தி

யம் பிடித்தலேகிருர்கள் அந்தோ இத்துக்கஜன்மத்தை இன்றெயொழி
க்கவழிதேடவேண்டும் தந்தைதாய் தாமே இவையனைத்தும் சாதை
க்கூட்டமன்றோ என்று அநேக விதமாக வைராக்கியமாக உத்தாமு
ரைத்தனராம் அதைக்கேட்டதாய் தந்தையிடத்துச்கூற அவர்விவேகி
யானதால், பாராட்டாது இருந்தனராம் இப்படிச்சிலநாள் செல்ல ஒரு
நாள் நமது சுவாமிமௌனமாய் தியானத்திலுட்கார்ந்திருக்க அதைக்
கண்டதாய் குழந்தாய் இங்ஙனமிருப்பதைப் பார்க்கிலும் சந்நியாசம்
பண்ணிக் கொள்ளலாமென்று வேடிக்கையாககூறினுள். அதைக்கே
ட்ட எம் குருமூர்த்தி சமயம் வாய்த்ததெனஆம் அங்ஙனமே, அதற்
கேதுர்த்திருந்தேனெனவெகுஆனந்தத்துடன்பிரைஷோச்சாரணஞ்செ
ய்து எக்யோபவீதத்தையும் வஸ்திரங்களையு மெறிந்துவிட்டு அவதூ
தாய்க்கிளம்பிவிட்டார் அதைக்கண்டதாயும் தகப்பனும் மிக்கவருந்
தியழைத்தும் வாராமல் மாதாவினுஞ்ஞையை எதிர்பார்த்திருந்தேன்,
அடைந்தேன், இனிச்செல்வேன், என்று வேறுகிராமங்கட்குச்சென்
றனர் அப்பொழுது கண்டவரனைவரும் நவீனசுகர்தாம் வந்தனரோ
வென மருண்டு உபசாரங்களைச் செய்தார்கள் பிறகு குருவைநாடி
அநேக விடங்கள் சென்றும் கிட்டாது, பிறகு பரமேசுவரனே திருவு
ருக்கொண்டெழுந்ததுபோல் அவதரித்திருந்த ஸ்ரீமத் பரமசிவேந்திர
சுவாமிகள்வாளிடத்திற்சென்று பிரார்த்திக்க இவரது பரிபக்குவம்
கண்டு, மிக்கமகிழ்ச்சியுடன் ஏகாக்ஷரத்தையுபதேசித்து வெகுநாட்
சாயைபோல் தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டிருந்தார்கள்,
சதாசிவேந்திர சுவாமிகள்வாளு[illegible]வாக்கருமையானதால் அவர்
கள் ஆத்மவித்யா விலா[illegible]வைராஸமஞ்சரி முதலிய அருமையான
[illegible]செய்தது குருஸந்நிதானத்தில் கூறுவது வழக்கமாம்,
ஒருநாள் குருஸ்வாமிகள் வேடிக்கையாக உன் வாயடையாதவென்றார்
கள் அன்றுமுதல் நமது வள்ளல் மௌனமாக சமாதியிலேயே இருந்
துவிட்டார் சமாதியிற்கடந்துவிட்டதும் உன்மத்தம் பிடித்தவர்போல்
வெளியில் ஸஞ்சரிக்கத்தொடங்கினர் இங்ஙனம் ஸஞ்சரித்துக்கொண்டி
ருக்கும் காலத்தில் சிலகர்மிட பிராம்மணர்கள் குருவினிடத்திற் செ
ன்று உமது சிஷ்யருக்குப்பயித்தியம் பிடித்ததென்றார்களாம் அதை
க்கேட்டகுரு அப்பயித்தியம் எனக்குவரவில்லையே எனதுக்கப்பட்ட
னராம் அதன் தாத்பரியம் யாதெனில் அத்தகையவரிஷ்டபதவி தனக்
குவரவில்லையே என்று வருந்தினர் பிறகு நமது சுவாமி வெகு இடங்
களில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தனர் இவரது மஹிமையைக்கண்டு
ஒரு பிரும்மசாரிச்சிறுவன் இடைவிடாது பக்திசெய்துகொண்டு வந்
தார் அதைக்கண்ட எம்பெருமான் அவரது மனோபரிபக்குவம் போ
தத்திற் குறியதாகவில்லையெனக்கண்டு அவரது நாவை நீட்டும்படி
செய்து சில அக்ஷரங்களை எழுதினார்களாம், அவர் உடனே ஸம்ஸ்கிரு
தம் தெலுங்கு இவ்விரண்டிலும் பஹுவித்வானாக கவனஞ்செய்யும்



சக்தியைப்படைந்தான் இப்பொழுது அப்பிராம்மணரது பரம்பரையுமி
ருக்கிறதாக கேள்வி பிறகு நமது சுவாமிகள் புதுக்கோட்டைப்பக்க
முள்ளவனத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் மாட்டுக்காரப்பயல்களுடன்
கூடகாடுகளில உட்கார்ந்திருப்பது வழக்கமாம் அங்கிருக்கும் மாடுக
ளனைத்தும் இவரைக்கண்டால் மகாபிரேமையாய் நாவினல் நக்குமாம்
ஏனெனில் அகங்கார மொழிந்தவரானதால் ஸர்வஜீவர்களிடத்திலும்
காருண்ணியம பெருத்திருப்பதால் அவைகளுமிவரிடத்தில் அன்பை
க்காட்டுகின்றன. ஒருநாள் சிறுவர்கள் இவரைக் குளத்திலழுத்திவி
ட்டார்களாம் இவர் அங்ஙனமே மூன்று நாள் அங்கேயே இருந்தன
ராம் ஒருக்கால் ஓர் புலிவேகமாய் பாயவந்தும் இவரிடத்தில் வந்தவு
டன் வாலையாட்டிக்கொண்டு நின்றதாம் இங்ஙமநேகாற்புதங்களுடன்
அங்கிருப்பதைக் கேழ்விபுற்றவரசன் இவரைத் தரிசிக்கப்பலமுறை
முயன்றும் கூடாமல் ஒருநாள் தரிசனம் கொடுத்தனராம் அன்று
அவன் இவரைக்கண்டதும் பரவசமாய்க் கீழே விழ்ந்து வணங்கி தன
தரண்மனைக்கு வரவேண்டுமென்று வருந்தியழைக்க வரச்சம்மதப்பட
வில்லையாம். அதுகண்டவரசன் ஓர் பல்லக்கிற் தூக்கிவைத்து இரு
புறத்துங்கதவையும் தாளிட்டு பல்லக்கை நடத்திதானும் கால் நடை
யாக அதைப்பிடித்துச்சென்று அரண்மனை வாயிலில் நின்று கதவை
திறந்தால் எம்பெருமானைக்காணும் அரசன் மயங்கிபிறகுவெகுகாலம
கழித்து ஓர் முறை தெரிசனம் பெற்று, தனக்குப்புத்திரனில்லாக்
குறையைச் சொல்லிக்கொண்டார் அதைக்கேட்டவண்ணல் கொஞ்சம்
நவநீதம் கொண்டுவரும்படிசெய்து அதை அரசனது மனைவியை தின்
னச்செய்தனராம் உடனே கர்ப்பமுண்டாகி ஓர் புத்திரனைப்பெற்ருள்
அவரை நவநீதத்தொண்டமான் என்று கூறுவது. பிறகு சுவாமிகள்
அரசனுக்கு நவராத்திரி காலங்களில் பண்டிதர்கட்கு சம்மான மளிக்
கும்படியாகவும் அரண்மனையில் தக்ஷிணமூர்த்தி பிரதிஷ்டைசெய்து
பூஜிக்கும்படி ஆஞ்ஞையளித்ததுடன் ஒரு நாளைக்குறிப்பிட்டு அன்று
தான் நெரூர் கிராமத்தில் ஸமாதி யடையப்போகிறதாகவும் அச்சமய
த்தில் வடக்கேயிருந்தொருவன் ஒருலிங்கம் கொண்டுவருவான் அதை
தனது சமாதியின் புறத்தில் பிரதிஷ்டை செய்து பூஜையை நடத்தும்
படியாகவும் சொல்லிச்சென்றனர் இப்பொழுது அங்கு இன்றும் அவர்
வந்து நின்றவிடத்திலிருந்த பாதரேணுவை பூஜித்துவருகிறார்கள்.
பிறகு கரூர் பக்கத்தில் ஸஞ்சரிக்கும் காலத்தில் ஒருநாள் காவிரியில்
வாய்க்கால் வெட்டினார்களாம் அதற்குள் சிறிது ரத்தம் தென்பட்ட

தாம் அதைப்பிரித்துப்பார்க்க சுவாமி எழுந்து சென்றனராம் பிறகு ஒருநாள் ராத்திரியில் ஒரு கனத்தின் வழியாகவருங்காலத்தில் ஓர் செற குழியவில் போய் சாய்ந்தனராம் அது கண்டு தலையாரிகள் தடியை யோங்க ஓங்கியபடியே மறுநாள் பத்து மணிவரையில் நின்றார்களாம் பிறகு மற்றவர்கள் வந்து சுவாமியைப்பிரார்த்திக்க சென்றனராம் பிறகு அவர்களும் கைசுவாதீனப்பட்டுச் சென்றார்களாம். ஒருநாள் சாலையில் ஸஞ்சரிக்கும் காலத்தில் கிராமத்தின் தலையாரிகள் தண்டு சைன்னியங்கட்கு விறகு கொண்டுபோக ஒரு ஆள் குறைய இவர்தலையில் ஓர் சுமையைவைத்து கையில் கயிறைக்கட்டி அழைத்துக்கொண்டு சென்றார்களாம் எல்லோரும் ஓரிடத்தில் விறகு சுமையைப்போட்டுவிட்டு இவரையும் போடும்படிகூற அங்ஙனமே போடவும் விறகனைத்தும் தீபிடித்தெரிந்துவிட்டதாய் இத்தகைய அநேக மஹிமைகளை செய்துகொண்டு சஞ்சரித்து தான் குறிப்பிட்ட காலத்தில் ஒரூர் கிராமத்திற்கு வந்து சேர்ந்து ஸமாதியிலுட்கார்ந்தார்களாம் உடனே சுவாஸமும் நின்றுவிட்டது வடக்குதிசையிலிருந்து ஒரு பிராம்மணன் திருப்பதையின் சரணத்தைக்கொண்டுவர அதையவாள் கூறியபடி பிரதிஷ்டைசெய்து ஆராதனை நடந்துவருகின்றது அவர்களுடைய குருசுவாமிக்கு திருவெண்காட்டில் சமாதி இருக்கிறது அதிலும் ஓர் பெரிய தேவாலயம் கட்டப்பட்டிருக்கிறது இப்பொழுது கும்பகோணம் ஸ்ரீமடம் *விசாரணையி லிருக்கிறதெனக்கேழ்வி நாம் பார்த்த காலத்தில் மிக்க ஜீர்ணமாயும் கோவிலுக்குள் கப்பலுக்கேற்றக்கூடிய வௌவால் புழுக்கையுமிருந்தது சுவாமிக்குவிளக்கு எப்பொழுதாவது ஏற்றுவது வழக்கமாம் அதற்கு கொஞ்சம் பூஸ்திதியுமிருக்கிறதாம் நிற்க செரூரில் புதுக்கோட்டை அரண்மனை விசாரணையில் பூஜை நடந்துவருகின்றது இத்தகைய மகான்களுடைய அவதாரத்தினாலேயே இப்பொழுது இன்னும் நமது நாட்டில் மஹிமைகள் குறையாமலிருக்கின்றன இவர்களது காலம் சுமார் 200-வருஷத்திற்குள்ளாகவே இருக்குமென்று தோன்றுகிறது ஏதோ நாம் கர்ணபரம்பரையாய் கேட்டதை எழுதினோம் குற்றங்குறையிருப்பின் ஆன்றோர் தெரிவிப்பின் சிரசால்வஹிப்பேன் சுபம்.

ஸ்ரீ சங்கரபாதரேணு.

14S311
811,N06
M85

# ஆரியன் பத்திரிகை.

ஆரியன் பத்திரிகை என்ற சஞ்சிகை நாளது 1906ஹு ஆகஸ்டுமீ முதல் மாதந்தோறும் தமிழில் பிரசுரஞ்செய்யப்படுகிறது. இதில் அநேக மதசம்பந்தமான தத்துவ விஷயங்கள் அடங்கிருக்கும் இம்மாதிரியான சஞ்சிகை இப்போது தமிழ் நூல்களிலில்லாமைப்பற்றி அதன் பிரசுரம் அவசியமென்பதை யுணர்ந்து வெளிப்படுத்தலாயிற்று. அநேக மகா வித்வான்கள் மதசம்பந்தமான தத்துவார்த்தவிஷயங்களை இதில் வரைந்து வருகிறார்கள்.

சாமான்னிய ஏழைகள் கூட சுலபமாய் வாங்கி வாசித்துப்பயனை யடையுமாறு இந்தியாவிற்கு வெகுசொற்பமாகிய வருடசந்தா ரூ 1—6—0ம் அந்நியதேசங்களுக்கு ரூ 2—8—0மாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆறு மாதத்திற்கு ரூ 1—0—0 3-மாதத்திற்கு அணா 10 தனி காப்பி அணா 4 வீதம் சார்ஜ் செய்யப்படும் அட்வான்ஸாக சந்தாசெலுத்தப்படவேண்டும் இச்சஞ்சிகை நிலைபெற்று ஒழுங்காகபெறும்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்து தருந்த கனதனப்பிரபுக்களின் ஆதரணையைவகித்து நடத்தப்படுகிறதென்பதை சஞ்சிகையில் முறையே காணலாகும் இதில் கையெழுத்துப்போடப்பட்டிருக்கும் உபந்நியாசம முதலியவைகளுக்கு பத்திராதிபர் ஜவாப்தாரியல்ல.

இதில் தங்களைப் பிராயங்களையும் உபந்நியாசங்களையும் எழுதியனுப்பவிரும்புவோர் தெளிவாயும் நேர்த்தியாயும் கடிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பவேண்டும் பிரதி மாதத்திலும் 9-ம் தேதிக்குள் அனுப்பப்பட்ட உபந்நியாசங்கள் தான் அடுத்தமாதத்தில் பிரசுரம் செய்யப்படும்.

ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விபரங்களறிய விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்தாருக்கெழுதிக்கொள்ளலாம். மணியாடர் முதலியவைகள் அடியிற்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பப்படவேண்டும் பத்திரிகை கிடைக்காதவர்கள் உடனே தெரிவித்துக்கொள்ளவேண்டும்

பழயகாப்பிகள் இருந்தால் காப்பி 1க்கு 6 அணா வீதம் கொடுக்கப்படும் சந்தாசெலுத்தும் தேதிமுதல் காப்பிகள் அனுப்பப்படும் மாதிரி வேண்டுபவர்கள் 4 அணாவுக்கு ஸ்டாம்ப் அனுப்பிபெற்றுக்கொள்ளலாம்.

C. S. இராதாகிருஷ்ணய்யர்,
ஆரியன் ஆபீஸ், கும்பகோணம்.

**மாற்றுப்பத்திரிகள்.**

The Hindu, The Peoples-guardien, The Aryan Messenger, The Siddantha Deebica, சுதேசமித்திரன் சுதேசி இந்துநேசன் திராவிடதீபம் விஜயவிகடன் விகடதூதன் இந்திய மித்திரன் தேசாபிமானி பிரம்மஞானபத்திரிகை, தமிழகம் கோவைஜனாபிமானி கலாநிதி இந்தியன் லாசெஜட் தமிழ்மாது.